janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 87 | 2024 டிசம்பர் 29 - 2025 ஜனவரி 04 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 39




## வர்க்கப் போராட்ட, தியாக வரலாற்றில் புடம் போடப்பட்ட

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு

## ★ இரா.நல்லகண்ணு நூற்றாண்டு பிறந்தநாள்

## ★ கே.டி.கே.தங்கமணி 23 ஆம் ஆண்டு நினைவுநாள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தோழமைக்கட்சித் தலைவர்கள் வாழ்த்து

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா, விடுதலைப் போராட்ட வீரர், தகைசால் தமிழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூறாவது பிறந்தநாள் விழா 26.12.2024 அன்று கொண்டாடப்பட்டது. தோழர் கே.டி.கே.தங்கமணியின் 25வது நினைவு நாளும் கடைபிடிக்கப்பட்டது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னையில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் நடைபெற்ற விழாவிற்கு, கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமை தாங்கினார். முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஜி.ராமகிருஷ்ணன், டி.கே.ரங்கராஜன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) மாநிலச் செயலாளர் பழ,ஆசைத்தம்பி, மனிதநேய மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் அப்துல்சமது எம்.எல்.ஏ., அமைச்சர்கள் கே.என்.நேரு, பொன்முடி, சேகர்பாபு மற்றும் திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்பி., திமுக செய்தித்தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் அப்துல் ரகுமான், ஆம்ஆத்மி கட்சியின் மாநிலத் தலைவர் வசீகரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.எம்.மூர்த்தி, சி.எச். வெங்கடாசலம், தொழிற்சங்கத் தலைவர் ஆர்.குசேலர், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிர்வாக இயக்குநர் க.சந்தானம், மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி தலைவர் கோவை ஈஸ்வரன், மக்கள் நீதி மையத்தின் சார்பாக செந்தில் ஆறுமுகம், ஐஜேகே பாரிவேந்தர், தொழிலதிபர் வி.ஜி.சந்தோசம், முன்னாள் மேயர் சைதை துரைசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வெங்கடேஷ் வேம்புலி, எஸ்.கே.சிவா, பா.கருணாநிதி, ராஜ்குமார், கஜேந்திரன், கார்த்திக் உட்பட திரளான தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஜனசக்தி தயாரித்துள்ள இந்தியக்

தொடர்ச்சி 23 ஆம் பக்கம்





கட்சிக் கடிதம்

# சிறப்பிதழுக்குப் பங்களித்த அனைவருக்கும் நன்றி!



போர்க்குணமிக்க தோழர்களே!

**இன்று (26.12.2024 ) உங்களின் கரங்களில் தவழும் ஜனசக்தி சிறப்பிதழ், கட்சியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜனசக்தி தோழர்களால் தயாரிக்கப்பட்டதாகும்.**

நாட்டின் வரலாற்றையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றையும் பிரித்துப் பார்க்க முடியாது.

கிழக்கிந்தியகம்பெனிநாடுபிடிக்கவந்ததல்ல, மாறாக வியாபாரப் பெருநோக்கத்துடன் வந்தனர். தங்களது வியாபாரத்தைப் பன்மடங்கு பெருக்கினர். வியாபாரப் பெருக்கத்திற்கு ஏற்ப, நல்ல லாப வேட்டையும் ஆடினர்.

இங்கிலாந்து ஏகாதிபத்தியம் கழுகுக் கண் கொண்டு இதனைக் கவனித்தது. ஒரு கம்பெனி பெறும் லாபத்தை விட, பன்மடங்கு லாபச் சுருட்டலை மனதிற்குக் கொண்டு ஒட்டுமொத்த இந்தியாவையும் அபகரிக்க, வெள்ளை ஏகாதிபத்தியம் வஞ்சக வலை விரித்தது.

நாட்டில் மன்னர்களாக, குறுநில மன்னர்களாக, நிலப் பிரபுக்களாக, மடாதிபதிகளாக நாட்டு மக்களை அடக்கியும், ஒடுக்கியும் சுரண்டிக் கொழுத்திட்ட இக்கூட்டம் வெள்ளை ஏகாதிபத்திய வரவை மனம் மகிழ்ந்து வரவேற்று மகிழ்ந்தது.

வெள்ளையர்களுக்கு நாடு முழுவதும் வேண்டும். இவர்களுக்கோ தங்கள் ஆதிக்கமும், சுரண்டலும் தொடர வேண்டும்.

வெள்ளையர்கள் நாடு முழுவதும் உள்ள மக்களைத் தங்களின் அடிமையாக்கினார்கள். அவர்களின் அடிமைத்தனத்தை இவர்களும் ஆதரித்து, தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களைத் தங்களின் அடிமை ஆக்கிக் கொண்டார்கள்.

ஒட்டுமொத்த நாடும் வெள்ளையர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. அவர்களது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள ராணுவம், காவல்துறை, நீதிமன்றம் என உருவாக்கிக் கொண்டார்கள்.

ஜமீன்தார்களும், பண்ணையார்களும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ள தங்களுக்கான படைகளை உருவாக்கிக் கொண்டார்கள்.

இரண்டு கொள்ளையர்களும் ஒன்றாகக் கூடி நாட்டைச் சுரண்டினர்.



வெள்ளை ஏகாதிபத்தியம் தனது சுரண்டிய செல்வம் முழுவதையும், தனது தாய் நாட்டிற்குக் கப்பல், கப்பலாக அனுப்பிக்கொண்டிருந்தது.

நமது மகாகவி பாரதி “பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ? நாங்கள் சாவதோ?” என்று மனம் வெதும்பிப் பாடினான்.

இங்கே உள்ள சுரண்டல்கார்கள் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள். அந்நிய ஆட்சியில் இருந்து நாடு விடுதலை பெற வேண்டும். நாடு பரிபூரணச் சுதந்திரம் அடைதல் வேண்டும். சமூக அடக்குமுறைக் கொடுமைகளும் ஒழிக்கப்பட வேண்டும். நாட்டு மக்களின் விடுதலை என்பது வெறும் அரசியல் விடுதலை மட்டுமல்ல, சமூக, பொருளாதார விடுதலையாக பரிபூரணத்துவம் உடையதாக இருந்திட வேண்டும் என்பதில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றிய நாள் முதல் உறுதியுடன் போராடியது.

வெள்ளையர்கள் ஆதிக்கத்தையும் அடக்குமுறைகளையும் விஞ்சிநின்றது சமூக அடக்குமுறை.

அந்நிய ஆட்சியில் அடக்குமுறை அனைத்தையும் எதிர் கொண்டு, ஆட்சி அகற்றப்பட வேண்டும். அந்நியனுக்கு எம் மக்கள் ஒருபோதும் அடிமையாக இருக்க முடியாது. என் தாய் நாட்டின் விடுதலைக்காக எதையும் இழக்கத் தயார். விடுதலை, தேச விடுதலை அதுவே எம் உயிர் மூச்சு எனப் போராடியவர்கள் கம்யூனிஸ்டுகள்.

விடுதலைக்கான போராட்டத்துடன், சமூக விடுதலைக்கான போராட்டத்தையும் இணைத்து நடத்திய பேரியக்கம் கம்யூனிஸ்ட் கட்சி.

தொழிலாளர்கள் உரிமைகளுக்கான போராட்டம், அவர்கள் சங்கம் அமைத்துக் கொள்வதற்கான போராட்டம், அவர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம், கொத்தடிமை முறை அகற்றுதல், பணிப் பாதுகாப்பு, உத்தரவாதமான ஊதியம், ஊதிய உயர்வு, ஊக்கத்தொகை, போனஸ் எனத் தொழிலாளர்களுக்கான போராட்டங்களும் விடுதலைப் போராட்டத்துடன் இணைந்தே நடத்திய பேரிக்கம்தான் கம்யூனிஸ்ட் கட்சி.

நாடு முழுவதும் நிறைந்துள்ள விவசாயிகளின் உரிமைகளுக்காகவும், அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் பாதுகாக்கவும், நில உரிமைகளுக்காகவும், குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கவும், அவர்கள் செலுத்திட வேண்டிய குத்தகைகளுக்கு அளவு நிர்ணயம் செய்திட வேண்டும் என்பதற்காகவும், அவர்களை நிலத் திலிருந்து வெளியேற்றாமல் பாதுகாக்கவும், குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், இடைவிடாது போராடியதும், நிலச் சீர்திருத்த சட்டம் நிறைவேற்றப்படவும், நிலக்குவியல் முறை ஒழிக்கப்பட்டு, நிலப்பிரபுத்துவத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற நிலையை உருவாக்கவும் போராடி வெற்றி பெற்ற பேரியக்கம் கம்யூனிஸ்ட் கட்சி.

நிலத்திலிருந்து பிரிக்க முடியாத அளவுக்கு இரண்டறக் கலந்து நின்ற விவசாயத் தோழர்களின் வாழ்க்கைக்காக, அவர்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட பேரியக்கம்தான் பெருமைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சி.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## நிலப்பிரபுத்துவத்தின் சமூகக் கொடுமை

சக மனிதர்களை அடக்கி ஆள்வதற்கு நிலப்பிரபுத்துவம் கையாண்ட முறைகள் மிகக் கொடூரமானவை.

மனிதர்களைக் கட்டி வைத்து அடித்தல்; அவன் உடல் முழுதுமுள்ள ரத்தம் வெளியேறும் வகையில் அடித்தல்; அவனது உடலைப் போர்த்திப் பாதுகாக்கும் தோல் பிய்ந்து தொங்கும் அளவிற்குச் சவுக்கு, புளியம் விளார், திருக்கை வால் கொண்டு அடித்தல். இவ்வாறு இரக்கமற்ற முறையில் அடிப்பதற்கு என்று ஊட்டி வளர்க்கப்பட்ட அடியாட்கள். மாட்டுச் சாணத்தைக் கரைத்து மனிதர்களைக் குடிக்க வைத்தல், முட்டிக்கால் போடச் செய்து கரடுமுரடான சாலையில் நடக்கச் செய்து அவரது இரண்டு முழங்கால்களில் உள்ள தோலும் சதையும் பிய்ந்து, எலும்புகள் வெளியே தெரிந்து, ரத்தம் சொட்டச் சொட்ட வலி பொறுக்க முடியாமல் அவனது கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர் வடிந்து, கண்ணீர் மேலாடையின்றி உள்ள அவனது உடல் முழுவதும் நனைந்திட்ட கொடுமைகள்.

தவறு செய்தான் என்று குற்றம்சுமத்தி, அவனது உடல் முழுவதும் வைக்கோல் பிரியைச் சுற்றி, அதில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்து, அக்கொடிய தீ பற்றி, சொக்கப்பனை எரிவது போன்று அவனது உடல் முழுவதும் எரிந்து, அவன் கதறக் கதற எரிந்து சாம்பலாகி எலும்புக்கூடுகள் மட்டுமே எஞ்சின!

பெண்களை பண்ணையார்கள் மட்டுமல்ல, அவர்களது அடியாட்கள், எடுபிடிகள் சீரழித்தது கொஞ்சநஞ்சமல்ல!

எல்லாப் பெண்களைப் போன்றும் உழைக்கும் மக்கள் ஆடை அணியக் கூடாது; பெண்கள் தங்களது மார்பகங்களை மறைப்பதற்கான மேலாடை ரவிக்கை அணியக் கூடாது; சேலையை முழங்காலுக்கு மேல்தான் அணிய வேண்டும்!

வயதிற்கு வந்த பெண்களை, புதிதாக திருமணம் செய்த பெண்களை ஆதிக்கச் சக்திகள் சுவைத்து முடித்த பின்னரே, உரியவன் உரிமை கொண்டாட முடியும்.

ஆண்கள் மேல்சட்டை அணியக் கூடாது, துண்டை தோளின் மீது போடக் கூடாது, வேட்டியைச் சுருட்டி முழங்காலுக்கு மேல்தான் அணிய வேண்டும்.

உழைக்கும் மக்களின் வீடுகள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டன. பொதுக் குளங்களில் குளிக்கவோ, தண்ணீர் எடுக்கவோ கூடாது.

மேல் சாதிக்காரர்கள் குடியிருப்புப் பகுதிகளில் நடமாட முடியாது. நடக்கக் கூடாது.

எல்லாவற்றிக்கும் மேலாக நான்கு வர்ணக் கோட்பாட்டின்படிக் கல்வி என்பது முற்றிலுமாக மறுக்கப்பட்டது. இவை போன்ற எண்ணிலடங்காச் சமூகக் கொடுமைகள் ஏராளம், ஏராளம்!




# நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்



நா.பெரியசாமி

**நமது நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகம் குறுக்கி வெட்டி, சிதைக்கப்பட்டு வருகிறது.**

பிரிட்டீஷ் காலனி ஆட்சிக்கு முடிவு கட்டி, விடுதலை பெற்ற பிறகு, சுதந்திரமடைந்த தாய்நாட்டை நிர்மாணிக்கவும், வழி நடத்தவும் அரசியலமைப்புச் சட்டம் தேவை என உணரப்பட்டது. இதனை உருவாக்க 1946 டிசம்பர் 6 ஆம் தேதி அரசியலமைப்பு அவை அமைக்கப்பட்டது.

இந்த அரசியலமைப்பு அவையின் உறுப்பினர்கள் அன்றிருந்த மாகாண சபைகள் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். குறுநில மன்னர்கள் அனுப்பிய பிரதிநிதிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அந்தக் காலக் கட்டத்தில் நாடு இந்தியா, பாக்கிஸ்தான் என பிரிக்கப்படாமல் இருந்ததால் அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு 389 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் காங்கிரஸ் கட்சி 208, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, அகில பாரதிய இந்து மகாசபா, நீதி கட்சி, சிரோமணி அகாலி தளம் ஆகிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் உள்ளிட்டோர் 15, மன்னராட்சிப் பகுதியில் இருந்து வந்தவர்கள் 93, அகில இந்திய முஸ்லீம் லீக் 73 என்ற அளவில் உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். இதில் பாகிஸ்தான் என்று தனிநாடு பிரிக்கப்பட்ட பிறகு, அதற்காக தனி அரசியலமைப்பு சபை 1947 ஜூன் 3 ஆம் தேதி அமைக்கப்பட்டது. இதன் காரணமாக இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 299 ஆக குறைந்தது.

இந்த அரசியலமைப்பு நிர்ணய சபை, சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் தலைமையில் அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுவை அமைத்தது. இந்த வரைவுக் குழு தயாரித்து முன் வைத்த அரசியலமைப்பு வரைவு சட்டத்தின் மீது அரசியலமைப்பு நிர்ணய சபை 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள் என சுமார் மூன்றாண்டுகள் விரிவான வாதப் பிரதி வாதங்கள் நடத்தி, ஆழமாக விவாதித்து 1949 நவம்பர் 26 அரசியலமைப்புச் சட்டத்தை ஒரு மனதாக நிறைவேற்றியது.

நாட்டின் விடுதலைப் போராட்ட காலத்தில் 1930 ஆம் முதல் 1947 வரையிலும் ஆண்டுதோறும் ஜனவரி 26 ஆம் தேதி "பரிபூரண விடுதலை" பெறுவதற்கான உறுதி ஏற்பு நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த வரலாற்றை நினைவுகூறும் வகையில் 1950 ஜனவரி 26 அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது.

### கருத்துகள் கேட்பும், ஏற்பும்

முதல் மக்களவை 1952 1957 காலத்தில் 135 நாட்கள் கூடி விவாதித்துள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் இருந்த கம்யூனிஸ்டுகளின் கருத்துகளை பிரதமர் நேரு செவிமடுத்துக் கேட்டதை மூத்த உறுப்பினர்களும் அவைக் குறிப்புகளும் காட்டுகின்றன.

### ஒரே தேர்தல்...

1952 முதல் 1967 வரை நாட்டின் நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தான் தேர்தல் நடைபெற்றுள்ளன. பின்னர் வந்த அரசியல் வளர்ச்சி நிலை மாற்றங்களால் மாநிலக் கட்சிகள் சட்டமன்ற தேர்தலில் வென்று, ஆட்சியில் அமர்ந்து அரசை வழிநடத்தி வருகின்றன. மாற்று அரசியல் கட்சிகள் மாநிலங்களில் ஆட்சியில் அமருவதை சகித்துக் கொள்ள முடியாத ஒவ்வாமை ஒன்றிய அரசின் ஆளும் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

### வெட்டிக் குறைக்கப்பட்ட ஜனநாயகம்

கடந்த 2014 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சி நாடாளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று, பிரதமர் பொறுப்பில் நரேந்திர மோடி அமர்த்தப்பட்டார்.

நாட்டின் அரசியல் திசை வலதுசாரி பக்கம் திட்டவட்டமாக திருப்பப்பட்டது. இதன் காரணமாக ஒன்றிய அரசு அதிகாரத்தின் துணையோடு இந்துத்துவா அரசியல் கருத்தியலை செயல்படுத்த தொடங்கியது. இதன் விளைவாக நாடாளுமன்ற ஜனநாயகம் சிறுமைப் படுத்தி, சிதைக்கப்படுகிறது.

### வெறும் 55 நாட்கள்

கடந்த 2019 முதல் 2024 வரை செயல்பட்ட 17வது நாடாளுமன்ற மக்களவை ஐந்தாண்டுகளில் வெறும் 55 நாட்கள் மட்டுமே கூடியுள்ளது. இதில் ஒத்தி வைப்புகளை கழித்து பார்த்தால், வெங்காயத்தை உரித்து பார்த்ததால் மிஞ்சுவது போலத்தான்.

### அதிகாரம் பெற்ற அமைச்சரவைக் குழுக்கள்

நாட்டு தேவையானதும், மக்கள் நலனுக்கு உகந்ததுமான முக்கிய பிரச்சினைகளில் முழுமையாக விவாதித்து, ஆக்கப்பூர்வமான முடிவுக்கு வர அதிகாரம் அளிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுக்கள் அமைப்பது நாடாளுமன்ற நடைமுறையாக இருந்தது.

இந்த வகையில் 2013 ஆம் ஆண்டு வரை அதிகாரம் அளிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுக்கள் ஒன்பதும், மற்றபடி 21 அமைச்சரவைக் குழுக்களும் நடைமுறையில் இருந்தன.

பாஜக ஆட்சி அமைந்ததும், பிரதமர் மோடி 2014 மே 31 ஆம் தேதி அமைச்சரவைக் குழுக்கள் அனைத்தையும் கலைத்து அறிவித்து, அப்படி அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கும் முறையை அடியோடு ஒழித்துக் கட்டிவிட்டார்.

### திட்டக்குழு

சோவியத் ஒன்றியம் ஐந்தாண்டு திட்டம் வகுத்து முன்னேறி வந்த அனுபவத்தை தொடர்ந்து, நமது நாட்டிலும் பிரதமர் தலைமையில் திட்டக் குழு அமைத்து செயல்பட்டு வந்தது.

பிரதமர் மோடி முதன் முதலாக 2014 ஆகஸ்ட் 15 விடுதலை நாள் விழா உரையில் திட்டக் குழுவை கலைத்து விட்டு, நிதி ஆயோக் என திருத்தி அமைத்தார். ஆம், பற்களை பிடிங்கி எறிந்து விட்டு, வித்தை காட்ட பாம்பை பயன்படுத்துவது போல், பொதுத்துறை மற்றும் அரசு சொத்துக்களை விற்க ஆலோசனை வழங்க நிதி ஆயோக் பணிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவைக்கு துணைத் தலைவர் தேர்வு கைவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்கட்சிகளின் மரபு வழி உரிமை பறிக்கப்பட்டு விட்டது.

### தற்சார்பு அமைப்புகளில் ஊடுருவல்

அரசியல் அமைப்பு அதிகாரம் பெற்று, தற்சார்பு நிலையில் இயங்கி வரும் தேர்தல் ஆணையம், கணக்கு மற்றும் தணிக்கைக் குழு, அமலாக்கக் குழு, ஆளுநர் மாளிகைகள் என தொடர்ந்து உச்ச நீதிமன்றம் வரை ஏதேச்சதிகார சிந்தனையும், கரங்களும் ஊடுருவியுள்ளன. இதன் பாரதூர விளைவுகளும் வெளிப்பட்டு வருகின்றன.

### ஒரே நாடு, ஒரே தேர்தல்

தேர்தல் செலவுகளையும், நேரத்தையும் பட்டியலிட்டு நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இந்துத்துவா சிந்தாந்தவாதிகள். இந்த மதவெறிக் கும்பலின் வாய்ச்சவடால் முழக்கங்களில் மயங்கி விட்டால்! எண்ணிப்பார்க்க முடியாத பேரழிவு ஏற்படும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

### இன்றைய சித்திரம்

அண்மையில் நடந்த 18 வது நாடாளுமன்ற தேர்தலில் நாம் தேர்வு செய்து அனுப்பிய மக்களவை உறுப்பினர்கள் 543 பேரில் 251 பேர் குற்றவியல் வழக்குகளில் சிக்கியுள்ளவர்கள். இவர்களில் 27 பேர் வன்புணர்வு, கொலை, கொலை முயற்சி, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தண்டிக்கப்பட்டவர்கள். இந்த எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டில் 125 என்றிருந்தது, அது இன்று 251 ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையில் பாஜக 94 சதவீதம் பெற்று முதலிடம் வகிக்கிறது.

### பண மூட்டைகள் ஆதிக்கம்

நாடாளுமன்றத்தில் குற்றப் பின்னணி கொண்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில், பெரும் பெரும் கோடீஸ்வரர்கள் (பில்லியனர்கள்) எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டில் 58 சதவீதமாக இருந்த கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை, இன்று 18வது மக்களவையில் 93 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில் ஆந்திராவின் தெலுங்கு தேச உறுப்பினர் டாக்டர் சந்திரசேகர் (குண்டூர்) ரூபாய் 5,705 கோடி, பாஜகவின் தெலுங்கானா உறுப்பினர் கே. விஸ்வேஸ்வர ரெட்டி (சேவல்லா) ரூபாய் 4,568 கோடி, அரியானா நவீன் ஜிண்டால் (குருஷேத்ரா) ரூ.1021 கோடி என பெரும், பெரும் கோடீஸ்வரர்களாக வரிசை கட்டி நிற்கின்றனர்.

### விளைவு?

செல்வச் சீமான்களும், குற்றச் செயல்களில் ஈடுபட அஞ்சாத கும்பல் கலாச்சார பேர்வழிகளும் நாடாளுமன்றத்தில் நிரம்பி வழியும் போது, அங்கே தொழிலாளர் நலன், விவசாயிகள் வாழ்வாதாரம், விவசாயத் தொழிலாளர் உள்ளிட்ட உடல் உழைப்பு தொழிலாளர் பாதுகாப்பு, பாலின சமத்துவம், மாநில உரிமைகள், கூட்டாட்சி கோட்பாடு நாட்டின் நல்லியல்பு மரபுகள் என எல்லாம் தூக்கி எறியப்படுகிறது.

ஒரே நேரத்தில் 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். உறுப்பினர்களை முற்றிலும் நீக்கம் செய்ய எவ்வளவு நேரம் பிடிக்கும்?

பாஜக ஆட்சியில் பன்னாட்டு குழும நிறுவனங்களின், நிதி மூலதன சக்திகளின் வரம்பற்ற லாப வேட்டைக்கு நாடு பலி யிடப்படுகிறது.

ஜனநாயக நெறிமுறைகளை முற்றிலுமாக அழித்தொழித்து, மனு ஸ்மிருதி வழியில் இந்துத்துவா கருத்தியல் முன்னேற அனுமதிக்கக் கூடாது.

விழித்தெழுவோம். அரசியலமைப்பு சட்டத்தையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் பாதுகாக்க போர்க்களம் புறப்படுவோம். இந்துத்துவா கருத்தியல் அரசியல் அதிகாரத்தில் இருந்து மட்டும் அல்ல; சமூக வாழ்வில் அனைத்து நிலைகளிலிருந்தும் வெளியேற்றுவோம்....

தொடர்புக்கு: 9443118544

## முதல் பொதுத்தேர்தல்

அறியாமையும், கல்லாமையும் பெருகிக் கிடந்த நாட்டில், வாழ்வாதாரம் இல்லாது தவித்த வறுமையின் கோரப்பிடியில் வாழ்ந்தோரும், வசதிகளை பெருக்கி செல்வ செருக்குடன் வாழ்ந்தவர்களும் இருந்த நாட்டில், இவை எல்லாவற்றுக்கும் மேலாக சாதிய அடுக்குமுறை சமூகத்தில் ஆறு கோடிக்கும் அதிகமான மக்கள் "தீண்டப்படாதவர்களாக"ஒதுக்கப்பட்டு, ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த நாட்டில், அனைவரையும் குடிமக்களாக ஏற்று, 21 வயதான ஆண்களும், பெண்களும் அரசியல் தளத்தில் சமம் என்ற நிலையை அரசியலமைப்பு சட்டம் உறுதி செய்தது.

1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி மக்களால் தேர்வு செய்து, அமைக்கப்படும் நாடாளுமன்றம் (மக்களவை மற்றும் மாநிலங்களவை), மாநிலங்களில் சட்டமன்றங்கள் அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி நாட்டை வழிநடத்தும் என்ற நாடாளுமன்ற ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

வாக்காளர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் வாக்களித்து பிரதிநிதிகளை தேர்வு செய்யும், தேர்தல் நடைமுறைகளை மேற்கொள்ள அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. 21 வயதான ஆண்களும், பெண்களும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. வாக்களிக்கும் வயது 18 ஆக குறைக்க வேண்டும் என அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் உள்ளிட்ட இளைஞர் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வந்ததால் 1980 க்கு பிறகு வாக்களிக்கும் வயது 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது

1951 அக்டோபர் 25 முதல் 1952 பிப்ரவரி 21 வரை முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அன்றிருந்த 499 உறுப்பினர்களுக்கான மக்களவையில் 364 இடங்களில் காங்கிரஸ் கட்சி வென்று, ஜவகர்லால் நேரு பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். முதல் தேர்தலில் 37 லட்சத்து 87 ஆயிரத்து 401 வாக்குகள் பெற்ற இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி 16 இடங்களில் வென்று, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து செயலாற்றத் தொடங்கியது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 39

## தேர்தல் விதி திருத்தம்: சர்வாதிகார சதி!

1961ம் ஆண்டின் தேர்தல் நடத்தை விதிகளின் விதி 93(2)(ஏ)ல் “தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் பொது மக்களின் பார்வைக்கு உரியது” என்று கூறப்பட்டிருந்தது.

திடீரென, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரைப்படி டிசம்பர் 20 ஆம் தேதி, ஒரு திருத்தத்தை ஒன்றிய அரசு செய்திருக்கிறது.

ஆவணங்கள் என்பதை, “விதிகளில் குறிப்பிடப்பட்ட” ஆவணங்கள் எனச் செய்துள்ள திருத்தம் சின்னதுதான். ஆனால் அதன் பொருள் விரிவானது.

வாக்குச்சாவடியில் பதிவு செய்யப்பட்ட சிசிடிவி கேமரா காட்சிகள், வெப்காஸ்டிங் மற்றும் வேட்பாளர்களின் வீடியோ பதிவு போன்ற மின்னணு ஆவணங்களைப் பொதுமக்கள் கோருவதற்கு இனிமேல் உரிமை இல்லை என்பது அந்தத் திருத்தம்.

“சிசிடிவி கேமரா மற்றும் மின்னணுவியல் பதிவுகளைக் காட்ட வேண்டும் என்று தேர்தல் நடத்தை விதிகளில் சொல்லப்படவில்லை என்று காரணம் சொல்லப்படுவது வேடிக்கையானது.

1961ல் சிசிடிவி ஏது? மின்னணுப் பதிவு ஏது? ஆவணப் பட்டியலில் இவற்றைப் புதிதாகச் சேர்ப்பதற்குப் பதிலாக, அன்றைக்குச் சொல்லப்படவில்லை என்பதால் இனி ஒருபோதும் இவை பொதுமக்கள் பார்வைக்கானதல்ல என்று குறுக்குச் சால் ஓட்டுகிறது ஒன்றிய அரசு.

பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்றத்தில், முகமது பிராச்சா என்பவர், சிசிடிவி பதிவுகளை வழங்கக் கோரி ஒரு மனு செய்தார். அவற்றைத் தர முடியாது என்று தேர்தல் ஆணையம் வாதிட்டது.

தேர்தல் நடத்தை விதிகளின் பிரிவு 93(2)(ஏ)ன் படி மனுதாரருக்கு உரிமை இருப்பதால், சிசிடிவி பதிவை வழங்குமாறு, டிசம்பர் 9ஆம் தேதி அன்று உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

இரண்டே வாரங்களுக்குள் செய்யப்பட்ட இந்தத் திருத்தம் உயர்நீதிமன்ற உத்தரவைச் செல்லாததாக்குவதோடு, இனி எந்த நீதிமன்றமும் இவ்வாறு தீர்ப்பளிக்க முடியாதவாறு தடுத்துள்ளது.

“வேட்பாளருக்கு ஏற்கெனவே அனைத்து ஆவணங்கள் மற்றும் ஆவணங்களுக்கான அணுகல் உள்ளதால் இந்தத் திருத்தம் சரியானதே. இவை வெளியிடப்பட்டால் வாக்காளர் யாருக்கு வாக்களித்தார் என்ற ரகசிய உரிமை பறிக்கப்பட்டு விடும் என்று தேர்தல் ஆணையம் கூறுகிறது.

பிறகு எதற்காக வாக்குச்சாவடியில் சிசிடிவி பதிவு செய்ய வேண்டும்? அந்த ரகசியத்தைத் தேர்தல் அதிகாரிகளும் அதன் வழியாக ஆளுங்கட்சியும் மட்டும் பார்வையிடுவதற்கா?

திருமணத்தை எல்லோரும் பார்த்திருப்பதால், அப்போது எடுக்கப்பட்ட வீடியோவைப் பார்ப்பதற்கு யாருக்கும் உரிமை யில்லை என்பது போன்ற அபத்தமல்லவா இது?

தேர்தல் அதிகாரிகள் ஒரு வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்து விட்டால், வழக்கு தொடரும் உரிமை உள்ளது. ஆனால் அந்த வழக்கு முடிவதற்குள் அடுத்த தேர்தல் வந்து விடும்! இனி வழக்கு தொடர்ந்தால் கூட சிசிடிவி பதிவுகளைக் கோர முடியாது! நாங்கள் சொன்னவர்தான் வெற்றி பெற்றார். இதைக் கேள்வி கேட்க யாருக்கு உரிமை இல்லை என்பதுதான் திருத்தத்தின் உள்நோக்கம்.

தேர்தல் ஆணையம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருக்கிறது. வாக்கு யந்திரத்தில் பதிவானதாகச் சொல்லப்படும் வாக்குகளை விட, அவை எண்ணப்படும்போது கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வழக்குகள் தொடரப்பட்டால், விசாரணை நடந்து முடியும் முன்பாகவே, வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள பதிவுகள் அழிக்கப்பட்டு விட்டன. வேறு தேர்தல்களில் பயன்படுத்த வேண்டியிருப்பதால், அப்படியே அந்த எந்திரங்களைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பது சாத்தியமற்றது என்று ஏற்கெனவே தேர்தல் ஆணையம் நீதிமன்றங்களில் தெரிவித்துள்ளது. இப்போது மற்ற பதிவுகளையும் தர முடியாது என்று மறுப்பதற்குத் திருத்தம் வழி செய்கிறது.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துத் தந்துள்ள “முழுமையான வெளிப்படைத்தன்மை” கொள்கையை இந்தத் திருத்தம் மீறுகிறது. ஒளிவு மறைவற்ற, நேர்மையான தேர்தல் என்பதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சு மட்டும்தான்.

டாக்டர் அம்பேத்கரை அவமதித்ததால் எழுந்த கூச்சல் குழப்பத்தின் நடுவே, கடைசியாக நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட அன்று, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதிக்க வாய்ப்பே தராமல், இந்தத் திருத்தம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா பல கட்சி ஜனநாயக நாடு. ஒவ்வொரு கட்சிக்கும் போட்டியிடவும், மக்கள் ஆதரவைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறவும் முடியும் என்பதே தேர்தலின் அடிப்படை.

அந்த ஜனநாயகத்தையே சிதைத்து, சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு, பாசிசச் சக்திகள் எடுக்கும் இன்னொரு முயற்சி இது.



நடிகர் சிவகுமார்

# வாழ்த்துவோம்! வணங்குவோம்!



1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர் ஐயா ஆர்.நல்லகண்ணு அவர்கள்.

பள்ளி மாணவனாக விளங்கியபோதே ஸ்ரீ வைகுண்டத்தில் நடைபெற்ற தேசியத் தலைவர்கள் பேசிய பொதுக்கூட்டங்களுக்குச் சென்று அவர்களின் உரையைக் கேட்டுள்ளார். அதனால் ஏற்பட்ட தாக்கத்தால் தானும் ஒரு தேசிய உணர்வாளராக உருவெடுத்தார்.

பள்ளி ஆசிரியர் ஒருவர் கொடுத்த கம்யூனிச நூல்களைப் படித்து அச்சிந்தனைக்கு ஆட்பட்டார்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் இண்டர மீடியட் படித்து முடித்து பட்ட வகுப்புக்கு படித்துக் கொண்டிருந்தபோது பொது வாழ்வில் மூழ்கி படிப்பை பாதியில் விட்டுள்ளார்.

1945இல் மதுரையில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டில் ஜீவா ஆற்றிய உரை கேட்டு ஊக்கம் பெற்றார். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட தொடங்கினார்.

ஆதிக்கங்களுக்கு எதிராகவும், ஏழை எளியவர்களுக்கு ஆதரவாகவும் இளம் வயதிலேயே போராட்டக் களம் இறங்கினார்.

சுதந்திரத்திற்கு பின்னர் கட்சி தடை செய்யப்பட்டதால் தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்.

1949 இல் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, பல துன்ப துயரங்களுக்கு ஆளானார்.

இளைஞர் நல்லகண்ணுவின் அடர்த்தியான மீசையில் சிகரெட் நெருப்பை வைத்து கொடுமைப்படுத்தினான் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

சதி வழக்கில் சிக்க வைக்கப்பட்டு, ஏழாண்டுகள் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டார்.

1958 இல் அவரது கட்சித் தோழர் அன்னச்சாமி அவர்களின் மகளாகிய ரஞ்சிதம் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

நீண்ட காலம் விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவராக விளங்கிய ஐயா ஆர். நல்லகண்ணு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக 9 ஆண்டுகள் செயலாற்றினார்.

தியாகம், அர்ப்பணிப்பு, எளிமை, நேர்மை ஆகிய நற்பண்புகளின் இலக்கணமாகத் திகழும் அரசியல் தலைவர் ஐயா நல்லகண்ணு அவர்களுக்கு 100வது பிறந்தநாள். எம்மைப் போன்றவர்களுக்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது.

பொதுவாழ்வின் குறியீட்டாக விளங்கும் நூற்றாண்டு நாயகர் ஐயா நல்லகண்ணு அவர்களை வாழ்த்துவதை விட, வணங்குவதே பொருத்தம்.

வாழ்த்துவோம் ! வணங்குவோம் !

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

குடியிருப்புப் பகுதியில் இருந்து வெளியேற்றாமல் இருக்கக் குடிமனைப் பாதுகாப்புச் சட்டம், குடிமனை சொந்தமாக்கப்பட, குடிமனைப் பட்டா கோரி நடைபெற்ற பேரியக்கம். குடியிருக்க மனையும், வீடு கட்டப் பணமும் வழங்க வேண்டும் என்று வீடு கட்டிக் கொடு என்கிற இயக்கங்களையும், முனைப்பாக நடத்திய பேரியக்கம்தான் கம்யூனிஸ்ட் கட்சி.

தொழிலாளர்களை, விவசாயிகளை, விவசாயத் தொழிலாளர்களை வர்க்கரீதியாக அணிதிரட்ட தொழிற்சங்கம், விவசாய சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கம் என சங்க அமைப்புகளை உருவாக்கவும், அதனை பலப்படுத்தவும், அமைப்பு ரீதியாக அமைப்புகளை உருவாக்க வழிவகை கண்ட பேரியக்கம்தான் கம்யூனிஸ்ட் பேரியக்கம்.

கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கு பெற்றதுதான் ஜனசக்தி.

அறிவியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் செயல்படக்கூடிய பேரியக்கமான கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகள் அனைத்தையும் தன் தோளில் சுமந்து ஒவ்வொருநாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் வெளிப்படுத்தி வருவதுதான் ஜனசக்தி.

உழைக்கும் மக்களின் குரலைப் பிரதிபலிக்க, ஊராருக்கு எடுத்துச் சொல்ல, எவரும் முன்வராமல் அஞ்சி நடுங்கி, ஒளிந்து கொண்ட நேரத்தில், வெள்ளையர்க்கும், கொள்ளையருக்கும், அடங்கி ஆளும் அரசுக்கும் நிலப்பிரபுகளுக்கும், ஜமீன்தார்களுக்கும், மடாதிகளுக்கும், ஏகபோக முதலாளிகளுக்கும் பல ஏடுகள் சேவகம் புரிந்து, வெண்சாமரம் வீசிக்கொண்டு இருந்த நிலையில், “அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!” என பாரதியின் சிம்மக் குரலுக்கேற்ப, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சங்க நாதம் முழங்கியதுதான் பெருமைக்குரிய ஜனசக்தி.

லாப, நட்ட கணக்கு பார்க்காமல் தன் கொள்கை நிலையில், தன் லட்சியப் பாதையில் இருந்து கிஞ்சிற்றும் விலகாமல், அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சாமல், தடைகளைத் தகர்த்தெறிந்து, போராட்டக் களத்தில் தம் பணிகளை இடையறாது மேற்கொண்டு, புரட்சிக் கீதமாய் ஒலித்து, அன்று முதல் இன்றுவரை தொடர்வதுதான் ஜனசக்தி.

நாட்டையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் எவ்வாறு பிரிக்க முடியாத ரத்தமும் சதையுமாக ஜனசக்தியின் பங்களிப்பையும், மக்கள் நலனையும் பிரிக்க இயலாது.

அத்தகைய பெருமைக்குரிய ஜனசக்தி வரலாற்றை, தியாகத்தைச் சுமந்தபடி உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருப்பதும், அதை நீங்கள் பக்கம், பக்கமாகப் புரட்டியும், படித்தும் வருவது கண்டு மகிழ்ச்சி.

ஜனசக்தி சிறப்பு விற்பனை இயக்கமான இந்நாளில், ஜனசக்தி சிறப்பு இதழ்களை வெற்றிகரமாக சிறப்பான முறையில் தயாரித்துள்ள ஆசிரியர் குழு தோழர்களுக்கு, அச்சிட்ட தோழர்களுக்கு, அதனை நகரம், கிராமம் என வாசகப் பெருமக்களைத் தேடிச் சென்று விற்பனை செய்த தோழர்களுக்கு, மனம் கோணாமல் வாங்கி ஆதரவளித்த அனைவருக்கும், விளம்பரம் சேகரித்த தோழர்களுக்கும், விளம்பரங்கள் கொடுத்துதவிய நண்பர்களுக்கும், நிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் தோழர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். நெஞ்சம் நிறைந்திட்ட வாழ்த்துகள்!

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# நூற்றாண்டு சர்வதேசப் பங்களிப்பு



மு.வீரபாண்டியன்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகத்தான அக்டோபர் புரட்சியால் உந்தப்பட்டது. இந்திய விடுதலைப் போரில் தோன்றியது. உலகில் பல புரட்சிகள் நடந்தேறி உள்ளன.**





அஜய் கோஷ், நேரு, ஹோ சி மின்

கிரேக்கப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி இவையாவும் ஓர் எல்லைக்குள் நின்றுவிட்டன. இதில் பிரெஞ்சுப் புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் அரசியல் விழுமியங்களை அளித்தது. பாட்டாளி வர்க்க அரசியலுக்குத் திசை காட்டியது. எனினும் அவை எல்லை தண்டவில்லை.

அக்டோபர் புரட்சி மட்டும்தான் எல்லை தாண்டியது. 1917 க்குப் பின் உலகில் தோன்றிய விடுதலை இயக்கங்கள், தொழிற்சங்க இயக்கங்கள், புரட்சிகர அரசியல் கட்சிகள் என யாவற்றையும் உந்தித் தள்ளியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய விடுதலையின் பொருட்டு தோன்றினாலும், அதனை உந்தியது அக்டோபர் புரட்சி.

அக்டோபர் புரட்சியின் முதல் பிரகடனமே பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம்தான். போர்களற்ற, நீடித்த அமைதி, விடுதலை இயக்க ஆதரவு, உலகைச் சுரண்டும் மூலதனச் சுரண்டலை எதிர்ப்பது, பாட்டாளி வர்க்க ஆட்சிக்கான ஒருமைப்பாடு இதனையே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது சர்வதேசக் கொள்கையாக ஏற்றது.

கட்சி மூன்று முறை தடை செய்யப்பட்டது. இருமுறை பிரிட்டிஷ் அரசு, ஒருமுறை காங்கிரஸ் அரசு. பிரிட்டிஷ் தடை செய்த போது, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் குற்றச்சாட்டாகியது, போல்ஷ்விக் புரட்சியை இந்தியாவில் ஏற்படுத்த முனையும் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்றது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

பெஷவர், கான்பூர், மீரட் சதி வழக்குகளிலும், நீதிமன்றங்களில் இதனை முன்மொழிந்தது பிரிட்டிஷ் அரசு. கம்யூனிஸ்டுகள் இதனை ஏற்றுக்கொண்டோம். கேரளக் கையூரில் தோழர்கள் தூக்கிலிடப்பட்ட போதும், புன்னப்புரா, வயலார் துப்பாக்கிச் சூட்டின் போதும், மாரி, மணவாளன், பாலு போன்றோர் தூக்கிலிடப்பட்ட போதும், சேலம் சிறைக்குள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட மேலும் சின்னியம்பாளையம் தியாகிகள் தூக்கிலிடப்பட்ட போதும், தொழிலாளர்கள் ஒற்றுமை, பாட்டாளிகளின் சர்வதேசியம் வாழ்க வென்றே முழங்கினார்கள்.

சிவராமனும், ஆறுமுகமும், இரணியனும், களப்பால் குப்புவும் கொல்லப்பட்ட போதும், உழைக்கும் மக்கள் ஒற்றுமையைத்தான் முழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆக எத்தகையச் சூழலிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மெய்யான லெனினியக் கட்சி என்பதால் அது தனது பாட்டாளி வர்க்க சர்வதேசக் கொள்கைகளை இந்த நூற்றாண்டு வரை கைவிடவில்லை. இனியும் கைவிடாது.

இந்திய அரசியல் இயக்க வரலாற்றிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான் முதன்முறையாக சர்வதேசப் பிரிவை உருவாக்கியது.

இதில் சிறப்புமிகு பங்காற்றியவர்கள் என்.கே. கிருஷ்ணன், ரமேஷ் சந்திரா, பார்வதி கிருஷ்ணன் போன்றவர்கள்.

1972 இமெல்டா பிலிப்பைன்ஸ் நாட்டில் சர்வாதிகார ஆட்சி செய்தான். பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டார்கள். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஜதிக் கூட கொல்லப்பட்டார் என்றால் சூழல் எப்படி இருக்கும், இத்தகைய சூழலில்தான் தடை செய்யப்பட்ட பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களைச் சந்திக்க, அவர்களுக்கு உதவ, குறிப்பாக இமெல்டாவைச் சந்திக்க, சர்வதிகாரம் பற்றி வெளி உலகமறிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வீரமங்கை பார்வதி கிருஷ்ணனை பிலிப்பைன்ஸ் அனுப்பியது.

அவரும் ரகசியமாக பிலிப்பைன்ஸ் சென்றார்.

ஆசியாவில் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி வலிமையான கட்சி. இதனை நூரிஒலி மற்றும் சதாம் உசேன் இருவரும் கடுமையான அடக்குமுறைகள் ஏவி, படுகொலையில் ஈடுபட்டார்கள். இச்சூழலில் பல ஈராக் கம்யூனிஸ்டுகள் இந்தியா வரவும், அவர்களுக்கு அடைக்கலம் தரவும், அவர்கள் வெளியில் செல்லவும் கட்சி உதவியது.

1981 அமெரிக்கா ரீகன் நிர்வாகம் திரிகோணமலையில் “வாய்ஸ் ஆப் அமெரிக்கா” கருவிகளைப் பொருத்த முனைந்தது “டிகோகார்சியாவில் “செண்டகாம் “ராணுவ தளம் அமைக்க முயன்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடு தழுவிய அமெரிக்க ராணுவ எதிர்ப்பு இயக்கத்தைத் துவக்கியது.

சென்னையில் ஆபட்ஸ்பரியில் மாபெரும் மாநாடு நடைபெற முழு உதவிகளைச் செய்தது. அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டபூர்வ நடவடிக்கைகளுக்காக உள்துறையை நிர்பந்தித்தது. அமெரிக்கா புரட்சி வீரர் தோழர் மெக்கிஸ்ட் மரியம் சோசியஸ் கட்சி முறையை பிரகடனப்படுத்தினார்.

கியூபா இவருக்கு பக்கபலமாக நின்றது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா தோழர் மரியம் ஆட்சியை கவிழ்க்க பல முயற்சிகளை எடுத்தது. இச்சூழலில் மெக்கிஸ்ட் மரியம் மீது தவறான பிம்பத்தை, இந்தியா மீது திணித்தது மேற்குலகம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை இந்திய அரசோடு பேசியது. உண்மைகளை விளக்கியது. பின்னர்தான் இந்தியா, எத்தோப்பிய அரசிடம் உறவுகளை புதுப்பித்து இரு நாடுகளில் உறவு மேம்பட்டது.

இதில் தோழர் என்.கே. கிருஷ்ணன் கடும் முயற்சிகளை மேற்கொண்டார் (ஆதாரம் நம்பிக்கை ஒலி)

1949 சீனப் புரட்சி வெற்றியடைந்தது. அமெரிக்கா தைவானை ஆக்கிரமித்தது. அதுதான் உண்மையான சீனா என்றது. தைவான் தீவு சீனாவுக்கு சொந்தமானது. ஹாங்காங் எப்படியோ அப்படி. சியாங்கே ஷேக் புரட்சியின் போது தப்பி ஓடி தைவான் சென்றார். இதனைத் தான் இந்த நாள் வரை அமெரிக்காவும், மேற்குலகம் அங்கீகரித்து, ஆதரிக்கிறது. சீனா மறு ஒற்றுமை கோருகிறது.

சீனாவை ஐநா அங்கீகரிக்க தயங்கியது. இச்சூயலில் சீனாவை அங்கீகரிக்க நேரு அரசை உந்தி தள்ளியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

சீனப் புரட்சிக்கு முன், சீனாவில் கொள்ளை நோய் ஏற்பட்டபோது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மருத்துவக் குழுவை அனுப்பி வைத்தது. சர்வதேச கடமை ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

தென் ஆப்பிரிக்கா விடுதலைப் போரை ஆரம்பித்திருந்தே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வந்தது.

தென் ஆப்பிரிக்கா கம்யூனிஸ்ட் கட்சி, காந்திஜி துவக்கிய நேட்டல் காங்கிரஸ், தென் ஆப்பிரிக்கா காங்கிரஸ் மேற்கண்ட மூன்று கட்சிகளின் ஒற்றுமை, மக்கள் ஒருங்கிணைந்த போராட்டங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வந்தது.

தென் ஆப்பிரிக்கா கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதப் போராட்டங்களை நடத்தினாலும், காந்தியின் அகிம்சை போராட்டங்களையும் உயர்வாக மதித்தது.

போத்தா அரசு வெள்ளையர் பகுதி சட்டம் கொண்டு வந்து வெள்ளையர் குடியிருப்பு, வெள்ளையர் உணவகம், வெள்ளையர் விளையாட்டு பகுதி என அறிவித்து கருப்பின மக்களை தனிமைப்படுத்திய போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய நாடாளுமன்றத்தில் இதனை கண்டித்து குரல் எழுப்பியது. நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியோடு நேரடி தொடர்புகள் இருந்தன.

ஈரான் டுடே கட்சி தடை செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். அப்போது தப்பித்து சென்னை வந்த மாணவர்கள் சிலர் இங்கு படிக்கவும், அவர்கள் சென்னை பாலன் இல்லத்தில் தங்கவும், அவர்கள் மீண்டும் ஈரான் செல்லவும், சட்டப்படியான முயற்சிகளை மேற்கொண்டு பல்வேறு உதவிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில தலைமை செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வியட்நாம் விடுதலைப் போராட்டங்களை எப்போதும் ஆதரித்து வந்தது. ஹேசிமின், சூ என் வாய் புது டெல்லி வருகை தந்த போது கட்சி பிரம்மாண்டமான வரவேற்புகளை அளித்து. நேரு அரசு வியட்நாம் விடுதலைப் போரை ஆதரித்தது. வியட்நாம், இந்தியா நல்லுறவு அவசியம் என கட்சி அரசை நிர்பந்தித்தது. உன் பெயரும் என் பெயரும் வியட்நாம், வியட்நாம் என நாடுதழுவிய இயக்கம் குறிப்பிடத்தக்கது.

கியூபா விடுதலை போரை கட்சி எப்போதும் ஆதரித்து வந்துள்ளது. பிடல், சே இந்தியா வருகை தந்த போது, கட்சித் தலைவர்கள் நேரில் சந்தித்தது, கியூபாவிற்கு தூது குழுக்கள், நட்புறவு பயணங்கள், மாநாடுகள் என எப்போதும் கட்சி கியூபாவை ஆதரித்தே வந்துள்ளது.

நெருக்கடியான தருணங்களில் கட்சி இடதுசாரி, தேசபக்த இயக்கங்களோடு இணைந்து நேரடி உதவிகளையும் கடமையாக செய்துள்ளது.

சே மகள் இமல்டா மாநில கட்சி அலுவலகம் பாலம் இல்லத்தில் அவரே கூறியது வரலாற்று செய்தி

நேபாளம், பாகிஸ்தான், வங்கதேசம் என இன்நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை கட்சி ஆதரித்து வந்துள்ளது. அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களை ஆதரித்து வந்தது. இந் நாடுகள், இந்தியாவின் நட்புறவு பேன பல்வேறு முயற்சிகளில் கட்சியை எப்போதும் ஈடுபட்டு வந்தது.

இந்தியா, சோவியத் நட்புறவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்று நெடுகிலும் ஆதரித்தே வந்துள்ளது.

இந்தியாவில் அணிசேரா கொள்கையை கட்சி ஆதரித்தது. ரமேஷ் சர்மா,மல்கோத்ரா விண்வெளி பயணங்களுக்கு நாடு முன்னுரிமை அளிக்க கட்சி தீர்மானங்கள் மூலம் வலியுறுத்தியது.

இந்தியா, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளோடும், மேற்குலகத்துடன் ராணுவ கூட்டணிக்குள் சென்று விடாமல் தடுக்க, எப்போதும் கடமையாற்றி உள்ளது நெய்வேலி சுரங்க தொழிற்சாலை, பிலாய், பொடோரோ , கூடங்குளம் அணு உலை என கனராக , நுட்பவியல் மற்றும் விண்வெளி ஆய்வுகள் என ரஷ்யாவுடன் இந்தியா நெருக்கம் கொண்டதை கட்சி பகிரங்கமாக ஆதரித்து வந்துள்ளது.

இப்படி ஏராளமான அரசியல் பங்களிப்புகளையும், விடுதலை இயக்கங்கள் பொருட்டு பல ரகசிய பங்களிப்புகளையும், தனது சர்வதேச கடமையாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்துள்ளது.

பாட்டாளி வர்க சர்வதேசியம் மட்டுமே , மனித குல முழு நிறை விடுதலைக்கானது. ஒற்றுமைக்கானது. ஏகாதிபத்தியமும், பாசிசமும், முதலாளித்துவமும், போருக்கானது. சுரண்டலுக்கானது.

அடுத்த தலைமுறையின் திசைவழி லெனின் அது சர்வதேசியமே !

மகத்தான இந்த வழிதடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 100 ஆண்டுகள் பெருமிதம் !

கம்பீரம் ! பெரும் மகிழ்ச்சி ! ! முன்னேறுவோம் ! !


எம்.ரவி

**1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை இந்தியாவில், உத்தர பிரதேச மாநிலம், கான்பூர் நகரில் சென்னை மாகணத்தை சேர்ந்த தோழர் ம.சிங்காரவேலர் தலைமையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது.**

# வீர தீர தியாகங்கள் நிறைந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு



வரலாற்று புகழ்மிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தற்போது நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு என்பது இந்தியப் புரட்சி இயக்கத்தின் புகழ்மிக்க போராட்டங்களின் வரலாறாகும்.

இந்தியாவில் ஒடுங்கியும், ஒடுக்கப்பட்டும் கிடந்த கோடான கோடிக்கணக்கான மக்களின் விடுதலைக்காகவும், அவர்களின் நல்வாழ்வுக்காகவும் நடத்திய போராட்டங்களின் வீர தீர தியாக வரலாறாகும்.

அடிமைப்பட்டு கிடந்த இந்திய மக்களுக்கு முழு விடுதலை வேண்டும் என்ற முழக்கத்தை முதன் முதலில் முன் வைத்ததோடு, விடுதலைப் போரில் அளப்பரிய தியாகங்களை செய்த பெருமையைக் கொண்டது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

உலகைக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதிலும், மனிதர்களைக் கொன்று குவிக்கிற மதவெறி வகுப்புவாதத்தையும் எதிர்ப்பதிலும் முன்னணிப் படையாக விளங்குவது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

தேச மக்களின் ஒற்றுமைக்காகவும், தேசிய ஒருமைப்பாட்டிற்காகவும் களப்பலி கொடுத்து போராடி வரும் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

பலமுறை தடைகள், அடக்குமுறைகள்,சிறை, சித்திரவதைகள், தூக்கு, துப்பாக்கிச் சூடு என பல கொடுமைகளுக்கு ஆட்பட்ட போதும் கட்சியைக் களைத்து விட்டு ஓடி ஒளிந்து கொள்ளாமல் வீறு கொண்டெழுந்து அஞ்சாது, அயராது இயங்கி வரும் வீரம் செறிந்த தியாகத்தீயில் புடம் போட்ட இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்திய மக்களை முதன்முதலாக வர்க்கங்களாக திரட்டிய கட்சி, தொழிலாளிகள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மாதர்கள், கலைஞர்கள், அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், ரயில்வே உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்கள் என ஒவ்வொரு அமைப்புகளையும் கட்டி வளர்த்த கட்சி.

இந்தியாவில் வேரூன்றியுள்ள சாதியத்தை ஒழிக்கவும், வர்க்க பேதங்கள் மறையவும், சமூக நீதியை நிலைநாட்டவும் போராடிவரும் கட்சி.

மதச்சார்பற்ற கொள்கை வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவற்றோடு, இந்தியாவின் மனிதநேய மரபின் பாதுகாவலனாக திகழும் கட்சி.

அனைத்து வகையான அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிரான கட்சி.

இந்தியாவில் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், பெண் உரிமைகளையும் பாதுகாப்பதற்காகப் போராடிவரும் கட்சி.

லஞ்ச லாவண்யத்திற்கு அடிபணியாத, ஊழல் முறைகேடுகளுக்கு எதிரான, அப்பழுக்கற்ற, நேர்மையான அரசியல் கட்சி.

உலகில் தலைசிறந்த தத்துவமான மார்க்சீயத்தையும், அதனை மேலும் செழுமைப்படுத்திய லெனினியத்தையும், அடிப்படையாக கொண்டு இயங்கி வரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் ஈடு இணையில்லாத அரசியல் கட்சி.

மானுட மேம்பாட்டிற்கான பண்பாட்டுப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் புரட்சிகர இயக்கம்.

இவ்வாறு வீர தீர தியாகங்கள் நிறைந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் துவங்கப்பட்டதற்கான வரலாற்றுக் காரணத்தையும் கடந்த நூறாண்டு காலம் அது கடந்து வந்த வரலாற்றுப் பாதையையும் புரட்டிப் பார்ப்போம்.

### உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றி வளர்ந்த சுருக்க விவரம்:

உலகில் மனித சமுதாயம் உருவாகி வளர்ச்சியடைந்து வந்த காலகட்டத்தில் ''மனிதர்கள் துன்பமில்லாமல் இன்பமாக வாழ வேண்டும்''. ''எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும்'' என்ற கருத்துக்கள் கனவாகவும், கற்பனையாகவும் இருந்து வந்தன.

கண்ணீருக்கு பதிலாக புரட்சியையும், கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் பதிலாக அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு மார்க்சிய தத்துவம் உருவானது. இந்த மார்க்சியத்தை நடைமுறைப்படுத்த கார்ல் மார்க்ஸும், பிரடெரிக் ஏங்கல்ஸும் சில புரட்சிகர சிந்தனையாளர்களுடன் இணைந்து 1847 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் தேதி ''கம்யூனிஸ்ட் லீக்'' என்ற அமைப்பை இங்கிலாந்து தலைநகர் லண்டனில் துவக்கினர்.

இதன் கொள்கை பிரகடனமாக, வேலைத்திட்டமாக ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' 1848 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல நாடுகளில் தொழிலாளர்களுக்கான அமைப்புகள் உருவாகின.

1864ல் முதலாவது கம்யூனிஸ்ட் அகிலம் அமைக்கப்பட்டது. 1872 வரை அது செயல்பட்டது. 1883ல் கார்ல் மார்க்ஸ் மரணமடைந்து விட்டார். 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவில் எட்டு மணி நேர வேலைக்கான உழைக்கும் மக்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் நடைபெற்றன.

1889 ஆம் ஆண்டு மாமேதை ஏங்கல்ஸ் தலைமையில் இரண்டாவது அகிலம் அமைக்கப்பட்டது. 1895ல் ஏங்கல்ஸ் மரணமடைந்து விட்டார். அவருக்கு பின்னரும் அகிலம் 1914 ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. 1914ல் முதலாவது உலகப்போர் நடைபெற்ற காலகட்டத்தில் அந்த அகிலம் கலைக்கப்பட்டது.

ருஷ்யாவில் 1917 நவம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற சோசலிசப் புரட்சி வெற்றி வாகை சூடியது. இந்தப் புரட்சியின் தாக்கத்தால் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றின. 1919 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் தேதி சோவியத் யூனியன் தலைநகர் மாஸ்கோவில் மாமேதை லெனின் தலைமையில் மூன்றாவது அகிலம் அமைக்கப்பட்டது.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது:

இந்த சூழலில்தான் இந்தியாவில் நடந்து வந்த விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட தேச பக்தர்களின் மத்தியில் ருஷ்யாவில் நடந்த சோசலிசப் புரட்சியின் வெற்றியும்,சோவியத் யூனியனில் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கு உரிய வாய்ப்பு ஏற்பட்டது.

1919 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் இந்தியாவில்பலபுரட்சிகுழுக்கள்உருவாகின. அதேபோல், வெளிநாடுகளுக்கு சென்ற இந்தியர்கள் சிலர் புரட்சி குழுக்களை ஏற்படுத்தினர். இத்தகைய புரட்சியாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுவதற்கு புரட்சிகரமான கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டி அமைக்க வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை எடுத்தனர்.

1922–23 ஆம் ஆண்டுகளில்

1) சென்னை மாகாணத்தில் தோழர் எம்.சிங்காரவேலர் அவர்கள் தலைமையில் ''இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சி''

2) பம்பாய் மாகாணத்தில் தோழர் எஸ்.ஏ.டாங்கே அவர்கள் தலைமையில் ''இந்திய சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சி''

3) கல்கத்தா மாகாணத்தில் தோழர் முசாபர் அகமது அவர்கள் தலைமையில் ''தொழிலாளர் விவசாயிகள் கட்சி''

4) லாகூர் மாகாணத்தில் தோழர் குலாம் உசேன் அவர்கள் தலைமையில் ''இன்குலாப் குழு''

ஆகிய கட்சிகளும் வேறு பல இடங்களில் தனிநபர்களும் கம்யூனிசச் சிந்தனையோடு செயல்பட்டு வந்தனர்.

1925 ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் ஜோசப் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் மாநாட்டில் ''இந்தியாவில் இயங்கி வருகிற தனித்தனி கம்யூனிஸ்ட் குழுக்களும் மற்றும் தனி நபர்களும் இணைந்து ஒரு புரட்சிகர கட்சியை துவங்க வேண்டும் என வேண்டுகோள் வைக்கப்பட்டது.

இந்த சூழலில், சத்திய பக்தா என்பவர் கான்பூரில் தேசம் தழுவிய அளவில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கான மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பின் பேரில், கலந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.. சென்னை மாகாணத்தில் இருந்து சிங்காரவேலு செட்டியார், கிருஷ்ணசாமி அயங்கார், காமேஸ்வார் ராவ், பம்பாய் மாகாணத்தில் இருந்து எஸ்.வி.காட்டே, ஆர்.எஸ்.நிம்ப்கர், ஜே.பி.பாகர்ஹட்டா, கே.என்.ஜோக்லேகர், ஜான்சியிருந்து அயோத்யாபிரசாத், பஞ்சாபிலிருந்து சந்தோஷ்சிங், லாகூரில் இருந்து ஹசான், ராம்சந்தா, கல்கத்தாவில் இருந்து முசாபர் அகமது,ராதா மோகன் கோகுல்ஜி, மணிபூஜன் முகர்ஜி, சந்தோஷ் குமாரி குப்தா, ஜிதேந்திரநாத் மல்லிக், ஐக்கிய மாகாணத்தைச் சார்ந்த ஹஸ்ரத் மொகானி, கான்பூரைச் சார்ந்த சத்திய பக்தா (மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தவர்) ஆகியோரும், மேலும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் என 500க்கும் மேற்பட்டவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி துவங்கி 28ஆம் தேதி வரை கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு கான்பூரில் நடைபெற்றது. வரவேற்பு குழுவின் தலைவர் மவுலானா ஹஸ்ரத் மொகானி பிரதிநிதிகளை வரவேற்று பேசினார்.

''இந்தியாவிற்கான சுதந்திரத்தை முழுமையான சுதந்திரமாகவும், அதை நியாயமான வழிமுறைகள் மூலம் வென்றெடுப்போம்.என்றும் விடுதலைக்குப் பின்னர் சோவியத் குடியரசின் வடிவத்தில் சுயராஜ்யம் அமைத்திடுவோம்'' என்றும் வரவேற்புரையில் மொகானி கூறினார்/

வரலாறு தொடர்கிறது...

தொடர்புக்கு: 9442736668

## வினாடி - வினா

1 சர்வதேச அமைப்பான இரண்டாம் அகிலம் எப்பொழுது நிறுவப்பட்டது?

2 இரண்டாம் அகிலத்தின் முதல் கூட்டத்தில் பங்கேற்ற முக்கிய தலைவர் யார்?

3 இரண்டாம் அகிலத்தின் காலம் எது?

4 இரண்டாம் அகிலத்தின் குறிப்பிடத்தக்கப் பணிகளில் ஒன்று?


5 இரண்டாம் அகிலத்தின் குறிப்பிட்டத்தக்க மற்றொரு பணி?

6 இரண்டாம் அகிலத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்த சவால் எது?

விடைகள் 11 ஆம் பக்கம்



# இருளில் தள்ளப்பட்ட வாழ்க்கை விடியலைத் தந்த பிஎஸ்ஆர்



கோ. பழனிச்சாமி

**நூறாண்டு காலம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டத்திலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்கள் எண்ணற்றவை.**

காவிரிப் படுகை மாவட்டங்களில், 1943 முதல் நடத்திய வீரம் செறிந்த போராட்டங்களை இன்றைய தலைமுறை அறிந்திருக்காது. அன்று நிலவிய நிலப்பரப்புத்துவ. சாதி மேலாதிக்க நிலைமை கொடூரமானது. அது இன்று பெரும்ளவு மாறி இருக்கிறது என்றால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்களும், உயிரை துச்சமாக மதித்து களமாடிய கம்யூனிஸ்ட் வீரர்களும் தான் அதற்குக் காரணம்.

போலீஸ் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகி, வெஞ்சிறைக் கொடுமைகளுக்கு ஆளாகி, சிறைச் சித்திரவதைகளால் செத்து மடிந்து, ஆண்டைகளின் குண்டர்களாலும், அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் குரோதத்தால் மாற்று கட்சியினராலும் கொலை செய்யப்பட்டு தமது உயிரை இழந்து, அடிநிலை மக்களின் உரிமைகளை உயர்த்திப் பிடித்த அந்த மாவீரர்களுக்கு பொங்கியெழும் நன்றியுணர்வுடன் அஞ்சலி செலுத்த வேண்டும். அவர்கள் வழியில் நாட்டையும் மக்களையும் பாதுகாத்திட பணியாற்றுவோம் என அந்த தியாகிகள் பெயரால் சபதம் ஏற்போம்!

ஆற்று நீரோட்டத்தோடு சேர்ந்து மிதந்த கட்சி அல்ல, நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போட்டு வளர்ந்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

மிகப்பெரிய நிலப் பிரபுகளின் ஆதிக்கத்தில் காவிரி டெல்டா இருந்தது. 1936 ஆம் ஆண்டு நிலைமையில், எவ்வளவு சொத்துக்கள் அவர்களுக்கு இருந்தது தெரியுமா?

## நிலப்பிரபுகளின் சொத்து விவரம்

வடபாதிமங்கலம் முதலியாரின் குபேர குடும்பத்துக்கு 15,000 ஏக்கர். குன்னியூர் சாம்பசிவ ஐயருக்கு நஞ்சை 6000 ஏக்கர், தென்னந்தோப்பு 500 ஏக்கர். ராவ்பகதூர் நெடும்பலம் சாமியப்பா முதலியாருக்கு 2500 ஏக்கர் நன்செய். கே ஜி எஸ் எஸ்டேட் நஞ்சை 4000 ஏக்கர். கேடிகே எஸ்டேட் நஞ்சை 3000 ஏக்கர். வலிவலம் தேசிகர் நஞ்சை 1500 ஏக்கர். பூண்டி வாண்டையார் 1000 ஏக்கர் நஞ்சை. மூலங்குடி கோபாலகிருஷ்ண ஐயர் நன்செய் 2000 ஏக்கர். உக்கடை தேவர் நன்செய் 1000 ஏக்கர். கபிஸ்தலம் மூப்பனாருக்கு 1000 ஏக்கர் நன்செய். இந்தப் பெரும் நிலப்பரப்புகளின் கைகளில் தான் தஞ்சை மாவட்ட மக்களின் வாழ்க்கையே அடங்கியிருந்தது.

கோவில்களுக்கும் மடங்களுக்கும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நன்செய் நிலங்களும் இருந்தன குறிப்பாக ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்ட உத்திராபதி மடத்துக்கு 2000 ஏக்கர் நன்செய் இருந்தது.

## இருட்டுக்குள் கிடந்தது வாழ்க்கை

இவர்களது நிலங்களில் 12 லட்சம் முதல் 15 லட்சம் வரை, பட்டியலின மக்கள் வேலை செய்து வந்தனர். கூலி 2 படி நெல் கொடுப்பார்கள். சூரியன் உதிப்பதற்கு முன்பே வயலுக்கு வந்து, சூரியன் மறைந்ததற்குப் பின்பே வீடு திரும்ப வேண்டும். வேலை தவிர்த்த மற்ற வாழ்க்கை அனைத்துமே இருட்டில் தான்.

உடல் நலமில்லை என்றால் மணியக்காரருக்கு சொல்லி, அவர் விரும்பினால் விடுப்பு கொடுப்பார். மணியக்காரர்களிடம் சொல்லாமல் வீட்டில் இருந்து கொண்டால், அந்த தொழிலாளி தனது மனைவியை தோளில் தூக்கிக் கொண்டு ஓடும்படி தண்டனை கொடுப்பார்கள். மணியக்காரரின் பேச்சை இடை மறித்து பேசக்கூடாது. எள்முனை அளவு எதிர்ப்பு தெரிவித்தாலும் சவுக்கால் அடிப்பார்கள். சாணியைக் (சாணி பால்) கரைத்து குடிக்க சொல்வார்கள்.





புறம்போக்கு நிலங்கள், வாய்க்கால், ஓடை ,ஆற்றுக்கரை ஓரங்களில் களத்து மேடுகளுக்கு அருகில் இந்தப் பட்டியலில் மக்கள் ஓலைக் குடிசை கட்டி வசிப்பார்கள். ஈரத் தரை. படுக்கப் பாயும் இருக்காது. வைக்கோலைப் பரப்பி அதன் மீது படுக்க வேண்டும். மழைக்காலத்தில் ஒழுகும், ஆற்றுத் தண்ணீர் வீட்டுக்குள் புகுந்துவிடும்.

வாழ்க்கை முழுக்க உழைத்தாலும், இந்தச் சூழலை மாற்றிக் கொள்ள அவர்களால் முடியாது. இதுகுறித்து மணியக்காரரிடம் முறையிட்டாலும், உடல் வீங்க கொழுக்கட்டை அடி அடிப்பார்கள். அடித்து, அடித்து சிறுநீரைக் குடிக்க வைப்பார்கள்.

## கோணிச் சாக்குதான் ஆடை:

வருடத்தில் ஆணுக்கு நாலு முழ வேட்டி ஒன்றும், பெண்களுக்கு சேலை ஒன்றும் கொடுப்பார்கள். மாற்று துடி இல்லாமல் ஆண்களும் பெண்களும் பேட்டி புடவை விழுந்து விட்டால் கோணிச் சாக்குகளைக் கட்டுவார்கள். மாற்றுப் புடவை இல்லாத பெண்கள் குளித்துவிட்டு, சேலையின் ஒரு தலைப்பை வெளியிலும் மறு தலைப்பை தனது உடலிலும் சுற்றி காய வைப்பார்கள்.

பெண்களுக்கு மேலாடை கிடையாது. புடவையை இடுப்பை சுற்றிக் கட்டிக் கொண்டு வயல் வேலை செய்ய வேண்டும். அது முழங்காலுக்கு கீழே இறங்க கூடாது. பெண் குழந்தைகள் நிலக்கிழார்களின் வீடுகளில், வீட்டு வேலை பார்க்க வேண்டும். வீட்டு வாசல் கூட்டுவது, மாட்டு கொட்டகை சாணத்தை அள்ளி சுத்தம் செய்வது எல்லாம் அவர்கள் தான். வயதுக்கு வந்து விட்டால் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாக வேண்டும். அதை வெளிப்படுத்திக் கொள்ளவும் முடியாது. ஆண் குழந்தைகள் மாடு மேய்க்கப் போக வேண்டும்.

விவசாயக் கூலிவீட்டில் மண்பானைதான் இருக்கும். குளத்திலோ ஊர்க் கிணற்றிலோ அவர்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது. தீட்டு ஒட்டிக் கொள்ளுமாம். ஆற்றிலும் வாய்க்கால்களிலும் ஓடி வரும் தண்ணீரைக் கொண்டுதான் அவர்கள் சமைப்பது. குடிப்பது எல்லாம்.

## காற்றும் படக்கூடாது

நிலப் பிரபுக்களும் மடாதிபதிகளும் சாலையில் நடந்து சென்றால், இவர்கள் மீது பட்ட காற்று அவர்கள் மீது படும் நிலையில், பட்டியலின மக்கள் நிற்கவோ நடக்கவோ கூடாது. வடக்கு பக்கம் காற்றடித்தால், இவர்கள் தெற்கே சென்று விட வேண்டும். தெற்கிலிருந்து காற்று அடித்தால், வடக்கு பக்கம் வந்து விட வேண்டும்.

நிலப் பிரபுக்களும் மடாதிபதிகளும் வண்டியில் வந்தால், இந்த மக்கள் துண்டை தரையில் போட்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கும்பிட வேண்டும்.

கருவுற்ற பெண் தொழிலாளி, குழந்தை பிறக்கும் வரை வயலில் வேலை செய்ய வேண்டும். பலரது பிரசவம் வயல்வெளியில் நடந்துள்ளன.குழந்தை பிறந்த சிறிது நாளில் வயல் வேலைக்கு வர வேண்டும். குழந்தையை வரப்புகளில் உள்ள மரக்கிளைகளில் துணித் தொட்டில் போட்டு கட்டி விட்டு வேலை செய்ய வேண்டும். குழந்தை பசிக்கு அழுதாலும், கேட்டுக் கொண்டே வேலை செய்தாக வேண்டும். மணியக்காரிடம் அனுமதி கிடைத்தால் தான் சென்று பால் கொடுக்க வேண்டும். தாய் பக்கத்திலேயே வேலை செய்து கொண்டிருக்கும் போதே, பால் இன்றி பிள்ளை அழுதழுது மாண்டு போன நிகழ்வுகளும் உண்டு.

## ஆற்றில் விடப்பட்ட உடல்கள்

இந்த மக்களின் வீடுகளில் மரணம் நிகழ்ந்து விட்டால், புதைப்பதற்கு இடுகாடு செல்ல பாதை கிடையாது. தண்ணீரில் இறங்கித்தான் செல்ல வேண்டும். மழைக்காலங்களில் பிணக்குழி வெட்டும் போது தண்ணீர் ஊறும். அந்தக் சேற்றுக்குள் தான் உடலைப் புதைக்க வேண்டும். தரைக்கு மேல் தண்ணீர் நிற்கும் போது, குழி தோண்டக் கூட முடியாது. அப்படியே உடலை ஆற்றில் விட்டுவிடுவார்கள்.

## தீண்டாமைக் கொடுமைகள்

டீக்கடையில், வைக்கப்பட்டுள்ள தேங்காய் சிரட்டையை எடுத்து ஏந்தினால் அதில் டீ ஊற்றுவார்கள். அதைக் குடித்து விட்டு கழுவி வைக்க வேண்டும். தண்ணீர் கேட்டால் வாழைத்தண்டு பட்டையில் ஒரு பக்கம் தண்ணீர் ஊற்றுவார்கள் மறுபக்கம் தேங்காய் சிரட்டையில் வாங்கி குடிக்க வேண்டும். பள்ளிகளின் அவல நிலை: பள்ளிகளில் மேல் சாதிக்காரர்கள் நில உடமையாளர்கள் குழந்தைகள் தான் படிக்க முடியும். பட்டியலின மக்களின் பிள்ளைகளைப் படிக்க விடமாட்டார்கள். இதனை ஆண்டுதோறும் மணியக்காரர்கள் கண்காணித்து வருவார்கள். குழந்தைகளை வெளியூருக்கு அனுப்பியும் படிக்க வைக்க முடியாது.

## குத்தகை விவசாயிகளின் நிலை

கிழக்கிழார்கள் மடாதிபதிகளின் நிலங்களில் குத்தகைதாரர்கள் விவசாயம் செய்வார்கள். இவர்கள் அனைவரும் பிற்படுத்தப்பட்ட சாதியினர். அறுவடை முடிந்த பின்பு களத்து மேட்டில் நில உடமையாளருக்கு முக்கால் பங்கு, விளைவித்த குத்தகைதாருக்கு கால் பங்கு நெல்லை அளந்து கொடுப்பார்கள். ஏதாவது மறுத்து பேசினால் குத்தகை மாற்றப்பட்டு விடும். வரும் வருமானம் உழவுக்கு கூடப் போதாது.

## வந்தார் பி எஸ் ஆர்

விவசாயக் கூலிகள் மற்றும் குத்தகைதாரர்களின் இந்த இழிநிலை வாழ்க்கையை மாற்றுவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தோழர் பி சீனிவாசராவ் அவர்களை தஞ்சைக்கு அனுப்பியது. 1938 ஆம் ஆண்டு பிஎஸ்ஆர் தஞ்சைக்கு வந்தார்.

நாகை மாவட்டம் கீழ்வேளூரில் மணலூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கு ஆண்களைப் போல சட்டை வேட்டி உடுத்திக்கொண்டு, தலை முடியை கிராப் வெட்டிக்கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காகப் போராடிக் கொண்டிருந்தார் கே மணியம்மையார்.

அந்த மங்கையர் குல மாணிக்கத்தின் வீட்டுக்குத்தான் முதலில் பி எஸ் ஆர் வந்தார். மணி அம்மையார், சபாபதி முதலியார், பி குருசாமி, பி குமாரசாமி, வேட்டைகாணிருப்பு கோவிந்தசாமி உள்ளிட்டு 15 பேரை கொண்ட விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. தலைவராக சபாபதி முதலியாரும் துணைத் தலைவராக கே மணியம்மையாரும் தேர்வு செய்யப்பட்டனர்.

சங்கத்தை விரிவுபடுத்துவதற்காக, தோழர்கள் பி சீனிவாச ராவ், சி எஸ் சுப்பிரமணியம், நெடுங்காடி ராமச்சந்திரன், சோழ பாண்டி ராமானுஜம், ராதா நரசிம்மபுரம் வெங்கடேசன், மன்னை அமிர்தலிங்கம், தங்கவேலு உடையார், மணலி கந்தசாமி, எம் காத்தமுத்து, ஜாம்பவானோடை சிவராமன், இரணியன், களப்பால் குப்புசாமி, ஆம்பலாபட்டு ஆறுமுகம், ஏ எம் கோபு, மலேயா எம்எஸ் கணபதி, பரக்கலைக்கோட்டை தங்கவேல் ஆகியோர் 1938 முதல் 1943 வரை மாவட்ட முழுமையையும் பயணம் செய்தனர்.

குத்தகைதாரர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் தெம்பூட்டி சங்கத்தில் சேர வேண்டியதன் அவசியத்தை விளக்கினர். இந்த ஏழு நிலைக்கு அவர்கள் ஒன்றிணைந்தால் ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என நம்பிக்கை வளர்த்தனர்.

## விவசாயிகள் சங்கம் உருவானது

1943 ஜனவரி 1ஆம் தேதி தென்பறையில் மாநாடு நடைபெற்று, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (கிசான் சபா) உருவாக்கப்பட்டது. தலைவராக ஆர் அமிர்தலிங்கம், செயலாளராக மணலி சி கந்தசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 1943 மார்ச் 28ஆம் தேதி நிலப்பிரபுத்துவ அடிமைத்தனக் கொடுமைகளை எதிர்த்து 400 ஆண்களும் 200 பெண்களும் பேரணி நடத்தினர்.

இருளிலேயே வாழ்ந்து வந்த அந்தப் பாவப்பட்ட மக்களுக்கு அன்றுதான் விடிந்தது!

கொத்தடிமை வாழ்வை மாற்றி அமைப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தோழர்களும் கொடுத்த விலை சாமானியமானதல்ல. இழைக்கப்பட்ட கொடுமைகள் அனைத்தையும் தாண்டி, கம்பீரமாக நெஞ்சுயர்த்தி, பிற்பட்ட சாதியினரும், பட்டியலின மக்களும் கரம் கோர்த்து எழுந்து நின்றார்கள்.

அதில் பங்கேற்ற ஒவ்வொரு தலைவரின், ஊழியரின் வாழ்க்கையும் ஒவ்வொரு காவியமாகும்.

விரிவாக இல்லாவிட்டாலும், அவர்களைப் பற்றிய வாழ்க்கை குறிப்புகள் இனிவரும் இதழ்களில் தொடர்ந்து வரும்.

தொடர்புக்கு: 9443308292

# போர்க்களத்தில் பெண்கள்



**1925இல் அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்காகவும், விவசாயிகளுக்காகவும், பெண் விடுதலைக்காகவும், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும். சமூக ஏற்றத்தாழ்வுகளை போக்கி, சாதி, மத வேறுபாடுகளை கலைந்து, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கவும், எண்ணற்ற போர் குணம் மிக்க போராட்டங்களை நடத்தி, களம் கண்டு வெற்றிவாகை சூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை அடைவதிலும், கொண்டாடுவதிலும் பெருமிதம் கொள்கிறேன்.**

கட்சியின் கொள்கை கோட்பாடுகளை மக்களிடம் சேர்க்க அரும்பாடுபட்டு, ரத்தம் சிந்தி, இன்னுயிர் நீர்தத மகத்தான தலைவர்களுக்கும், வரலாற்றுப் பாதையில் தியாகத் தழும்புகளை வாழ்க்கையாக ஏற்று மறைந்த தலைவர்களுக்கும் வீர வணக்கத்தை செலுத்துகிறேன்.

தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற ஏராளமான பெண்கள். ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தி உயர்த்தி பிடிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பால் ஈர்க்கப்பட்டு செங்கொடி ஏந்தி பணியாற்றினார்கள்.

மிகச்சிறந்த வீராங்கனைகளாக திகழ்ந்த கிளாரா ஜெட்கின், ரோசா லக்சம்பர்க், குரூப்ஸ் கயா போன்ற தலைவர்களின் வரலாற்று பின்னணியில், இந்தியாவில் முன்னணி பாத்திரம் வகித்த தலைவர்கள் கல்பனா தத், அஸ்ரா பேகம், விமலா டாங்கே, விமலா பரூக்கி, பிரமிளா லூம்பா, தாரா ரெட்டி, ரேணு சக்கரவர்த்தி, கீதா முகர்ஜி, சரளா சர்மா, ரஞ்சனா ராய் கார்த்தி சக்கரவர்த்தி, அமர்ஜித் கவுர், ஆனிராஜா ஆகியோர் கம்யூனிஸ்ட் கட்சியின் பல்வேறு பொறுப்புகளிலும், நாடாளுமன்ற அவைகளிலும் மிகச் சிறப்பாக களப்பணி ஆற்றி கட்சிக்கு வலிமையும், பெருமையும் சேர்த்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழக படிப்பிற்காக இங்கிலாந்து சென்ற சிறப்புமிக்க தோழர் பாரதி கிருஷ்ணன் மாணவர் பெருமன்ற அமைப்பில் ஈர்க்கப்பட்டு செயலாற்றினார்கள். 1941 இல் இந்தியா திரும்பி கட்சிப்பணியில் ஈடுபட்டார்கள். கட்சித் தலைவர்கள் அனைவரும் சிறையில் இருந்த பொது மாணவர் இயக்கத்தை தமிழக முழுவதும் பலப்படுத்தினார்கள்.

மாநிலங்களவை, மக்களவை உறுப்பினராக மூன்று முறை இருந்து சிறப்பாக செயலாற்றினார்கள். உழைக்கும் பெண்களுக்காகவும், தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் போராடிய சிறந்த கம்யூனிஸ்ட் வீரங்கனையாக இருந்து கட்சிக்கு பெருமை சேர்த்தார்.

கீதா முகர்ஜி 1980 முதல் 2000 வரை நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட்டார். 33 சதவீத இட ஒதுக்கீட்டுக்காக போராடினார். நாடாளுமன்ற பணியிலும், மக்கள் பணியிலும் திறம்பட செயல்பட்ட பெருமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடைத்தது.

தோழர் சரஸ்வதி சுப்பையா ஒன்றுபட்ட தமிழகமாக இருந்த போது (இன்று புதுச்சேரி மாநிலம்) மாநில கவுன்சில் உறுப்பினராக நீண்ட காலம் செயல்பட்டார்கள். புதுவையில் முதல் மேயர் பொறுப்புவகித்து சிறப்பாக செயல்பட்ட பெருமைக்கு உரியவர். எட்டு மணி நேரம் வேலை உத்தரவாதத்தை புதுவையில் கொண்டு வந்த ஒப்பற்ற தலைவர் தோழர் சுப்பையா அவர்களின் இணையராக இருந்து கட்சி பணியாற்றினார். ஏராளமான பெண்களை அணிதிரட்டியவர். வேலைவாய்ப்பு உருவாக்கியவர். சிறந்த கம்யூனிஸ்ட் லட்சியவாதியாக திகழ்ந்தவர்.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் ஆணுக்கு நிகராக இரவு பகல் பாராது சாதாரண அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, குறிப்பாக பெண்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றிய வீரமிக்க தோழர் மீனாட்சி சுந்தரத்தம்மாள் அவர்கள் நீண்ட வரலாற்றுக்கு சொந்தமானவர். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போதும், தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போதும் அவர்களை மீட்டெடுக்கவும், கட்சியை காப்பாற்றவும் அரும்பாடுபட்ட தலைவர் ஆவார்.

ராமநாதபுரம் மாவட்டம் சிறந்த கம்யூனிஸ்ட் தலைவரின் அன்னையார் மீனா மங்கள யோகேஸ்வரன் அவர்கள். தனது மகன் படிப்பதற்கு ஊக்கமளித்து சிறந்த கம்யூனிஸ்ட் ஆக உருவாக்கினார். அவர் கம்யூனிஸ்டாக இருப்பதற்கு பெருமைப்பட்டதோடு, அவரும் சேர்ந்து கம்யூனிஸ்ட்டாக செயல்பாட்டார். கார்க்கி நாவலில் வரும் தாய் போன்று செயல்பட்டதால், முகமது அலி அவருக்கு கம்யூனிஸ்ட் அன்னை என்று பட்டம் சூட்டினார்.

1942 ல் வெள்ளையனை வெளியேறு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, 15 மாத காலம் வார்தா, நாகபுரி, சபல்பூர் சிறையில் தண்டனை களித்தவர் மீனா கிருஷ்ணமூர்த்தி. அவருக்கு அப்போது வயது 12.. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மதுரைக்கு வந்த தோழர் மீனா கம்யூனிஸ்ட் கட்சியின் பால் ஈடுபாடு கொண்டு தோழர் ஜானகி அம்மாளோடு இணைந்து பணியாற்றினார். வங்கப் பஞ்ச நிவாரணம், ரேஷன் கார்டு விநியோகம், கள்ள மார்க்கெட் ஒழிப்பு மற்றும் மாதர் சங்க பணிகளில் தீவிரமாக பணியாற்றினார்.

பல நூற்றாண்டுகளாக சானாதான கொடுமைகளுக்கும், சமயக் கொடுமைகளுக்கும், சமூக கொடுமைகளுக்கும், புறக்கணிப்புக்கும் உள்ளாகி பெண்கள் ஒடுக்கப்பட்டு கிடக்கிறார்கள். அக் கொடுமையிலிருந்து மீள்வதற்கு பெண்கள் கம்யூனிஸ்ட் போராளிகளாக மாறி உள்ளார்கள். அப்படி மாறிய வரலாற்றுக்கு சொந்தமானவர் மணலூர் மணியம்மை. தமிழ்நாடு சோசியலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியாக மாறிய போது கம்யூனிஸ்ட் ஆனார்.

கட்சி தடை செய்யப்பட்டபோது 1949 இல் கைது செய்யப்பட்டார். கடலூர், வேலூர் சிறைகளில் இருக்கிறபோது தோழர்கள் கே.பி. ஜானகி,சாஷாஜி, கீழப்பசலை செங்கொடி காத்த சிகப்பி ஆகியோரின் நட்பு கிடைத்தது. 1951இல் விடுதலை ஆகி வெளியே வந்தபின் ஆர்வமுடன் கட்சி பணியிலும் விவசாய சங்கத்திலும் மன உறுதியூடன்செயல்பட்டார்.

இதுபோன்று ஜனகம் இஸ்மாயில், துல்ஜா ராணி, கோமதி கண்ணப்பன், பரிமளா ஜெகன், மங்களம் சம்பத், ராஜம் வெள்ளியங்கிரி, என்.எஸ். ராஜலட்சுமி, வசந்தா ரத்தினவேலு, மாலா பாண்டியன் ஆகியோர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுப் பாதையில் முன்னணி தலைவராக இருந்து பணியாற்றிய பெருமைக்குரியவர்கள்.

இலக்கியப் பேராசான் ஜீவா அவர்களால் சிராவயலில் நடத்தப்பட்ட ஆசிரமத்தில் சாதி, பாலின வேற்றுமையின்றி நூல் நூற்றுக்கும் நிலையங்கள், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் ஏற்படுத்தப்பட்டது. ஒருமுறை அங்கு வந்த வ.உ.சி அவர்கள் ஆண்களும், பெண்களுடன் நூல் நூற்பதை கண்டு முட்டாதளம் என்று பொங்கினார். அதை எதிர்கொண்ட ஜீவா. பெண்களும் வீரத்திற்கு குறைந்தவர்கள் அல்ல, வாள் ஏந்த வேண்டுமெனில் அவர்களும் ஏந்துவார்கள். எனவே இருவரையும் பிரித்து, பெண்கள் தான் நூல் நூற்க்க வேண்டும் என்பது தவறு என்று வாதிட்டார்.வ உ.சி தனது கருத்தை திரும்ப பெற்றார்.அன்று மாலை வ உ சி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ஜீவா பெண் விடுதலை பற்றி நீண்ட நேரம் உரையாற்றி வ.உ.சியின் பாராட்டைப் பெற்றார்.

ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்தியும், பெண்களுக்கு இழைக்கப்படும் மனுதர்மக் கொள்கைக்கு எதிராகவும், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க கோரியும், பெண்களுக்கு 35 சதவீத இட ஒதிக்கட்டை அமல்படுத்த கோரியும் ஏராளமான இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்தி வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, நூற்றாண்டு கானும் இந்த வேலையில், நாம் ஆக்கபூர்வமான பணிகளை திறம்பட செயல்படுத்தவும்! திசையெங்கும் கொள்கை முழக்கங்களை கொண்டு செல்லவும் சபதம் சபதம் ஏற்போம்!

புரட்சி ஓங்குக!

**பி.பத்மாவதி**
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

## இந்தியாவின் முக்கிய நிகழ்வுகள்

1853 ஏப்ரல் 15 தானே – பம்பாய் இடையே இந்தியாவின் முதல் ரயில் ஓட்டம்

1856 ஜூலை 26 விதவைத் திருமணச் சட்டம் இயற்றப்பட்டது.

1918 ஏப்ரல் 27 இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் எம்.எல்.யூ. துவக்கம்

1919 மார்ச் 18 ரவுலட் சட்டம் அமலானது

1919 ஏப்ரல் 13 ஜாலியன் வாலாபாக் படுகொலை

1920 அக்டோபர் 31 ஏஐடியூசி அமைப்பு தினம்

1923 அக்டோபர் 30 லாலா லஜபதிராய் மீது லாகூரில் காவல்துறை தடியடி

1925 டிசம்பர் 26 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கம்

1928 பிப்ரவரி 3 “சைமனே திரும்பிப் போ” வேலை நிறுத்தம்

1930 மார்ச் 12 மகாத்மா காந்தி தண்டி யாத்திரை தொடங்கினார்

1930 ஏப்ரல் 18 சிட்டகாங் ஆயுதப் புரட்சி

1936 ஜனவரி 15 அகில இந்திய விவசாயிகள் சங்கம் துவக்கம்

1936 ஜூலை 30 புதுச்சேரி 8 மணி நேர வேலை கோரி போராடியதற்காக 12 தொழிலாளர்கள் சுட்டு கொல்லப்பட்ட தினம்

1940 மார்ச் 5 பஞ்சப்படி கோரி பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

1943 மார்ச் 29 கையூர் தியாகிகள் தூக்கிலிடப்பட்ட தினம்

1943 மே 23 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு பம்பாயில் நடைபெற்றது

1946 பிப்ரவரி 18 பம்பாய் கடற்படை புரட்சி துவக்கம்

1946 ஜூலை 4 தெலுங்கானா ஆயுதப்புரட்சி துவங்கியது

1947 ஆகஸ்ட் 15 இந்திய விடுதலை தினம்

1947 ஆகஸ்ட் 29 அம்பேத்கர் தலைமையில் அரசியல் சாசன வரைவுக்குழு அமைப்பு

1948 அக்டோபர் 22 புன்னப்புரா வயலார் கிளர்ச்சி துவங்கியது

1950 ஜனவரி 26 இந்திய குடியரசு தினம்

1952 ஜூன் 2 தீண்டாமை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது

1954 நவ. 1 பிரெஞ்ச் ஆதிக்கத்திலிருந்து புதுச்சேரி விடுதலை

1957 ஏப். 5 தேர்தல்மூலம் கேரளாவில் முதல் கம்யூ. ஆட்சி

1959 ஜூலை 31 கேரள கம்யூனிஸ்ட் ஆட்சியை ஒன்றிய அரசு கலைத்தது

1962 மார்ச் 14 கோவா விடுதலை பெற்ற நாள்

1965 செப்டம்பர் 19 இந்திய பாகிஸ்தான் போர் துவங்கியது

1969 ஜூலை 19 இந்திய அரசு 14 வங்கிகளை தேசவுடைமையாக்கியது

1971 டிசம்பர் 16 வங்கதேசப் போரில் பாகிஸ்தான் சரணடைந்தது

1982 ஜனவரி 19 விடுதலைக்குப் பின் முதல் அகில இந்திய பொது வேலை நிறுத்தம்

1992 டிசம்பர் 6 மதவெறியர்களால் பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினம்

1997 ஜூலை 25ல் இந்தியாவின் குடியரசுத் தலைவராக முதன் முதலில் தலித் சமூகத்தை சர்ந்த கே.ஆர்.நாராயணன் பொறுப்பேற்றார்.

# பெண்ணுரிமைக்கே முன்னுரிமை!



மு.கண்ணகி

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தொழிலாளர் வர்க்கத்தின், உழைக்கும் மக்களின் அரசியல் கட்சி. இதனுடைய இறுதி இலட்சியம், குறிக்கோள் இந்திய நாட்டை சமத்துவச் சமுதாயமாக மாற்றி அமைப்பது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பர் 26 அன்று கான்பூர் தொடங்கப்பட்டது. தொடங்கியபோதே தடை செய்யப்பட்டது. பல்வேறு தடைகளை தாண்டி வீரநடை போட்டு, 2024 டிசம்பர் 26 இல் நூற்றாண்டில் அடி அடியெடுத்து வைக்கிறது.

அது கடந்து வந்த பாதை கடினமானது. கரடு முரடானது. மக்களுக்கான அடிப்படை உரிமைகளை பெறுவதற்கு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை அடைவதற்கு, சமூக நீதி, சமத்துவம், வாழ்வாதார உரிமைகளை வென்றெடுக்க போராட்டக் களம் கண்டு, பல்லாயிரக்கணக்கான தோழர்களை பலி கொடுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சியில் பெண்களுக்கான அமைப்பு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் 1954 ஜூன் 4ல் துவக்கப்பட்டது. அதன் வரலாற்றுப் பாதையில் தமிழகப் பெண்களின் பங்களிப்பு குறித்த ஒரு சிறிய நினைவு கூறுதல் கட்சியின் நூற்றாண்டு விழாவில் பொருத்தமானதாக இருக்கும்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், பின்பும் பெண்களின் விடுதலைக்கு ஏராளமான பெண்கள் குரல் கொடுத்துள்ளார்கள். வீரம் செறிந்த போராட்ட களங்களில் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, உயிர் தியாகம் செய்துள்ளார்கள்.

அரசியல், சமூக பொருளாதார விடுதலை பெறவும். பாலினப் பாகுபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் களைந்து உரிமைகளுக்காகவும், சமத்துவத்தை பெறவும், பெண்கள் ஒற்றுமைக்கான அவசியத்தை உணர்ந்தும் உருவாக்கப்பட்ட அமைப்பு.

நாட்டு விடுதலைக்கான போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையை ஏற்று ஏராளமான போராட்டங்களில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்று, வீர தாய்மார்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

தமிழகத்தில் சட்ட மறுப்பு இயக்கம், கதர் இயக்கம், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், மதுவிலக்கு மறியல், அந்நியப் பொருட்கள் பகிஷ்கரிப்பு போன்ற இயக்கங்களில் தீவிர பங்கு கொண்டு, உயிர் தியாகம் செய்த தில்லையடி வள்ளியம்மை முதல் திருப்பூர் லட்சுமி வரை, சென்னையைச் சேர்ந்த கமலா பாய் லட்சுமண ராவ், அம்புஜம்பால், மீனா கிருஷ்ணசாமி, ஜானகி அம்மாள், பொதுவுடமை இயக்க தலைவரும், தொழிற்சங்க தலைவருமான பார்வதி கிருஷ்ணன், புதுச்சேரி சரஸ்வதி சுப்பையா, குட்டம்மாள் என்கிற மீனாட்சியை சுந்தரத்தம்மாள், மணலூர் மணியம்மை, ஜனகம் இஸ்மாயில், கோமதி கண்ணப்பன், மங்கலம் சம்பத், துல்ஜா ராணி பாலதண்டாயுதம் என்று பெண்கள் பட்டியல் நீளும்.

பெண் விடுதலைதான் தேச விடுதலை. பெண்கள் உழைப்பு, கல்வி, கலாச்சாரம், சாதி, அடக்குமுறை, சுரண்டல் அனைத்தையும் எதிர்கொண்டு பெண்கள் அமைப்பு வீறுகொண்டு எழுந்தது.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டார்கள். முழங்காலுக்கு மேல் சேலை கட்ட வேண்டும். ஜாக்கெட் போட முடியாது. காலையில் சூரிய உதயத்திற்கு முன் வயலுக்கு சென்று, சூரியன் மறைந்த பிறகு வீட்டிற்கு வர முடியும். வேலை செய்யும் போது குழந்தை அழுதால் பால் கொடுக்க முடியாது. குழந்தையின் அழுகுரல், தாயின் உள்ள குமுறல், உழைப்புக்கேற்ற கூலி இல்லை. சாணிப்பால், சவுக்கடி, தீண்டாமை கொடுமை இவற்றையெல்லாம் எதிர்த்து மாதர் சம்மேளனம் போராடியது. ஜனகம் இஸ்மாயில், மணலூர் மணியம்மை தலைமை தாங்கி பெண்களை அணி திரட்டி போராடினார்கள்.

கூலி உயர்வுக்கான போராட்டத்தில் தஞ்சை மாவட்டம் கோட்டூரில் ராஜம்மாள் குண்டடிப்பட்டு இறந்தார்.

தோழர் பி.சீனிவாசராவ் கூனிக் குறுகிக் கிடந்த விவசாயிகளை, விவசாய தொழிலாளர்களைத் திரட்டி நடத்திய எழுச்சி மிகு போராட்டத்தில் பெண்கள் திரளாக கலந்து கொண்டனர். மீனாட்சி சுந்தரத்தம்மாள் தலைமையில் நடந்த கூலி உயர்வு, தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் மாலா பாண்டியனும், பத்மாவதியும் இனைந்து பணியாற்றியுள்ளனர். கால் படி நெல், கூலி உயர்வு கேட்டதற்காக 1968 டிசம்பர் 25ல் கீழ்வெண்மணியில் குழந்தைகள், பெண்கள், முதியோர் உட்பட 44 பேர் உயிரோடு குடிசைக்குள் வைத்து எரித்து கொல்லப்பட்ட சம்பவம். நிலப்பிரபுத்துவ ஆணவத்திற்கும், சாதி வெறிக்கும் சான்றாகும்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய, கணபதியாப்பிள்ளை கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற நடந்த போராட்டத்தில் 184 பெண்கள் ஒரு மாத காலம் சிறை தண்டனை பெற்றனர்.

**பெண்ணுரிமைக்கு முன்னுரிமை!**

தமிழகம் முழுவதும் பெண்கள் பிரச்சனைகளுக்கு பல்வேறு கட்டங்களில், பல போராட்டங்களை இந்திய மாதர் தேசிய சம்மேளனமும் நடத்தி உள்ளது. தலைமறைவு வாழ்க்கையில் பல பெண்கள் பங்கு பெற்றுள்ளார்கள். தலைமறைவாக இருந்த தோழர்களுக்கு உணவளித்துள்ளார்கள். பாதுகாத்துள்ளார்கள். சிறை சென்றுள்ளார்கள், சித்ரவதைகளை அனுபவித்துள்ளார்கள். சதி வழக்குகளில் சிக்கி உள்ளார்கள். அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்ற பெண்களின் வரலாற்றுக்கு வீரவணக்கம் செலுத்துகிறோம்.

இந்திய அளவில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மிகப்பெரிய அளவில் பங்களிப்பை செலுத்தியுள்ளது. பெண்களுக்கு வாக்குரிமை என்ற முழக்கத்தை முன் வைத்தது.

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் ஜப்பானின் குண்டு தாக்குதலின் தொடர்ச்சியாக வங்கப் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் துயர் துடைக்க நிவாரணம், நியாய விலை கடைகள் அமைப்பது. பதுக்கல் பேர்வழிகளிடம் இருந்து அத்தியாவசிய பொருட்களை மீட்பது.

சமூக சமையல் கூடம் அமைப்பது. சிகிச்சை மையங்கள் திறப்பதற்கான தொடர் போராட்டங்களை பல மாநிலங்களில், கம்யூனிஸ்ட் பெண்கள் மற்ற பெண்களை ஒருங்கிணைத்து போராடினர்.

உடன்கட்டை ஏறும் சதிக்கு உட்படுத்துவது, பெண் சிசுக்கொலை மற்றும் பல பிரச்சனைகள். அடிப்படை உரிமை மறுக்கப்படுதலே என்று அஸ்ரா பேகம், ரேணு சக்கரவர்த்தி, டாக்டர் அச்சமாம்பா ஆகியோர் ஆணித்தரமாக கூறினர்.

மகளிறை ஒரு அணியில் திரள வைத்து பெண் உரிமையும், ஜனநாயக, மதச்சார்பற்ற, சமத்துவ சமுதாயமே என்ற கோபன் ஹேகன்னின் மகளிருக்கான உரிமைகள் குறித்த அறிக்கை, முதல் மாநாட்டில் தீர்மானத்திற்கு வழிகாட்டியாகவும், பெண்களின் போராட்டங்களுக்கு வலுவாக மென்னெடுத்தது. அதன் வழிகாட்டலின் படி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

பாலியல் வன்புணர்வுக்கு எதிரான சட்டம், பெண்களின் உரிமைகள், ஆரோக்கியம், கல்வியுரிமை, இந்து குடும்ப சட்டங்கள், வரதட்சணை ஒழிப்பு சட்டம் , வாரிசு உரிமை சட்டம் ஆகியவை முன்னுரிமை பெற்றன . பெண்களுக்கான இலவச கல்விக்கான பிரச்சாரத்தை முன்னெடுத்தது. பெண்கள், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து, தாய் , சேய் நலம், பெண்கள் சுகாதாரம் கருத்தில் கொண்டு, பேறுகால மையம், குழந்தைகள் காப்பகம், மழலையர் பள்ளிகள் அமைக்க வலியுறுத்தி போராடியது.

பெண்களுக்கு எதிராக தொடரும் அநியாயத்தை தடுத்து நிறுத்த, பெண்கள் முன்னேற்றம் பெற்ற உரிமைகளைப் பாதுகாக்க மாதர் சம்மேளனம் ஆரம்ப காலம் தொடங்கி, இப்போது வரை பெண்களின் எழுச்சியில் முக்கியமான ஒரு மைல் கல். பல்வேறு சிரமங்கள், தடைகற்களின் சரித்திரமாகும்.

பெண்களின் உரிமைக்காகவும், குழந்தைகளின் உரிமைக்காகவும், சேர்ந்த உழைப்பதுதான் இலக்காகும்.

இந்த நூற்றாண்டில் சபதம் ஏற்போம்!

பெண்களின் நலன் காப்போம்!

போராடுவோம்! வென்று காட்டுவோம்!

அனைவருக்கும் நூற்றாண்டு நன்னாளில், இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின், தமிழ் மாநில குழுவின் சார்பில் வாழ்த்துகள் !.



## விலை உயர்வுக்கு எதிராக!

விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து, அரசியல் அதிகாரத்தில் பங்களிப்பு தேவை என உணர்ந்து சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் 33% இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றவும், அதனை உடனடியாக அமல்படுத்தவும் போராடி வருகிறது.

இன்றைய அரசியல் சூழலில் பெண்களுக்கு எதிரான கொள்கைகளை அதி தீவிரமாக செயல்படுத்தும் அரசு அதிகாரத்தில் உள்ளது. பெண்களை அடிமைகளாக, அதிகாரம் அற்றவர்களாக, பெண் கல்வியை தடுக்கும் பிற்போக்குத்தனமான மூடப்பழக்க வழக்கத்தை கடைப்பிடிப்பவர்களாகவும், பெண் அடிமை தனத்தை திட்டமிட்டு ஆதரிக்கும், மனுநீதியை சட்டமாக்க முயலும் அரசு. சாதி ,மத ரீதியான கலவரங்களில் பெண்கள், குழந்தைகள் மீதான தாக்குதலும், அவர்களை சீரழிக்கும் கலாச்சாரங்கள், பாலியல் அத்துமிரல்கள், வன்கொடுமைகளை வேடிக்கை பார்ப்பதோடு, குற்றவாளிகள் விடுதலை பெற்றால் அதனை கொண்டாடும் கேவலங்களை அரங்கேற்றி வருகிறது.

பெண்களுக்கு பாதுகாப்பு, கல்வி, நாரி சக்தி, சன்னியாசம் என்று பசப்பு வார்த்தைகளால் ஏமாற்றி வருகிறது.

பன்னாட்டு பெரு முதலாளிகள், கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான கொள்கைகள் பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் கொள்ளையடிக்க தாரைவார்த்தல். கடுமையான விலைவாசி உயர்வு, வேலையின்மை, தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள்.

ஆன்மீகம், ஈஷா யோகா மையம் என்ற பெயரில் சத்குரு ஜக்கி வாசுதேவ் ஆதிவாசிகள், பழங்குடியின மக்கள், அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு, அனுமதி இல்லாத கட்டிடங்கள், தகன மேடை, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மூலைச்சலவை செய்து பெண்கள், குழந்தைகள் மீது பாலியல் வன்முறை, ஊழல், பணம் பறிப்பு, அராஜகம் அத்துமீறல் அரசின் ஆசிர்வாதத்துடன் நடைபெறுகிறது.

# இளைஞர்களின் சக்தி!



க.பாரதி

**ஒரு தேசத்தின் கதி அத்தேசத்தின் இளைஞர்களின் உணர்வுநிலையைப் பொருத்தது என்றார் உலக மகா கவி கதே!**

உலக வரலாறு நெடுகிலும் இளைஞர்களே வரலாற்றின் உந்து சக்திகளாக படைப்பாற்றல் மிக்கவர்களாக, போராளிகளாக விளங்கி வந்துள்ளனர்.

முதலாளித்துவ சுரண்டல் சமுதாயத்தை வீழ்த்தி சமதர்ம சமூகத்தை படைக்க வழிகாட்டும் புரட்சிகர மார்க்கிய சித்தாந்தத்தை

வகுத்துளித்த மார்க்கம், ஏங்கெல்சும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை வெளியிட்ட போது மார்க்ஸின் வயது 29, ஏங்கல்சின் வயது 27. ரஷ்யாவில் சோசலிச புரட்சியை தலைமை தாங்கி வழிநடத்தியபுரட்சியாளர் லெனின் இளம் வயதிலேயே புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட தொடங்கியவர்.

பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து கியூபா புரட்சியை சாதித்த இளைஞர்களின் எழுச்சி நாயகன் சேகுவேராவின் அப்போதைய வயது 31 வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 23 வயதில் மாவீரன் பகத்சிங் தூக்கு மேடை ஏறினான்.

சிகாகோ உரையின் மூலம் தனது இளம் வயதிலேயே இந்திய பண்பாட்டை உலகறிய செய்தார் சுவாமி விவேகானந்தர். ‘பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ நாங்கள் சாகவோ!’ எனக் கொதித்தெழுந்த மகாகவி பாரதியின் வயதும் இளம் வயதுதான்.

இளம் பருவம் என்பது இந்தச் சமூகத்தில் பீடித்துள்ள மூடப் பழக்கவழக்கங்களை, சாதிய தீண்டாமை கொடுமைகளை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்து வியாக்கியானம் செய்வதல்ல, மார்க்சியம் கூறுவது போல் இந்த மோசமான சமூக அமைப்பை மாற்றியமைப்பது என்பதாகும்.

மார்க்சியத் தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்டு 175 ஆண்டுகாலம்தான் ஆகிறது என்றாலும் அது மனித குலத்தின் 400 கோடி ஆண்டு கால வளர்ச்சிப்போக்குகளை தன்னகத்தே கொண்டு எதிர்கால சமூக வளர்ச்சி போக்குகளை அறிவியல் ரீதியில் ஆய்வு செய்கிறது.

அதுபோலதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் 1917ல் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியின் தாக்கத்தால் உந்துதலை பெற்ற இளம் கம்யூனிஸ்ட்கள் ஒன்று சேர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை 1925 டிசம்பர் 26 இல் கான்பூரில் உருவாக்கினர். அதில் முன் வைக்கப்பட்ட சிங்காரவேலரின் தலைமை உரை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

முழுவிடுதலை, நிலவுடைமை எதிர்ப்பு நிலசீர்திருத்தம் மொழிவழி மாநிலம் இரு மொழிக்கொள்கை, தொழிலாளர் நலச்சட்டங்கள், வேலையின்மை, எதிர்ப்பு வெளியுறவு கொள்கை இந்திய பொருளாதார கொள்கை உலகமய ஆபத்து பாசிச எச்சரிக்கை குறித்தெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றிய தீர்மானங்கள் அதை நடைமுறைப்படுத்த செய்த தியாகங்கள் போராட்டங்கள் அதனால் பெற்ற அனுபவங்கள் என அந்த அனுவங்களின் மூலம் காலத்திற்கேற்றவாறு செய்து கொண்ட மாற்றங்கள் என அத்தீர்மானங்களைக் கணக்கில் கொண்டால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சமூக விஞ்ஞான கட்சியாகும் என்பது புலனாகும்!

நூற்றாண்டை தொடங்கும் இந்தப் புரட்சிகர கட்சி சமூக விஞ்ஞான கட்சி இந்தியாவின் எதிர்காலத்திற்கு இளைஞர்கள் கையில் அரசியல் அதிகாரத்தை வழங்குவதுதான் சரியாக இருக்கும் என்று அறுதியிட்டுக் கூறிவருகிறது.

விடுதலைப் போராட்டக்காலத்தில் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தேச பக்த உணர்வை உருவாக்கி பிரிட்டீஷ் ஆட்சிக்கு எதிராக அவர்களை களத்தில் இறக்கிவிட்டது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி!



தெருப் பிரச்சினை முதல் சர்வதேசப் பிரச்சினைகள் வரை ஆய்ந்தறிந்து அப்பிரச்சினைக்குத் தீர்வு காண இளைஞர்களை அரசியல்படுத்தி, அணிதிரட்டி வருகிறது. சமூக, பொருளாதார, அரசியல் விடுதலைக்கான போராட்டம்தான் உண்மையான ஜனநாயகத்திற்கான போராட்டம் என வழிகாட்டுகிறது.

### வேலையின்மைக்கு எதிராக!

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலை ஏற்று வேலையின்மைக்கு எதிரான போராட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

வேலையின்மை என்பது தனிநபர் பிரச்சினையல்ல. அது ஒருசமூகப்பிரச்சினை சாதி, மதவெறிசக்திகளுக்கும் அதிகரித்து வரும் பயங்கரவாத செயல்களுக்கும் வேலையில்லா இளைஞர்களே எளிதில் பலியாகின்றனர்.

முதலாளித்துவ உற்பத்திமுறையும், சுரண்டல் சமூக அமைப்பையும் வேலை யில்லாத் திண்டாட்டத்தின் மூலவேர் என்பதை ஆய்வுசெய்து வேலையின்மைக்கு எதிரான போராட்டத்தினை வலுவுள்ளதாக மாற்றியதன் விளைவாகத்தான்.

பல மாநிலங்களில் வேலையில்லாக் கால நிவாரணம் வழங்கப்படுகிறது. கிராமப்புற தேசிய வேலைஉறுதியளிப்பு திட்டம் கொண்டு வரப்பட்டது. அரசு வேலைவாய்ப்புகளில் நடைபெறும் லஞ்ச ஊழல்களை அம்பலப்படுத்தியதன் விளைவாக அரசு போட்டி தேர்வாணையங்கள் உருவாக்கப்பட்டு போட்டி தேர்வுகள் நடத்தப்பட்டு அதன் மூலம் அரசுப்பணிக்கு ஊழியர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஓரளவாவது உருவாகியுள்ளது.

புதியநிலைமைகளில் நிரந்தர வேலைவாய்ப்பை பறிக்கும் விதமாக தினக்கூலி, ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் முறையை முதலாளித்துவம் அமுல்படுத்தி வருகிற போது அதனை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி!

நவீனத் தொழில்துறை வளர்ச்சியடைந்து வருகிற இந்த காலகட்டத்தில் நவீன தொழில்துறை வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக இருக்க வேண்டுமே தவிர வேலையில்லா பட்டாளத்தை உருவாக்குவதாக இருக்கக்கூடாது என வேலையின்மை பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்வைப்பதோடு வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி!’

### கல்வி உரிமைக்காக!

கல்வி என்பது பிறப்புரிமை என்கிற முழக்கத்தை முதன்முதலில் முன்வைத்ததே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான்! அதனால் ஆரம்பக்கல்வி என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றாக அரசியலமைப்பு சட்டத்தில் இணைக்கப்பட்டது.

இன்றைக்கு ஆட்சியாளர்கள் கல்வியை தனியார் கைகளில் பெருமளவு ஒப்படைத்துவிட்டனர். கல்வி என்பது லாபம் கொழிக்கும் தொழில் அல்ல. கல்வி என்பது உரிமை!


ஆரம்பக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி வரை கட்டணமில்லாமல் தான் வழங்கப்படவேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராடுவதோடு மாணவர்களையும் களத்தில் நிற்க வைத்து போராட வைக்கிற இயக்கம் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி!

தற்போது ஆட்சியில் பா.ஜ.க அரசு பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை கார்ப்பரேட் மற்றும் வகுப்பு வாதமாக்க முயற்சித்து வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட்தொடர்ந்து எதிர்த்து போராடிவருகிறது. நீட்தேர்வு தேசியக்கல்விக் கொள்கையை ரத்துசெய்யக்கோரியும் உள்ளூர் அளவில் கிடைக்கும் மூலப்பொருட்களை கொண்டு தொழிற்சாலைகளை அமைத்து உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவேண்டும் எனவும் போராடி வருகிறது.

கார்ப்பரேட் முதலாளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதாரத்தை மீட்டும் அனைத்து சொத்துக்களையும் நாட்டுடைமையாக்காமல் பசி, பட்டினியை வேலையின்மை முடிவுக்கு கொண்டு வரமுடியாது.

நூற்றாண்டின் தொடக்கம் அதற்கான உறுதியான பாதையை காட்டும் இளம் கம்யூனிஸ்ட்டுகளை உருவாக்குவோம். களம் கண்டு இந்தியப் புரட்சியை வெற்றி பெறச் செய்வோம்!

தொடர்புக்கு: 9791753865



# பிரெஞ்சிந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி



எல்லை சிவக்குமார்

**கம்யூனிஸ்ட்களின் வாழ்க்கை என்பது தியாகம் மற்றும் சாகச வரலாறு நிறைந்தது. அத்தகைய சாகச மனிதர்களில் ஒருவர் தான் அமீர்ஹைதர்கான்.**

லாகூரில் பிறந்து வளர்ந்து அமெரிக்காவில் பயின்று கப்பல் மாலுமியாக பணியாற்றிவந்த அமீர் ஹைதர்கான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு தென்னிந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கும் பொறுப்பினை ஏற்று கொண்டு 1934ம் ஆண்டுகளில் சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் சங்கர் என்ற புனைப்பெயருடன் தலைமறைவாக தங்கியிருந்து பணியாற்றி வந்தார்.

அவர்தான் பிரெஞ்சு ஆளுகையின் கீழ் இருந்த துறைமுகப் பகுதியான புதுச்சேரி யில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க திட்டமிட்டு அதற்குரிய சரியான நபரை கண்டறிய சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இந்திய தேசிய கொடியை ஏற்றிய ஆர்யா என்கிற பாஷ்யம் என்பவரை புதுச்சேரிக்கு அனுப்பிவைத்தார். அவர் வில்லியனூரில் வாழ்ந்து வந்த ஆசிரியர் முத்துக்குமாரசாமிபிள்ளை என்பவரை அணுகி ஆலோசித்தார்.

அவரது பரிந்துரைப்படி அரிசன சேவா சங்கம் போன்ற அமைப்புகளில் தீவிரமாக பணியாற்றி வந்த கைலாசசுப்பையா என்ற இளைஞரை அணுகிய பாஷ்யம் அவருடன் கலந்து பேசி சென்னையில் அமீர்ஹைதர்கான் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்தார். இந்த சந்திப்பின் போது சென்னை சட்டக்கல்லூரி மாணவரான பி. சுந்தராய்யாவும் உடன் இருந்துள்ளார்.

அவருடனான உரையாடலினை தொடர்ந்து அவர் அளித்த சில புத்தகங்கள் அறிக்கைகளை வாசித்ததன் வாயிலாக மார்க்சிய கொள்கைகள் மீது ஈடுபாடு கொண்டார் வ. சுப்பையா.

அதனைத் தொடர்ந்து அமீர்ஹைதர்கான் அவர்களின் ஆலோசனைப்படி புதுச்சேரியில் பஞ்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களை அணித்திரட்டி சங்கம் அமைத்து கூலி உயர்வு, 8 மணி நேர வேலை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர் போராட்டங்களை முன்னெடுத்தார் வ. சுப்பையா.

தொழிலாளர்களை அணித்திரட்டவும், அவர்களுக்கு அரசியல் தெளிவூட்டவும் சுதந்திரம் என்ற இதழினைத் தொடங்கினார். தமிழில் தொடங்கப்பட்ட முதல் மார்க்சிய இதழ் இது.

இந்த போராட்ங்கள் வலிமைப் பெற்று உள்ளிருப்பு வேலைநிறுத்தப் போராட்டமாக உருவெடுத்து ஒரு மாதகாலம் நீடித்த நிலையில் அடக்குமுறைகளைபிரெஞ்சு அரசு ஏவியது. அடக்கு முறையின் உச்சமாக 1936 ஜூலை 30 போராட்டக்களத்தில் இருந்த தொழிலாளர்கள் மீது பிரெஞ்சு இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் பன்னிரண்டு தொழிலாளர்கள் படுகொலைச்செய்யப்பட்டனர்.

இந்த தொழிலாளர் படுகொலையை கண்டித்து இந்தியா முழுவதும் கம்யூனிஸ்ட்களின் முன்முயற்சியால் கண்டனக் குரல்கள் எழுந்தன. பிரான்ஸ் நாட்டிலும் அங்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிற்சங்கமும் ஆதரவளித்து போராடியதன் விளைவாக எட்டு மணிநேர வேலையுரிமை வழங்கிட 1937ஏப்ரல் 7ம் நாள் பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது.

ஆசியா கண்டத்திலையே முதன்முதலில் எட்டு மணி நேர வேலை உரிமையை புதுச்சேரியில் பெற்று தந்த பெருமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு.

1936ஆம் ஆண்டு தான் தமிழ்நாட்டில் முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை உருவாக்கப்பட்டது. அந்த கிளையில் இடம்பெற்றிருந்த ஒன்பது பேரில் ஒருவர் தான் புதுச்சேரி மண்ணை சார்ந்த வ. சுப்பையா என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர் போராட்டத்தின் வெற்றியை தொடர்ந்து 1937 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் புதுச்சேரி தொழிலாளர் இயக்கம் புதுச்சேரி விடுதலை இயக்கமாக உருமாறியது. இந்த இயக்கத்தில் தொழிலாளர்கள் மட்டுமின்றி விவசாயிகள், மாணவர்கள், இளைஞர் கள், பெண்கள், வியாபாரிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து மகாஜன சபை என்ற பெயரில் பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராகச் செயலபட துவங்கியது. பிரெஞ்சு அரசு நேரடியாகவும், ஆதரவு குண்டர்கள் மூலமாகவும் அடக்குமுறைகளை ஏவியது. பல்லாயிரகணக்கானவர்கள் பிரெஞ்சிந்திய பகுதிகளில் இருந்து வெளியேறினார்கள். முன்னணி ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.





இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்த பின்னர் பிரிட்டிஷ் அரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடையை நீக்கியது. வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த வ. சுப்பையா விடுதலை செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 1942 ஆம் ஆண்டின் இறுதியில் பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் கிளை அமைப்பை தொங்கினார். காரைக்கால் பகுதியில் பொன்னையா பிள்ளை, மாகே பகுதியில் ஐ. கே. குமரன், சந்திரநாகூர் பகுதியில் காளிச்சரண் கோஷ் போன்றவர்கள் பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை அமைப்புகளை உருவாக்கி விடுதலை இயக்க பிரச்சாரங்களை முன்னெடுத்து சென்றனர். மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட்டது.

1945ம் ஆண்டு நவம்பர் மாதம் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக்குழு பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கத்தை முனைப்புடன் முன்னெடுத்து செல்ல அனைத்து தரப்பு மக்களையும் ஒரே அணியில் திரட்ட தேசிய ஜனநாயக முன்னணி (National Democratic Front) என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டது. இது பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு வழிகாட்டியதுடன் தலைவர் எஸ்.ஏ. டாங்கே புதுச்சேரிக்கு நேரில் வருகைத்தந்து பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

1946 ஏப்ரலில் பிரெஞ்சிந்திய மகளிர் மாநாடு, 1947 ஏப்ரலில் பிரெஞ்சிந்திய தொழிலாளர் மாநாடு போன்றவைகளில் கே.பி.ஜானகியம்மாள், மிராஜ்கர், ஜீவானந்தம் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

இத்தகைய தொடர்ச்சியான செயல்பாடுகளின் விளைவாக 1946,47 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உள்ளாட்சி மற்றும் பிரதிநிதிகள் சபை தேர்தலில் தேசிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றது. பிரான்ஸ் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தேர்தலில் வ. சுப்பையா வெற்றி பெற்றார்.

தேசிய ஜனநாயக முன்னணி பெயரில் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர்கள் வெற்றி பெற்று உள்ளாட்சி அமைப்புகளிலும் பிரதி நிதித்துவ சபையிலும் இடம் பெறுவதை விரும்பாத பிரெஞ்சு அரசு தேசிய ஜனநாயக முன்னணியை சீர்குலைத்து பல கட்சிகளை உருவாக்கியது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து விடுதலைப்பெற்றது.

இந்திய விடுதலைக்குப் பின்னர் பிரெஞ் சிந்திய விடுதலை இயக்கம் எழுச்சி பெற்ற நேரத்தில் பிரெஞ்சு அரசு தனது ஆதரவு குண்டர்களை கம்யூனிஸ்ட் கட்சியினர் மீதும் ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியது. வீடுகளை தீ வைத்துக் கொளுத்தி வன்முறையில் ஈடுப்பட்டனர். பலர் ஊரை விட்டு வெளியேறி அருகில் உள்ள தமிழகப் பகுதிகளில் தஞ் சமடைந்தனர்.

சுதந்திர இந்தியாவில் 1950ம் ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மீது விதிக்கப்பட்ட தடை காரணமாக பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட்கள் தமிழக பகுதிகளில் சுதந்திரமாக நடமாடமுடியாத நெருக்கடிகளுக்கு ஆளாகி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

அதனைத் தொடர்ந்து 1954ம் ஆண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கம் தீவிரமானது. டெல்லி சென்ற வ.சுப்பையா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் அஜாய்குமார் கோஷ் அவர்களை சந்தித்து உரையாடிய பின்னர் 1954 ஏப்ரல் 7ம் நாள் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இறுதிக்கட்ட போராட்ட நாள் என்று அறிவித்தார்.

பிரெஞ்சு இராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ளக்கூடிய வகையில் சில இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்க இந்திய இராணுவத்தில் பணியாற்றிய மேஜர் ஜெயபால் சிங் என்பவரை புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தார். அவர் திருபுவனைப் பகுதியில் அமைக்கப்பட்ட ரகசிய முகாமில் பயிற்சி அளித்தார். அவரிடம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் திருபுவனம் காவல் நிலையத்தை கைப்பற்றி பிரெஞ்சு கொடியை இறக்கி விட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி 1954 ஏப்ரல் 6ம் நாள் திருபுவனைப் பகுதியை சுதந்திர பிரகடனம் செய்தனர்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சிகளை இணைத்து இடைக்கால அரசாங்கத்தையும் ஏற்படுத்தினர்.

காரைக்கால் பகுதியிலும் இறுதிக்கட்ட போராட்டம் தீவிரமடைந்தது. இந்த பகுதி நிர்வாகியின் காரை அவரது ஒட்டுநரே கடத்தி வந்து விடுதலைமுகாமில் ஒப்படைத்தார்.

சந்திரநாகூர் பகுதியில் பிரெஞ்சு அரசு அலுவலகங்களை கைப்பற்றி சுதந்திரபிரகடனம் செய்தனர்.

மாகே பகுதியில் செருக்குவில்லை என்ற பகுதியை பிரஞ்சு இராணுவத்தின் பிடியில் இருந்து மீட்க இராணுவகிடங்கு மீது நடத்திய தாக்குதலில் அச்சுதன், அரவிந்தன் என்ற இரண்டு கம்யூனிஸ்ட் இளைஞர் கள் தங்கள் இன்னுயிரை இழந்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரெஞ்சு அரசு இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வாக்கெடுப்புக்கு பின்னர் தாங்களே வெளியேறுவதாக அறிவித்தனர்.

அதனடிப்படையில் கீழூர் பகுதியில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்ட வாக்கடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் பங்கெடுத்த 178 பேரில் 170பேர் பிரெஞ்சு அரசு வெளியேற வேண்டும் என்று அளித்த வாக்கின் அடிப்படையில் ஒப்புக்கொண்டு 1954ஆம் ஆண்டு நவம்பர் 1 ம் நாள் புதுச்சேரி மண்ணில் இருந்து வெளியேறினார்கள். பிரெஞ்சு கொடி இறக்கப்பட்டு பல்லா யிரக்கணகான மக்கள் முன்னிலையில் இந்திய தேசிய கொடி ஏற்றப்பட்டு சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது.

பிரஞ்சு இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுப் பக்கங்களை புரட்டும்போது கம்யூனிஸ்ட் கட்சியின் அர்பணிப்பையும் தியாகத்தையும் உணரமுடியும். பிரெஞ்சு இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்நின்று நடத்திய இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பது அதன் தளநாயகனாக முன்நின்று வழி நடத்தியவர் வ. சுப்பையா என்பது என்றும் நிலைத்து நிற்கும் வரலாறு.

## வினாடி - வினா விடைகள்

1. 14.07.1889
2. பேராசான் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ்
3. 1889 – 1916
4. மே 1 ஐ சர்வதேசத் தொழிலாளர் தினமாக அறிவித்தது (1889)
5. மார்ச் – 8 ஐ சர்வதேச மகளிர் தினமாக அறிவித்தது (1910)
6. முதல் உலகப்போர் குறித்த சந்தர்ப்பவாத நிலைப்பாடு

# கையூர் தியாகிகள் 1943







கேரளா, மலபார் பகுதி, கையூர் எனும் ஊரில் இயங்கிய, விவசாய சங்கத்தைச் சேர்ந்த நான்கு தோழர்கள் தூக்கிலிடப்பட்டனர். அவர்கள் வரலாற்றில் “கையூர் தியாகிகள்” என்று அழைக்கப்படுகிறார்கள்.

மடத்தில் அப்பு, போதரா குஞ்சாம்பு நாயர், கொய்தட்டில் சிறுகண்டன், பாலிக்கல் அபுபக்கர் இவர்கள்தான் அந்தக் கையூர் தியாகிகள்.

இந்த இளம் தோழர்கள் அனைவரும் 25 வயதுக்கு உட்பட்டவர்கள். காங்கிரஸ் கட்சி அமைப்பாளர்களாக இருந்து, பின்னர் விவசாயிகள் சங்கத்தை தோற்றுவித்தவர்கள். அப்போதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்தனர்.

அப்பகுதியில் மலபார் சிறப்புக் காவல் படையினர் (எம்எஸ்பி) நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் மக்களை துன்புறுத்தி, வீடுகளை சூறையாடினர். விவசாய சங்கத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளை விசாரணை செய்கிறோம் என்ற பெயரில் கைது செய்து இழுத்துச் சென்றனர். அதைவிட கொடூரமானது, அந்தப் பகுதி பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதுதான்.

இந்த அடக்குமுறைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டார். இது மக்களை மேலும் கொதிப்படையச் செய்தது. கூடியிருந்த விவசாயிகள் அவன் மீது கல்லெறிந்தனர். அவன் செத்துப் போனான். கான்ஸ்டபிளை கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்.

“திரண்டிருந்து பெருங்கூட்டத்தில், உண்மையில் யார் கல்லெறிந்தது என்பதை அடையாளம் காண்பது கடினம். என்றாலும் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் வந்தார்கள் என்று கருத வாய்ப்புள்ளது” என்று அமர்வு நீதிபதி கூறினார். பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர் டி.என்.பிரிட், நான்கு இளம் கம்யூனிஸ்டுகளுக்காக கட்டணம் பெறாமல் வாதாடினார், ஆனால் பலனில்லை.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாக பாசாங்கு செய்து அந்த நான்கு இளம் கம்யூனிஸ்ட்டுகளை கண்ணூர் சிறையில் 29 மார்ச் 1943 அன்று கேரளாவில் உள்ள மலபார் பகுதியில் உள்ள தூக்கிலிட்டனர். இவர்களோடு சேர்ந்து குற்றம் காட்டப்பட்ட சூரி கண்டன் கிருஷ்ணன் நாயர் என்ற தோழருக்கு 18 வயதுக்கு குறைவு என்பதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

# தெலுங்கானா ஆயுதப் போரா



நிஜாம் ஆட்சி செய்த ஹைதராபாத் சமஸ்தானத்தின் கிழக்கு பகுதியாக நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தில் தவித்த தவித்தது.

நிஜாமின் ஆட்சி ஈவிரக்கமற்ற நிலப்பிரபுத்துவ பயங்கரவாதமும் கொடூரமான ஒடுக்குமுறையும் நிலவின. நிஜாமும் அவரது ஆயுதம் ஏந்திய ரஜாக்கர்களும் மக்களை அனைத்து வகைகளிலும் அச்சுறுத்தி அரசாண்டனர்.

நிலப்பிரபுக்களின் வயல்களில் கூலி தராமல் வேலை வாங்குவார்கள். இது ‘வெட்டி’ வேலை எனப்பட்டது. அந்த வேலைக்கு வரமாட்டோம் என்று சொல்ல முடியாது. விளைந்த தானியங்களை பறிமுதல் செய்வார்கள். மாறாத வரி விதித்தார்கள். விளைபொருள்களைப் பதுக்கி வைத்து, செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கி பெரும் பணம் குவித்தார்கள். இதனால் பணக்கார விவசாயிகளும் கூட கடுமையாக பாதிக்கப்பட்டனர். பழங்குடியினரிடமிருந்து நிலங்கள்


டி.எம்.மூர்த்தி

# இரத்த போராட்டம், தியாக

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூறாண்டு வரலாறு என்பது போராட்டமும் தியாகமும் நிறைந்தது. அதன் தலைவர்கள் களப் போராட்ட நாயகர்கள். பாழ்பட்டுக் கிடந்த இந்திய மக்களை வாழ்விப்பதற்காகத் தம் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர்கள். மக்களோடு இருப்பது போல் கதை, வசனம், பாடல்கள் எழுதி காணொளிகள் வெளியிட்டு ஊதிப் பெருக்கப்பட்டவர்கள் அல்ல. மக்களோடு வாழ்ந்தவர்கள், அவர்களோடு இரண்டறக் கலந்தவர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி வளர்ந்த போது இருந்த பல கட்சிகள் இப்போது இல்லை. தோன்றியதிலிருந்தே விடுதலைக்காகப் போராடிய, இன்றும் இருக்கக் கூடிய கட்சிகள் இரண்டுதான். அவை காங்கிரசும் கம்யூனிஸ்ட் கட்சியுமாகும்.

காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் முதல் காரியமாக கம்யூனிஸ்ட் கட்சியை சட்ட விரோதம் எனத் தடை செய்து, பிரிட்டிஷ்காரன் செய்யாத கொடுமைகளுக்கு ஆளாக்கியது. விடுதலை இயக்கம் முழுமையும் தமக்கு மட்டுமே சொந்தம் என்ற போலிச் சித்திரத்தை வரைந்தது.

# கப்பற்படை எழுச்சி 1946

இரண்டாம் உலகப் போரில் இந்தியா பங்கேற்றால், போர் முடிவடைந்ததும் விடுதலை தந்து விடுவதாக பிரிட்டிஷ் அரசு கூறியது. 1945 ல் போர் முடிந்தது. ஆனால் விடுதலை பற்றி எதுவும் பேசவில்லை.

ஜனவரி 1946ல் 1500 இந்திய விமானப் படை வீரர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ராயல் இந்தியன் நேவி (ஆர்ஐஎன்) கப்பற்படையில் இருந்த இந்திய வீரர்கள், வெள்ளையர்கள் தங்களை தரக்குறைவாக நடத்துவதைக் கண்டித்து 1946 பிப்ரவரி 18ல் 1100 கடற்படை வீரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினர்.

அது வேலைநிறுத்தமாகவும் பெரிய ஆயுத எழுச்சியாகவும் வளர்ந்தது.

‘இனியும் நாங்கள் பிரிட்டிஷ்காரர்களின் வேலையாட்கள் அல்ல. விடுதலை பெற்ற இந்தியாவின் வீரர்கள்” என்று அவர்கள் முழங்கினர். ‘தல்வார்’ கப்பலில் பறந்த பிரிட்டிஷ் ஜாக் கொடியை இறக்கி விட்டு, காங்கிரஸின் மூவண்ண, முஸ்லிம் லீக்கின் பச்சை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடி மூன்றையும் ஏற்றினர்.

ஜபல்பூர், கராச்சி, விசாகப்பட்டினம், கல்கத்தா போன்ற பிற மையங்களுக்கும் வேலைநிறுத்தம்





விரிவடைந்தது. இந்திய கடற்கரையோரத்தில் 78 கப்பல்கள் மற்றும் 22 யூனிட்டுகளுக்குப் பரவியது. பிப்ரவரி 21க்குள், முழு ஆர்ஐஎன்னும் சேர்ந்தது.

பிரிட்டிஷ் போலீஸ் மற்றும் ராணுவத்தில் இருந்த இந்திய வீரர்களும் அவர்களோடு இணைந்து கொண்டனர். வெள்ளைக்கார ராணுவத்தை பம்பாய்க்கு அனுப்பி, போராடும் வீரர்கள் மீது தாக்குதல் தொடுத்தது பிரிட்டிஷ் அரசு. அவர்களைப் பட்டினி போட உணவகத்தை மூடியது.

மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே


Hindusthan Standard
INDIAN SAILORS IN RE
SIX HOURS BATTLE WITH BRITISH TROOPS
GRAVE TURN IN R.I.N. MEN'S STRIKE IN BOMBAY
TWENTY SHIPS CAPTURED
POLICE OPEN FIRE ON CROWDS
FIRING ON STRIKERS AT KARACHI
INDIANS RETALIATE WITH NAVAL GUNS

# ட்டம், 1946-48



பறித்தெடுக்கப்பட்டன. இவையெல்லாம் நிஜாமின் ரஜாக்கர்கள் மேற்பார்வையில் நடந்தன

இவற்றை எதிர்த்து 1945–46ம் ஆண்டுகளில் விவசாயிகளின் கண்டன இயக்கம் எழுந்தது. அக்டோபர் 1946ல் நல்கொண்டா மற்றும் வாரங்கலில் விவசாயிகளும் காவல்துறையினரும் மோதத் தொடங்கினர்.

1945 ஆகஸ்டில், இந்தியா விடுதலை பெற்றிருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சமஸ்தானங்கள் தனி நாடாக இருந்தன. ஹைதராபாத் நிஜாம் இந்திய யூனியனில் சேர மறுத்துவிட்டார். இதை மக்கள் எதிர்த்தனர். விவசாயிகள் இயக்கத்துடன், இந்தியாவோடு சேர வேண்டும் என்ற முழக்கமும் சேர்ந்து போராட்டம் விரிவடைந்தது.

ஆந்திர மகாசபாவும், மாநில காங்கிரஸும் இணைந்து உறுதிமிக்க சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினர். ஆந்திர மகா சபாவில் கம்யூனிஸ்டுகளே



பெருமளவில் இருந்தனர்.

விவசாயிகள் சங்கம் ஒரு புரட்சியைத் தொடங்கியது, அவர்கள் பெரும் நிலப்பிரபுக்களின் நிலங்களைக் கைப்பற்றி, ஏழைகளுக்கும் நிலமற்றவர்களுக்கும் பிரித்துக் கொடுத்தனர். உணவு தானியங்களும் வழங்கப்பட்டன. நில உரிமைக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது.

கிளர்ந்து எழுந்த தேசிய உணர்வோடு, இந்த எழுச்சிக்கு ஆதரவாக பரந்த முன்னணி உருவானது. ஏழை மற்றும் நிலமற்ற விவசாயிகள் மட்டுமில்லாமல், பணக்கார மற்றும் நடுத்தர விவசாயிகளும் போராட்டத்தில் பங்கேற்றனர், அவர்களும் நிஜாமின் நிலப்பிரபுத்துவ எதேச்சதிகாரம் தொலைய வேண்டும் என விரும்பினர்.

இத்தகைய சூழ்நிலையில், ஆந்திர மகாசபை மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக கிராமப்புற மக்களில் பெரும் பகுதியினர் வந்தனர். இயக்கம் ஆயுதமேந்திய வெகுஜன போராட்டமாக விரிவடைந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க ஒப்புதல் தந்தார்.

1946 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதி, வாரங்கல் மாவட்டம் கடவெண்டி கிராமத்தில் ஒரு உள்ளூர் விவசாயத் தலைவர், துர்ராவின் முகவர்களால் கொல்லப்பட்டபோது கிளர்ச்சி தொடங்கியது. நல்கொண்டா மற்றும் வாரங்கல் மாவட்டங்களில் தொடங்கி, நிஜாம் மிர் உஸ்மான் அலிகான் மற்றும் பின் காசிம் ரஸ்வியின் தொடர்ந்த அடக்குமுறைக்குப் பதிலடியாக தெலுங்கானா முழுவதும் கிளர்ச்சியானது புரட்சியாக உருவானது. ஹைதராபாத் படைகளும் காவல்துறையினரும், ரஜாக்கர்களும் இணைந்தும் மக்கள் கிளர்ச்சியை அடக்க முடியவில்லை. அதே நேரத்தில் கிளர்ச்சிப் படைகள் கொரில்லா தாக்குதலை மேற்கொண்டன.

கிளர்ச்சியாளர்கள் கிராம கம்யூன்களை உருவாக்கி, ஒரு இணை அரசாங்க அமைப்பை நிறுவினர், இது ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தியது அங்கு சாதி மற்றும் பாலின வேறுபாடுகள் குறைக்கப்பட்டன. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக ஆயுதங்களை ஏந்தி எதிரிகளைத் தாக்கினர். நில மறுபங்கீடு மூலம் விவசாயிகளின் நிலைமைகள் கணிசமாக மேம்பட்டன. 1948ல் மக்கள் கிளர்ச்சியானது தெலுங்கானா முழுக்கப் பரவி, உச்சநிலையை எட்டியது.

4,000 கிராமங்கள் கைப்பற்றப்பட்டன. அவை நிலமற்ற விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பிரித்துத் தரப்பட்டன. அந்த கிராமங்களை நிர்வாகம் செய்ய உள்ளூர் மக்களைக் கொண்ட கம்யூன்கள் அமைக்கப்பட்டன. அவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒருங்கிணைக்கப்பட்டன. இடதுசாரி சார்புள்ள காங்கிரஸ்காரர்களும் அதனை ஆதரித்தனர்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் இந்திய ராணுவத்தை ஹைதராபாத் சமஸ்தானத்துக்குள் அனுப்பினார். 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் தேதி இந்திய இராணுவம் ஹைதராபாத்தில் நுழைந்ததுடன் தெலுங்கானா போராட்டத்தின் புதிய கட்டம் தொடங்கியது. நிஜாம் மன்னருக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொண்ட ராணுவம், கம்யூன்கள் மீது தாக்குதல் தொடுத்தது.

எந்த இந்திய அரசோடு ஹைதராபாத் நிஜாமின் சமஸ்தானம் இணைய வேண்டும் என்று புரட்சியைத் தொடங்கினார்களோ, அந்த மக்கள் அதே இந்திய அரசின் இராணுவத்தால் தாக்கி அழிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கணக்கான கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

25 அக்டோபர் 1951 அன்று போராட்டத்தைத் திரும்பப்பெற்று, ஆயுதங்களை ஒப்படைப்பது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவெடுத்தது.

# சாட்சிகள்

## த்தின் நூறாண்டுப் பயணம்

விடுதலைப் போரின் போதும், அதனைத் தொடர்ந்தும் இந்திய கம்யூனிஸ்டுகள் செய்த தியாகங்களை எல்லாம், மூடிமறைத்தது. எந்த வரலாற்றுப் பாடங்களிலும் இடம்பெற்று விடாமல், அடுத்த தலைமுறையின் கண்ணுக்கே படாமல் கவனத்தோடு புறம்தள்ளியது.

இப்படி நான்கைந்து தலைமுறை கடந்து விட்டது. கம்யூனிஸ்ட் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்ட புதிய இளைஞர்களுக்கு இந்த வரலாற்று நிகழ்வுகளின் பெயர்கள் தெரிந்திருக்கும். ஆனால் விவரங்கள் தெரிந்திருக்காது. அவை ஒவ்வொன்றும் ரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்பட்ட காவியங்கள். அவற்றை விளக்குவதற்கு பல புத்தகங்கள் இருக்கின்றன. மிகச் சிலவற்றை சுருக்கமாகத் தொகுத்திருக்கிறேன்.

மகத்தான செங்கொடியை, அந்த மாமனிதர்களின் கரங்களிலிருந்து பெற்றுள்ள நாம், அவர்கள் பெற்றுத் தந்த அரசியல் விடுதலையைப் பாதுகாக்க, அதனை சமூக விடுதலை, பொருளாதார விடுதலை, பண்பாட்டு விடுதலை என விரிவுபடுத்த ஊக்கத்தோடும் துணிவோடும் நம்மை அர்ப்பணிப்போம்!



கப்பற்படை வீரர்களுடன் தோளோடு தோள் நின்றது.

வீரர்கள் பெரிதும் நம்பிய காங்கிரஸ், முஸ்லீம் லீக் ஆகிய இரண்டு கட்சிகளும் கப்பற்படை வீரர்களின் எழுச்சியை ஆதரிக்க மறுத்துவிட்டன.

அந்த வெகுஜன எழுச்சியின் வர்க்க உள்ளடக்கம் அவர்களைப் பயமுறுத்தியது. பேச்சுவார்த்தை மூலம் தாம் அகற்ற நினைக்கும் பிரிட்டிஷ் ஆட்சியை, புரட்சி மூலம் முடிவுக்கு கொண்டு வந்து விடுவார்களோ என அஞ்சினர்.

இந்து முஸ்லீம் வகுப்புவாதப் பிளவுகளின் பிரதிநிதிகளாக, எப்போதும் முரண்பட்டு வந்த, சர்தார் படேலும், முகமது அலி ஜின்னாவும் கப்பற்படை எழுச்சியை எதிர்ப்பதில் ஒரே நிலை எடுத்தனர். காந்தியும் 'கலகக்காரர்களை' கண்டித்தார்.

போராட்டத்தை ஆதரித்து கம்யூனிஸ்டுகள், ஏஐடியுசி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் ஆகியவை களத்தில் இறங்கின.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் தோழர் கங்காதர் அதிகாரி பிப்ரவரி 22ல் வெளியிட்ட அறிக்கையில், "அன்னிய அரசின் மிருகத்தனமான ஒடுக்கும் முயற்சியை ஒவ்வொரு இந்தியரும் கண்டிக்கிறோம். வெள்ளைக்கார கமாண்டர் வீரர்களிடம் 'சரணடையுங்கள் அல்லது செத்துப் போங்கள்' என்று விடுத்துள்ள உத்தரவை ஒவ்வொரு இந்தியரும் வெறுப்பார்கள்".

"கடற்படை மற்றும் விமானப்படையில் உள்ள நமது சகோதரர்கள் மீதான இந்த கொடூரமான அடக்குமுறையை அனுமதிக்க மறுத்து நாளை அனைத்து கடைகள், பள்ளி, கல்லூரிகள், மில்களில் முழு வேலை நிறுத்தம் செய்யுமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அனைத்துக் கட்சிகளுக்கும், நமது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். அடக்குமுறையைக் கைவிட்டு வேலைநிறுத்தம் செய்யும் வீரர்களோடு பேசி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தர வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த அழைப்புக்கு முன்னெப்போதும் இல்லாத பிரமாண்டமான ஆதரவு, அனைத்து தரப்பு மக்களிடம் இருந்தும் கிடைத்தது. கல்கத்தா, கராச்சி, மெட்ராஸ் தெருக்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் தொழிலாளர்களும் சிவப்புக் கொடிகளை ஏந்தியவாறு "கப்பற்படை கோரிக்கைகளை நிறைவேற்று! பிரிட்டிஷ் காவல்துறை அராஜகம் ஒழிக" என்ற முழக்கமிட்டவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

பம்பாயில் மாணவர்களும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் வீரர்களுக்கு மூன்று வேலையும் உணவுகளை எடுத்துச் சென்று கொடுத்தனர்.

கப்பற்படை வீரர்களும், தொழிலாளர்களும், பிரிட்டிஷ் போலீசில் இருந்த இந்தியர்களும் ஒன்று சேர்ந்து தெருக்களில் ஊர்வலமாகச் சென்றனர். பிரிட்டிஷ் துருப்புக்கள் நகரத்திற்குள் நுழைந்தன, பல நாட்கள் தெருக்களில் ஆயுதச் சண்டைகள் நடைபெற்றன. சுமார் 400 பேர் கொல்லப்பட்டதாக அரசுக் கணக்கு. ஆனால் ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம்.

பிப்ரவரி 23, 1946 அன்று, பிரிட்டிஷாரிடம் பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும், காங்கிரஸை நம்பி சரணடையுமாறும் சர்தார் வல்லபாய் படேல் கப்பற்படை வீரர்களிடம் வலியுறுத்தினார்.

வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது. வேலைநிறுத்த தலைவரான எம்.எஸ்.கான், "நாங்கள் பிரிட்டிஷ்காரர்களிடம் அல்ல, இந்தியர்களிடமே சரண் அடைகிறோம்" என்றார்.

அப்புறம் நடந்ததுதான் வெட்கக்கேடு. (உங்களுக்குத் தோன்றுகிற வேறு சொற்களையும் போட்டுக் கொள்ளலாம்).

வேலை நிறுத்தத்திற்கு தலைமை தாங்கிய கப்பற்படை வீரர்களுக்கு, ராணுவ நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது. 523 வீரர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். காங்கிரஸ் கண்டுகொள்ளவே இல்லை.

1947ல் விடுதலை பெற்ற பிறகு, அந்த 523 பேரில் ஒருவரைக் கூட இந்திய ராணுவமோ அல்லது பாகிஸ்தான் ராணுவமோ மீண்டும் படையில் சேர்த்துக் கொள்ளவில்லை, இழப்பீடும் வழங்கவில்லை. அவர்களுக்கு ஓய்வூதியமும் தரவில்லை!!

விடுதலைப் போராட்டத்தின் இறுதி யுத்தம் இதுதான். பிரிட்டிஷ் ஆட்சியின் சவப்பெட்டியில் கடைசி ஆணியை ஓங்கி அறைந்து கப்பற்படை எழுச்சிதான்.



# புன்னப்புரா வயலார் எழுச்சி 1946



புன்னப்புரா என்பது கேரளாவின் ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள கிராமம். வயலார் என்பது சேர்தலா நகரத்திற்கு அருகிலுள்ள கிராமம். இங்குள்ள மக்களில் சிலருக்குதான் ஓலைக் குடிசைகள். மற்றவர்களுக்கு அதுவும் கிடையாது. அவர்களின் வாழ்நிலை பரிதாபகரமாக இருந்தது.

அவர்களில் பெரும்பாலோர் கயிறு திரிக்கும் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள். அவர்களின் வலைகள், படகுகள் மற்றும் கருவிகள் எல்லாம் நில உடமையாளர்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் வேலைநேரத்தில் மட்டுமல்ல, வாழ்க்கை முழுக்க அடிமைகளாக வாழ்ந்தனர். பாதிரியார்களாலும் அவர்கள் சுரண்டப்பட்டனர். அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையை நம்பித்தான் சர்ச் இருந்தது. அதிக எண்ணிக்கையிலான படகுகள் மற்றும் வலைகளுக்கு சர்ச் தான் உரிமையாளர். பிடிக்கப்பட்ட மீன்களில் பாதி, வாடகைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இடைத்தரகர்களும் சுரண்டிக் கொழுத்தனர்

இந்தச் சூழலில் தான் ஒரு வலிமையான மீன்பிடி தொழிலாளர் சங்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கட்டியது.அதே போல் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கமும் அமைக்கப்பட்டது. இந்த சங்கங்கள், உறுப்பினர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், தொழிலாளர்களின் சமூக, கலாச்சார, சொத்து மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளையும் கையிலெடுத்தது. எனவே இது மக்களின் கவனத்தை ஈர்க்கும் மையமாக மாறியது.

வயலாரில் 1943 ஆம் ஆண்டு பஞ்சத்தின் போது பட்டினியால் 21,000 க்கும் மேற்பட்டோர் இறந்தனர். தவிர, கள்ளிறக்குபவர்கள், தென்னை மரம் ஏறுபவர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பலர் இருந்தனர். இந்தச் சங்கங்களை சீர்குலைக்க, நில உடமையாளர்கள் பல முறை கடுமையாக முயற்சித்தனர். ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பின்னால் மக்கள் உறுதியாக இருந்தனர். கூட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

போருக்குப் பிந்தைய காலத்தில் ஏற்பட்ட ஆழமான பொருளாதார நெருக்கடி தொழிலாளர்களுக்கு சொல்லொணா துயரத்தை ஏற்படுத்தியது. விலைவாசி உயர்வு மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு எதிராக தொழிற்சங்கம் போராட்டங்களை நடத்தியது.

போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் அவர்கள் திவானின் ஆட்சியை எதிர்க்கும் தொழிலாளி வர்க்கத்தின் பின்னால் திரண்டனர். ஆலப்புழா, சேர்த்தலா, முகம்மா ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சங்கங்கள் மூன்று நாட்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன. உணவுப் பொருட்களை குறைந்த



விலையில் விற்பனை செய்ய ஒப்பந்தம் ஏற்பட்டது. அதேநேரத்தில், இயக்கத்தை அடக்குவதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன.

1946 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி சேர்தலாவில் இராணுவம் அணிவகுத்துச் செல்லத் தொடங்கியது. திருவிதாங்கூர் முழுவதும் தொழிற்சங்க, இயக்க நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டு, கைது உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஏஐடியுசி, செப்டம்பர் 1946ல் ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

திருவிதாங்கூர் அனைத்துத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டம் 1946 செப்டம்பர் 25 அன்று டி.வி.தாமஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 55 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 83 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அக்டோபர் 13 அன்று மற்றொரு கூட்டம் நடந்தது. அக்டோபர் 22ல் பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நிலப்பிரபுக்களும், காவல்துறையும், முதலாளிகளும் பதிலுக்குத் தங்கள் பலத்தைத் திரட்டத் தொடங்கினர். உத்தேச வேலைநிறுத்த நாளுக்கு முன்பே அவர்கள் தாக்குதலைத் தொடங்கினர். விவசாய கூலித்தொழிலாளர்கள் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தபோது, கடகரப்பள்ளிக்கு மூன்று லாரிகளில் குண்டர்கள் வந்தனர். வேலை நிறுத்தத்திற்கு ஆயத்தமாகாத தொழிலாளர்களை போலீசும் குண்டர்களும் சேர்ந்து அடித்து விரட்டினர். 16 பேரைப் பிடித்தனர். அவர்களது கைகளை பின்புறம் கட்டி, நிலச்சுவாந்தார் வீட்டில் வைத்து ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து, தென்னை மரங்களில் கட்டி வைத்தனர்.

இதனை அறிந்து தொழிலாளர்கள் கொதித்து எழுந்தனர். ஆனால் அடிப்பதையும் மிதிப்பதையுமே தொழிலாகக் கொண்ட போலீஸ் மற்றும் குண்டர்களின் வலிமையோடு தாக்கினர். நிலப்பிரபுக்களால் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். தினமும், 20, 30 தொழிலாளர்கள் பிடிக்கப்பட்டு, கை, கால்கள் கட்டப்பட்டு, அடித்து, லாக்அப்பில் தள்ளப்பட்டனர். இதனால் 300க்கும் மேற்பட்டோர் சேர்த்தலா லாக்அப்பில் அடைக்கப்பட்டனர்.

மதவெறி, சாதிவெறியைக் கிளப்பி கலவரத்தை உருவாக்க சமஸ்தானத்தின் திவான் முயன்றார். ஆனால் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஆலைத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி 1946 அக்டோபர் 20 முதல் வேலை நிறுத்தம் செய்யுமாறு அறைகூவல் விடுத்தது. மீனவர், கயிறு தொழிலாளர் சங்கங்களை ஆங்கில அரசு தடை செய்தது. ஆனாலும் சேர்தலாவிலும் ஆலப்புழாவிலும் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்தனர்.

புன்னப்புராவில் இராணுவத்தினர் முகாமிட்டனர். தொடர்ந்து மக்கள் தாக்கப்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்ட குழுக்களை அமைத்தது. கிடைத்த ஆயுதங்களை கையில் எடுத்துக் கொண்டு ராணுவ முகாம்களை தாக்க வெளியிடப்பட்டது. பெண் தொழிலாளர்கள் கையில் தடிகளும், அரிவாள்களும் ஏந்தி வலம் வந்தனர். திவானின் ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும், ராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று முழங்கினர்.

அக்டோபர் 24, 1946 அன்று, அனைவரின் கைகளிலும் ஆயுதங்களை ஏந்தி, மூன்று கிலோ மீட்டர் நீளமுள்ள ஊர்வலத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியது. ஊர்வல முடிவில் போலீஸ் முகாமை இடித்து தகர்ப்பதே அதன் நோக்கமாக இருந்தது.

ஊர்வலத்தை தடுத்து நிறுத்தி, கலைந்து செல்லுமாறு போலீஸ் உத்தரவிட்டது. ஆனால் ஊர்வலம் கலையவில்லை. எதிர்த்து மோதினர். போலீஸ் துப்பாக்கிச்சூடு நடத்தியது. பல தொழிலாளர்களும் சில போலீசாரும் இறந்தனர். கிடைத்த ஆயுதங்களை ஏந்திய தொழிலாளர்களுக்கும், துப்பாக்கிகளை ஏந்திய இராணுவம், போலுசுக்கும் இடையே சமமற்ற சண்டை நடந்தது. சேர்தலாவிலும் மோதல் ஏற்பட்டது. அக்டோபர் 25 அன்று, காட்டூரில் தோழர் ஒருவர் கொல்லப்பட்டார். 31 அக்டோபர் 1946 அன்று பொது வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. புன்னப்புரா வயலார் போராட்டத்தின் முதல் கட்டம் வயலார் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது.

1946 அக்டோபர் 27 அன்று, கிட்டத்தட்ட 400 போலீஸ்காரர்கள் வயலார் முகாம் அருகே, படகுகள் மூலம் தரையிறங்கினர். மாலை வரை துப்பாக்கிச்சூடு நீடித்தது, நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

வரலாற்றிலேயே பிரிட்டிஷ்காரர்களால் முட்டுக்கொடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக\ தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ஆயுதம் ஏந்தி போராடியது, புன்னப்புரா வயலார் போராட்டம் ஒன்று மட்டும்தான் என்று வரலாற்று ஆய்வாளர் ராபின் ஜெஃப்ரி கூறுகிறார்.

கிட்டத்தட்ட ஆயிரம் கம்யூனிஸ்டுகளை கொன்று குவித்தது, கம்யூனிஸ்டுகள் அல்லாதவர்களையும் கூட திவான் சி.பி.ராமசாமி ஐயருக்கு எதிராகத் திருப்பியது. இந்தியாவுக்கு விடுதலை தர பிரிட்டிஷ் அரசு முன்வந்த போது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தை சுதந்திர நாடாக தொடர வேண்டும் என்று மகாராஜா சித்திரை திருநாள் பலராம வர்மா விரும்பினார். ஆனால், புன்னப்புரா வயலார் போராட்டம், திருவாங்கூர் சமஸ்தானத்தை இந்திய யூனியனோடு இணைப்பதற்கு வழி வகுத்தது.

# தெபாகா இயக்கம் - 1946



தமது உழைப்பில் விளைவித்த தானியங்களை எல்லாம், எந்தச் செலவும் உழைப்பும் இல்லாமல் நில உடமையாளர்கள் கொண்டு சென்றதை எதிர்த்து, குத்தகை விவசாயிகள் நடத்திய போராட்டம் இது.

1946 இலையுதிர்காலத்தில், வங்காளத்தின் 19 மாவட்டங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான குத்தகை விவசாயிகள், வயலில் அறுவடை செய்த பயிர்கள் அனைத்தையும் களத்துக்கு எடுத்துச் சென்றனர். அவர்கள் விளைபொருட்களில் மூன்றில் இரண்டு பங்கு தமக்கு வேண்டும் என்று கூறினர். 'தெபாகா' என்றாலே மூன்று பங்கு என்றுதான் பொருள். அதுவரை அவர்களது விளைபொருட்களில் சரி பாதிக்கும் குறைவான பங்கு மட்டுமே தரப்பட்டு வந்தது.

அனுமதிப்பார்களா நில முதலைகள்? நில உரிமையாளர்களின் குண்டர்கள் எல்லாம் ஆயுதங்களோடு அவர்களைத் தாக்க வந்தார்கள். அவர்களுடன் போலீசும் சேர்ந்து குத்தகை விவசாயிகளை தாக்கத் தொடங்கியது.

அவர்கள் எதற்கும் அஞ்சவில்லை. வில் அம்புகள், ஈட்டிகள், லத்திகள், சில துப்பாக்கிகளும் கூட ஏந்தி, போலீசையும் குண்டர்களையும் எதிர்கொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, போராட்டத்தை நடத்துவதற்காக ஒவ்வொரு பகுதியிலும் 'தெபாகா'குழுக்களை அமைத்தது. விவசாயிகள் சங்கத்தின் மூலம் இவற்றை ஒருங்கிணைத்தது. தெருவிலிருந்து தலைமை வரை உயிரோட்டமுள்ள தொடர்பை உறுதி செய்தது.

பி.சி. ஜோஷி இயக்கத்தை மிகவும் திறமையாக வழிநடத்தினார். எதிரிகளை நோக்கி உணர்ச்சி வேகத்தில் ஆயுதங்கள் தூக்கிவிடாமலும், போராட்ட உத்திகளில் தவறு நேர்ந்துவிடாமலும் பாதுகாத்தார்.

தெபாகா இயக்கத்தில் பெண்கள் முக்கிய பங்குவகித்தனர்.பெண்கள்கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் திரளாகக் பங்கேற்றனர். நிலவுடைமையாளர்களான ஜோதேதார்களின் அடியாட்களுடைய மிரட்டல்களை மீறி, பயிர்களை அறுவடை செய்தனர். அறுவடை செய்த தானியங்களைப் பாதுகாத்தனர். காவல் துறையினரையோ ஜோதேதார்களின் ஆட்களையோ பார்த்தால் உடனே சங்கொலி எழுப்பி மற்றவர்களுக்கு எச்சரிக்கை தந்தனர்.

நீதிமன்றங்களில் துப்புரவுப் பணியாளர்களாகப் பணிபுரிந்த சில பெண்கள், நீதிமன்றங்களைப் பற்றிய ரகசியத் தகவல்களை இயக்கத்தின் தலைவர்களுக்குக் கொடுத்து உதவினர். ஆண்கள் இயக்கத் தேவைகளுக்காக வெளியூர்களுக்கு செல்லும் சில நேரங்களில், பெண்களே உள்ளூர்க் குழுக்களுக்குத் தலைமையேற்றனர்.

தேவைப்படும் சமயங்களில், காவல்துறை மற்றும் ஜோதேதார்களின் ஆட்களுடன் பெண்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். துடைப்பம், அரிவாள், மிளகாய்ப் பொடி போன்றவற்றை ஆயுதங்களாகப் பயன்படுத்தினர். தம்மை மட்டுமின்றி, குடும்பத்தையும், வாழ்வாதார உரிமைகளைக் கோரும் போராட்டத்தையும் அவர்கள் பாதுகாத்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் பிரித்தாளும் சூழ்ச்சி புகுத்திய வர்ண, மத வெறுப்புணர்வை நிராகரித்து, விவசாயிகளாக ஒன்றுபட்டால் மக்கள் இயக்கம் மகத்தான வெற்றி பெறும் என்பதற்கு 'தெபாகா போராட்டம்' மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

# ஜனநாயகத்தை மறுக்கும் தகவல் நுட்பப் புரட்சி!



த.லெனின்

**தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக இன்றைக்குப் பல மாற்றங்களை நாம் கண்டிருக்கிறோம். மின்னணு தொழில் நுட்பத்தால் மனித குல வரலாற்றிலேயே முதல் முறையாக தரவுகள், ஒலி மற்றும் பிம்பங்கள் ஆகிய தகவல்களின் பல்வேறு வடிவங்கள் ஒரு ஒற்றை உற்பத்தி பொருளில் புகழ்பெற்ற மல்டி மீடியாவோடு இணைக்கப்படுகின்றன அவற்றை உடனடியாக அக்கணமே உலகம் முழுவதும் பரப்பவும் முடியும் என்ற நிலை உள்ளது.**

மல்டி மீடியாவின் செல்வாக்கு அரசியல், தொழில்நுட்பத்துறை மற்றும் கலாச்சார செயல்களில் இயந்திரமான செய்தி ஆகிவிட்டது. சிறிய உற்பத்தி பொருட்களின் சிடி, ராம்கள், கல்வி மென்பொருள், நுண்கணினிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி செயல்படும் மின் பதிவுகள், மல்டி மீடியா டெர்மினல்கள் மற்றும் புதிய சேவைகளின் வருகை வீட்டில் இருந்து கொண்டோ அல்லது பணியிடத்தில் இருந்தோ தரவுகளைத் தேடுவது, தூரத்தில் இருந்து கொண்டு பணிபுரிவது (Tele work), இணையம், தகவல் விஞ்ஞானங்கள், தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் செயற்கைக்கோள்கள் ஆகியவற்றைமின்னணுதொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தின் மூலம் ஒன்றிணைப்பதை இன்று சார்ந்திருக்கின்றன. இது எப்படி இருந்தாலும் உற்பத்திக் கருவிகள் யார் கையில் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் அவை சேவை செய்யும் என்பதில் இதற்கும் விதிவிலக்கு இல்லை.

இன்றைய கண்டுபிடிப்புகளில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் துறைகளில் ஒன்று வெகுஜன ஊடகம்.இதன் மூலம் காலமற்றும் தடை இடைவெளிகள் உடைக்கப்படுவதை சாத்தியமாக்கி விட்டன. வரலாற்றில் முதன்முறையாக ஒரே நேரத்தில் உலகு தழுவிய முறையில் தகவல்கள் அனுப்பப்படுகின்றன, வெளியாகின்றன. இதன் மூலம் கண்டங்களாலும் கடலாலும் பிரிக்கப்பட்ட உலகம், கிராமங்கள், நகர்ப்புறங்கள் இணைப்பால் முன்னேறி உள்ளது என்கிற நிலையை சாத்தியமாக்கி இருக்கிறது.

### காட்சி ஊடகங்கள் சுரண்டலுக்கு சாட்சியம்

சின்னத்திரையில் ஒளிபரப்பப்படுவதை பார்வையாளர்கள் நிஜம்போல் உணர்வதால், அது மிகப் பிரம்மாண்டமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விமர்சன ரீதியாக இதிலிருந்து விலகி நிற்பது மிகவும் கடினம் என்றாலும் உண்மையில் ஊடகங்கள் காட்டும் செய்திகள் எதார்த்தத்தில் இருப்பதில்லை என்பதையும் உணர்த்தி வருகிறது.

### உலகலாவிய ஒற்றைப் பண்பாடு

உலக மையம் தனது வணிக நோக்கத்திற்காகவும் அபரிதமான லாபத்திற்காகவும்ஒருநுகர்வுகலாச்சாரத்தை உருவாக்கி அனைத்து சமூகங்களையும், அதன்பன்மைத்துவத்தையும்,உடைத்தெறிய ஒரு ஒற்றை கலாச்சாரத்தை உருவாக்கி வருகிறது. கால்பந்து ஆட்டங்கள் உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்களால் கண்டுகளிக்கப்படுகிறது. கிரிக்கெட்டும், ஒலிம்பிக் பந்தயங்களும் அதேபோன்று பார்வையாளர்களை ஈர்க்கிறது.

தமிழ்நாட்டின் நடிகர் தனுஷ் பாடிய ஒய் திஸ் கொலைவெறி என்ற பாடல் உலகம் முழுவதும் பல மொழி பேசும் மக்களிடையே கோடிக்கணக்கில் பரவியது. அதேபோன்று காக்கனம் ஸ்டைல் என்ற கொரிய பாடல் நம்மூர் வரை பிரசித்தி பெற்றது. கொரிய வெப் சீரியல் இங்கே பிரபல்யம் அடைந்துள்ளது.இவை அனைத்திலும் ஒரு ஒற்றுமை உண்டு. உலகமய சுரண்டலை ஏகாதிபத்திய வளர்ந்த நாடுகளின் சுரண்டலை கடந்து போகும் மனநிலையை பொழுதுபோக்கு என்கிற அம்சத்தோடு இணைத்து இன்று உருவாக்கி உள்ளது.

### செய்திகள் உருவாக்கப்படுகின்றன

ராய்ட்டர் செய்தி நிறுவனம் மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய ஆய்வில்இந்தியாவில் 73% மக்கள் தங்களது ஸ்மார்ட் ஃபோன் மூலம் தான் செய்திகளை தெரிந்து கொள்கிறார்கள். அதிலும் 53% மக்கள் இந்து மதம், ஜாதகம், பண்டிகை உள்ளிட்டவை குறித்தும் அறிந்து கொள்வதாக கருத்து தெரிவித்திருக்கிறது. இந்த நவீன தகவல் தொழில்நுட்பம் வலதுசாரி, வகுப்புவாத அரசியலுக்கும் அதன் தீவிரப் பரவலுக்கும் சேவை செய்கிறது என்பது மிகத் தெளிவாகிறது. பொதுவாக இது போன்ற சேனல்கள் இதற்கு உகந்த முறையில் செய்திகளை உருவாக்கி, அதை கருவாக்கி, கலவரங்களுக்குத் தீனி போட்டும் வருகின்றன.

பிரான்ஸ் ஹிஸ்கெலாம்மெர்ட் என்ற அறிஞர் கூறியது போல, கருத்துச் சுதந்திரம் இல்லாத மூர்க்கத்தனமான ஜனநாயகம், குறிப்பிட்ட பொருளாதார நலன்களுக்காக உலக மக்களை கட்டுப்படுத்துகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவது சர்வதேச நிதி அமைப்புகள்தான். இந்த சர்வதேச நிதி அமைப்புகள் எந்த ஜனநாயக அமைப்பு முறைக்கும் கட்டுப்படுவதில்லை. ஆனால் ஜனநாயகவாதிகள் போல வேடம் போடுவார்கள். இன்றைய எதார்த்தம் இதனை தெளிவாக்கும்.

### சடுகுடு ஆடும் சமூக ஊடகங்கள்

முகநூல்,வாட்ஸ்அப், எக்ஸ் தளம் அனைத்தும் இன்று செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence ) தொழில்நுட்பத்தோடு பிணைக்கப்பட்ட அல்காரிதத்தோடு செயல்படுகின்றன. உலகமய எதிர்ப்பு செய்திகள், இடதுசாரி ஜனநாயக சக்திகளின் செய்திகள், சமூகம் சார் பகுப்பாய்வுகள் போன்றவை மக்களுக்கு கிடைக்காமல் தடுக்கப்பட்டு விடுகின்றன. எதிர் கருத்துகள் வந்தால் அவற்றை அல்காரிதம் கட்டுப்படுத்தி யாருடைய பார்வைக்கும் படாதவாறு செய்து விடுகின்றன. ஆக இந்த நவீன தொழில்நுட்பம் ஜனநாயக முறைப்படி அனைவருக்குமான வாய்ப்பை வழங்கவில்லை.

ஏப்ரல் 19 அன்று, 15 யூடியூபர்களின் பிரதி நிதிகள் தங்கள் சேனல்களைத் தடுப்பதற்கு அல்லது அவற்றிற்கான விளம்பரப் பணம் வழங்க மறுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க தேர்தல் ஆணையத்திற்குச் சென்றனர். எதுவும் நடக்கவில்லை.

ஹிந்தி யூடியூப் சேனலான லோகித் இந்தியா, அதன் உள்ளடக்கத்தைப் பணமாக்க முடியாது என்று யூடியூப்பில் இருந்து மின்னஞ்சல் வந்தது. அதற்கு இந்தியாவில் கிட்டத்தட்ட 15 லட்சம் சந்தாதாரர்கள் உள்ளனர். சில நாட்களுக்கு முன், ஹிந்தி யூடியூப் சேனலான இண்டஸ் நியூஸ் டிவிக்கும் இதே போன்ற மின்னஞ்சல் வந்தது. இந்தச் சேனல்கள் எதுவும் அதன் உள்ளடக்கத்தைப் பணமாக்க முடியவில்லை.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் ஆணையத்தில் பதிவேற்றிய ஐந்து வீடியோக்கள் யூடியூப்பால் பண மதிப்பிழப்பு செய்யப்பட்டதாக யூடியூபர் சோஹித் மிஸ்ரா தெரிவித்தார். தங்கள் சேனல்களை நிதி ரீதியாக நம்பியிருக்கும் யூடியூபர்களுக்கு இது ஒரு மரண அடி என்றும் அவர் கூறினார்.

“தேர்தல் ஆணையத்தைப் பற்றி ஏதாவது விமர்சிக்கக் கூடிய வீடியோக்களை அவர்கள் கட்டுப்படுத்துகிறார்கள் என்றால், நீங்கள் என்ன செய்யலாம்? என்ன செய்யக் கூடாது? என்று அவர்கள் கட்டளையிடுகிறார்கள்” என்பது தெளிவாகிறது.

கடந்த ஏப்ரல் 9 ஆம் தேதி, கிட்டத்தட்ட 10 மில்லியன் சந்தாதாரர்களைக் கொண்ட யூடியூப் செய்தி சேனலான நேஷனல் தஸ்தக், யூடியூப்பில் இருந்து இந்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் சேனலைத் தடுக்க உத்தரவிட்டதாக ஒரு மின்னஞ்சல் வந்தது. “அறிவிப்பு ரகசியமானது, எனவே இந்த நேரத்தில் அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை” என்றும் அதே மின்னஞ்சலில் கூறப்பட்டுள்ளது. அந்த யூடியூப் சேனல் இயங்கிக்கொண்டுதான் உள்ளது. ஆனால் பத்திரிகையாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று நேஷனல் தஸ்தக் நிறுவனத்தின் நிர்வாகி ஜஸ்னீம் உல் ஹக் கூறுகிறார். இந்த நிறுவனம் “தலித்துகள், ஆதிவாசிகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய ஊடகங்களில் எங்களைப் போன்றவர்களுக்கு இனி இடமில்லை” என்றும் அவர் தெரிவிக்கிறார்.

### அரசுக்கு ஆதரவான குரலுக்கு தடை இல்லை!

தொலைக்காட்சி செய்திகளில் அரசுக்கு ஆதரவான குரல்கள் அதிகமாகிவிட்டதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். உலகின் மிகப்பெரிய தேர்தல் நடந்து கொண்டிருக்கும் நிலையில், பிப்ரவரி 1 முதல் ஏப்ரல் 12 வரை 400க்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கண்காணித்த மீடியா வாட்ச்டாக், நியூஸ் லாண்ட்ரியின் பிரைம்டைம் ஷோக்கள் பற்றிய ஆய்வில், 52% ஒளிபரப்பு நேரம் எதிர்க்கட்சியை விமர்சிப்பதாகவும், மற்றொரு 27% பேர் மோடிக்கு ஆதரவாக செலவிடப்பட்டதாகவும் காட்டுகிறது. இதுதான் தேர்தலில் சமநிலை பேணலா? என்பதை தேர்தல் ஆணையம் தான் விளக்க வேண்டும்.

### வெளியேற்றப்படும் வெளிநாட்டு நிருபர்கள்

தடைகளை எதிர்கொள்வது உள்ளூர் செய்தியாளர்கள் மட்டுமல்ல. ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் தெற்காசிய பணியகத் தலைவர் அவனி டயஸ் சமீபத்தில் நாட்டை விட்டு வெளியேறினார். நான்கு பிரெஞ்சு வெளியீடுகளின் பிராந்திய நிருபர் வனேசா டக்னாக் போன்றவர்களுக்கும் இதே நிலைதான்..

அரசாங்கம் இதை மறுத்தாலும், அதன் அறிக்கையில் “ஒரு கோட்டைக் கடந்துவிட்டது” என்பதால் அவரது விசா நீட்டிப்பு மறுக்கப்படும் என்று அரசாங்கம் அவரிடம் கூறியுள்ளது. ஏப்ரல் 18 அன்று அவர் விசா கட்டணத்தை செலுத்திய நாளில் அவருக்கு நீட்டிப்பு வழங்கப்பட்டது. ஆனால் ஏப்ரல் 20 அன்று வெளியேறச் சொல்லிவிட்டது.

இந்தியாவில் 23 ஆண்டுகள் பணியாற்றிய இந்தியாவின் வெளிநாட்டு குடியுரிமை பெற்ற டக்னாக் (ஏசிமி) பிப்ரவரியில் வெளியேறினார். ஜனவரி மாதம், உள்துறை அமைச்சகத்திடம் இருந்து தனது பத்திரிகை நடவடிக்கைகள் “தீங்கிழைக்கும்” மற்றும் “இந்தியாவைப் பற்றி ஒரு பக்கச் சார்பான எதிர்மறையான கருத்தை உருவாக்கும் விதத்தில் விமர்சனத்திற்குரியவை” என்று ஒரு அறிவிப்பைப் பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டக்னாக்கின் நிலைமை குறித்து கருத்து தெரிவிக்க சி.என்.என் தொலைக்காட்சியின் கோரிக்கைக்கு இந்திய உள்துறை அமைச்சகம் பதிலளிக்கவில்லை.

கடந்த ஆண்டு பிப்ரவரியில் பிபிசியின் இந்திய அலுவலகங்கள் அமலாக்கத்துறையின் சோதனைக்கு உள்ளாயின. பிபிசியில் மோடியை விமர்சித்து ஆவணப்படம் ஒளிபரப்பான சில வாரங்களில், அமலாக்கத்துறை ஆய்வு நடந்தது என்றால் அப்பட்டமாக தெரிவது என்ன? எங்கே நடுநிலை? இந்த ஆவணப்படம் பின்னர் சமூக ஊடகத் தளங்களில் தடுக்கப்பட்டது.

உள்ளூர் பத்திரிகையாளர்கள் மீது தொடங்கிய இந்தத் தாக்குதல், படிப்படியாக வெளிநாட்டு நிருபர்கள், வெளிநாட்டு தொலைக்காட்சிகள் மீதும் நிகழ்ந்தது.

ஏகாதிபத்திய உலகமயம், மறு காலனியாதிக்கம் என்ற நிலையிலும் மீஉயர் காலனியாதிக்கம் (Hyper colonialism) வளர்ந்துள்ளது. இதன் பொருள் அதிகப்படியான லாபத்தை நோக்கி அனைத்தையும் அழிக்கும் முயற்சிகள் என்பதே. இதனை மார்க்சியத்தால் மட்டுமே எதிர்கொள்ள முடியும். மார்க்சியமே சமத்துவ சமுதாயத்தைப் படைக்கும். இவற்றை திரும்பத் திரும்பச் சொல்வதால் அல்ல, புதிய புதிய வழிமுறைகளை உருவாக்கி பயணிப்பதன் மூலமே சாதிக்க முடியும். அதற்கான முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டில் நாம் மேற்கொண்டே ஆக வேண்டும்.

தொடர்புக்கு: 9444481703



# சங்கிகள் கட்டமைக்கும் புளுகுமூட்டை விவாதங்கள்

## கம்யூனிஸ்ட்டுகள் எதிர்கொண்டிருக்கும் புதிய அச்சுறுத்தல்



வ.மணிமாறன்

**நூறாவது ஆண்டில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி, ‘இணைய வெளி’ அச்சுறுத்தல் என்ற புதிய பிரச்சனைக்கு எதிராகப் போராட வேண்டிய தேவையை எதிர்கொண்டிருக்கிறது.**





அவதூறுகளைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதையும் தாண்டி உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான வேறுபாட்டை அழிப்பது. உண்மை எது? பொய் எது? என்பது தெரியாமல் குழப்பம் அடையச் செய்வது, இதனைப் பயன்படுத்தி பொய்யையே உண்மை என்று சாதிப்பது இதுதான் பாசிஸ்ட்டுகளின், வலதுசாரிகளின் இயல்பு. இதனைத்தான் சங்கிகளும் நாம் தமிழர் தம்பிகளும் செய்து கொண்டிருக்கின்றனர். சமூக ஊடகங்களும் இதனைப் புரிந்துகொள்ளாமல் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு கடந்த இரண்டு மாதங்களாக தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளே சான்றுகளாகும்.

வழக்கறிஞரும், திராவிடர் கழக மாநில துணைப் பொதுச்செயலாளருமான மதிவதனி மீது பாஜகவினர் பாய்ந்து பிராண்டினர். அவர் என்ன பேசினார் என்பதே தெரியாத அளவுக்கு புளுகுமூட்டைகளைப் பரப்பினர்.

எஸ்.எம்.காந்தலட்சுமி என்ற தன்னுடைய பெயரை மதிவதனி என மாற்றி வைத்துள்ளார். தன்னுடைய அப்பா, அம்மா பெயர்களைத் திரித்து தமிழ்ப் பெயர் போன்று கூறுகிறார். மதிவதனி திராவிட அரசியலுக்காக ஏமாற்றுகிறார். இப்படி சமூக ஊடகங்களில் சங்கிகள் பரப்புகின்றனர். பசப்புகின்றனர்.

சங்கிகளின் பதிவுகளைப் படிக்கும் யாருக்கும் குழப்பம் வந்துவிடும். உண்மையில் மதிவதனிக்கு வேறு பெயர்கள் எதுவும் இல்லை. அவருடைய இயற்பெயரே மதிவதனிதான். இங்கு பொய் சொல்வது யார்? பொய்யையே உண்மை எனப் பரப்புவது சங்கிகள்தானே தவிர மதிவதனி அல்ல. இதேபோன்று, மதிவதனியின் பேச்சுகளை வெட்டியும் ஒட்டியும் பரப்புகின்றனர்.

இந்தப் புளுகுமூட்டைகளை உண்மையான விவரம் போன்று எடுத்துக்கூறி, அரசியல் உரையாடல் ஒன்றைக் கட்டமைக்கின்றனர். சமூக ஊடகங்களில் அவற்றை விவாதம் ஆக்குகின்றனர். திராவிட அரசியலை கொள்கை நிலையிலும் கோட்பாட்டிலும் மறுத்து விவாதிப்பதை விடுத்து புளுகுமூட்டைகளின் மூலம் கீழே தள்ளிவிடலாம் என சங்கிகள் நினைக்கின்றனர்.

இதைத்தான் கோயபல்ஸ் செய்தார். இப்படித்தான் ஹிட்லரின் பாசிசத்திற்கு ஆதரவான அரசியல் உரையாடலை கோயபல்ஸ் கட்டமைத்தார். அவரின் வாரிசுகளான சங்கிகளும் அதனைத்தான் செய்கின்றனர்.

அரசியல் விவாதம் ஆக்கு வதோடு சங்கிகள் நின்ற நிலையில், மதிவதனி மீதான நேரடித் தாக்குதலாக மாற்றியவர் அர்ஜூன் சம்பத். கொலை மிரட்டல் விடுத்து அவரை ‘அமைதி’யாக்கிவிட அர்ஜூன் சம்பத் முயன்றார்.

‘அமரன்’ திரைப்படம் குறித்து மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி விமர்சித்துப் பேசியிருந்தார். அவர் ‘ராணுவத்தை கொச்சைப்படுத்திப்’ பேசியிருப்பதாக பொய்யான விவாதம் ஒன்றை சங்கிகளின் தொலைக்காட்சியான ‘தமிழ்ஜனம்‘ தொடங்கி வைத்தது. சமூக ஊடகங்களில் இருக்கும் சங்கிகள் அனைவரும் புளுகுமூட்டை விவாதத்தைக் கட்டமைத்தனர். திருமுருகன் காந்தி எதற்குப் பதில் சொல்வது? பொய்யான விவரத்திற்குப் பதிலளிப்பதா? அதன் மூலம் கட்டமைக்கப்பட்ட புளுகுமூட்டை விவாதத்திற்கு விளக்கம் அளிப்பதா?

இதற்கு நாம் விளக்கம் அளிப்பதற்குள், இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான், நக்கீரன் கோபால் மீது அவதூறு ஆதாரங்களைக் கொண்டு, புளுகுமூட்டை விவாதங்களை கட்டமைத்தனர். நீட் தேர்வை நடிகர் சூர்யா எதிர்த்தார் என்பதற்காக, அவருடைய ‘கங்குவா’ திரைப்படத்தின் மீது வன்மத்தைக் கக்கினர்.

‘தமிழ்நாடு வெதர்மென்’ பிரதீப் ஜான் மீதான அவதூறை சுமந்த் ராமன் தொடங்கி வைக்க, ஒட்டுமொத்த சங்கிகளும் புளுகுமூட்டை தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மார்கழி இசை விழாவில் கானா பாடல் ஒன்றை இசைவாணி பாடியிருந்தார். அப்பொழுது ஐயப்பன் கோவிலுக்குள் பெண்கள் வழிபடச் செல்லலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நேரம், பாஜகவினர் அதனை ஏற்க மறுத்து அடாவடி போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அதற்கு எதிர்ப்பாக, பெண்ணுரிமையை உயர்த்திப் பிடித்து இசைவாணி பாடியிருந்தார். அந்தப் பாட்டு,

“ஐயாம் சாரி ஐயப்பா
நான் உள்ளே வந்தா என்னப்பா
பயம் காட்டி அடக்கி வைக்க
பழைய காலம் இல்லப்பா..” என்று போகிறது.

ஐயப்பனை இசைவாணி அவமதித்துவிட்டார். இசைவாணி கிறிஸ்தவர். அவர் எப்படி இந்துக் கடவுளைப் பற்றி பாடலாம். இவை எதுவும் உண்மை கிடையாது. அவரை இப்படி விமர்சித்ததுடன், சொல்லக் கூசும் வார்த்தைகளால் திட்டியும் பதிவிட்டனர். இதில் பாஜக மட்டுமல்ல பல்வேறு அமைப்புகளின் பெயர்களில் இருக்கும் சங்கிகள் அனைவரும் ஒரே நேரத்தில் தாக்குதலில் ஈடுபட்டனர். அவருடைய மொபைல் எண்ணையும் பகிர்கின்றனர். உடனே அந்த எண்ணுக்கு அழைத்து அசிங்கம் அசிங்கமாகப் பேசுகின்றனர். ஐயப்பனை அவமதித்துவிட்டதாக காவல்நிலையங்களில் எல்லாம் புகார் அளித்தனர். இவற்றை எல்லாம் கண்டு இசைவாணி என்ன ஆகியிருப்பார்?

பொய்யான விவரங்களைப் பேசுவது, புளுகுமூட்டை விவாதங்களைக் கட்டமைப்பது, அடாவடிகளில் ஈடுபடுவது என்பதை இசைவாணியிடமும் செயல்படுத்தினர்.

இதேபோன்று, சென்னை மழையின் போதும், புயல் வெள்ளத்தின் போதும் தமிழ்நாடு அரசின் மீதும் திமுக மீதும் ‘இணைய வெளி’யில் (சைபர் ஸ்பேஸ்) தாக்குதலை நடத்தினர். இவை அனைத்தும் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் நடந்தவை. இந்தப் பட்டியல் இன்னும் நீளமானது.

‘இணைய வெளியில்’ புளுகுமூட்டை விவாதங்களை கட்டமைப்பதற்காக போலி சமூக ஊடகக் கணக்குகளை சங்கிகள் உருவாக்கி வைத்துள்ளனர். தமிழ்நாடு அரசு இந்த ‘இணைய வெளிச் சங்கிகள்’ மீது வழக்குப்பதிவு செய்யவோ, முகநூல், டுவிட்டர் போன்றவற்றில் உள்ள அவர்களின் போலி சமூக ஊடகக் கணக்குகளை முடக்கவோ செய்யவில்லை. அவதூறுப் பதிவுகளை நீக்கவும் இல்லை. இணைய குற்றப்பிரிவு (சைபர் கிரைம்) காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது.

சமூகத்தை, மக்களை நேசிப்பவர்களும் கம்யூனிஸ்ட்டுகளும் இதனை எதிர்கொள்ள ‘இணைய வெளியில்’ தயாராக வேண்டும். சங்கிகள் கட்டமைக்கும் புளுகுமூட்டை விவாதங்களையும் அடாவடிகளையும் ஒன்றிணைந்து அம்பலப்படுத்த வேண்டும். தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும்.

தொடர்புக்கு: 9500001224

## மார்க்சிய மெய்யியல் கல்வி நிலையம் நிறைவேறிய கனவு



மார்க்சிய லெனினின் சித்தாந்தத்தை கற்பிப்பதற்கான ஒரு நிரந்தரமான பள்ளி அமைக்க வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட கால கனவாக இருந்து வந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான தோழர் சி எஸ் சுப்பிரமணியம், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் 32 சென்ட் இடத்தையும், தனக்கு வந்த விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தில் சுமார் 45 லட்ச ரூபாயையும் கட்சிக்கு எழுதி வைத்தார். அதைக் கட்சிக் கல்விக்கு பயன்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்து இருந்தார்.

தோழர் சி எஸ், 18.9.2011ல் மறைந்தார். அந்த இடத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு கல்விக்கூடத்தை கட்ட கட்சி முடிவு செய்தது. 18.9.2020ல் தோழர்கள் தா.பாண்டியன் இரா. நல்லகண்ணு முன்னிலையில் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இடையில் கொரோனா பெருந்தொற்று வந்ததால் கட்டிடப் பணி தாமதப்பட்டது. சுமார் 5 கோடி ரூபாய் செலவில், தரைத் தளத்தில் அரங்கம், முதல் தளத்தில் உணவுக் கூடம், இரண்டாம் தளத்தில் நவீன வசதிகளுடன் வகுப்பறைகள், நூலகம், மாணவர்களுக்கான உணவுக் கூடம், மூன்றாம் தளத்தில் மாணவர்களுக்கான தங்கும் அறைகள் ஆகியவற்றோடு கட்டப்பட்ட தியாகசீலர் சி எஸ் சுப்பிரமணியம் அரங்கத் திறப்பு விழா 27.5.2024 அன்று நடைபெற்றது.

முதல் சுற்றாக, மார்க்சிய மெய்யியலின் அடிப்படைகளைக் கற்பிக்க மூன்று நாள் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இயக்கவியல் பொருள் முதல் வாதம், வரலாற்றுப் பொருள் முதல் வாதம், அரசியல் பொருளாதாரம்,

விஞ்ஞான சோசலிசம், உலகமயச் சூழலில் இந்தியப் பொருளாதாரம்,

பாசிசத்தை நோக்கி இந்திய வகுப்பு வாதம், சாதி, வர்க்கம்,அடையாள அரசியல், தமிழ்நாட்டின் தனித்தன்மைகள், அமைப்பாய் திரட்டுதல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு, இந்திய புரட்சியின் ஜனநாயகத் திட்டம், லெனினியக் கோட்பாடு அமைப்பு விதிகள் உள்ளிட்ட தலைப்புகளில் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

பள்ளியின் முதல்வராக கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினரான எம்.செல்வராஜ் முழு நேரப் பணியில் செயல்படுகிறார். கல்வித்துறையிலும், கட்சிப் பணிகளிலும், தொழிற்சங்கங்களிலும் பணியாற்றிய அனுபவம் மிக்க தோழர்கள் ஆசிரியர்களாக இருந்து பாடங்களை நடத்துகிறார்கள்.

இரவு நேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை உள்ளிட்ட காரல் மார்க்ஸ், ஃபிரடரிக் எங்கல்ஸ், லெனின் ஆகியோர் எழுதிய புத்தகங்கள் மீதான கலந்துரையாடல் நடத்தப்படுகிறது.

சிந்து சமவெளி நாகரிகம் குறித்த கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் இருந்து ஒவ்வொரு மாவட்டமாக, மாவட்டக் குழு உறுப்பினர்கள், இடைக் குழு செயலாளர்கள் மட்டத்தில் இந்த வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. போக்குவரத்து, கட்டிட தொழிலாளர் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் சங்கங்களும் இங்கு அடிப்படைக் கல்வியோடு தமக்குரிய பாடங்களையும் சேர்த்து முகாம்களில் உற்சாகத்தோடு பங்கேற்று வருகிறார்கள்.

முதல் சுற்று முடிந்த பின், அடுத்த கட்ட பாடத்திட்டம் வடிவமைக்கப்படும்.

“எனக்கு ஒரு இளம் தலைமுறையைக் கொடுங்கள்,

உலகத்தை மாற்றி காட்டுகிறேன்” என்பார் லெனின்.

தன்னலம் கருதாது, எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது, மக்களின் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபடும் கட்சியின் ஊழியர்களுக்கு, சித்தாந்தத் தெளிவோடு அமைப்பைக் கட்டவும் அரசியல் நடத்தவும் இந்தப் பயிற்சி பெரும் துணை செய்யும்.

# சாதியக் கட்டமைப்பை உடைத்தெறிவோம்!



அ.பாஸ்கர்

**“முரண்பாடுகள் நிறைந்த இந்த வாழ்க்கையை எத்தனை காலம்தான் வாழ்வது. நமது சமூக, பொருளாதார வாழ்க்கையில் சமத்துவமற்ற ஏற்றத்தாழ்வுகளை நாம் தொடர்ந்து அனுமதித்தால் நமது அரசியல் ஜனநாயகம் என்பது ஆபத்திற்குள்ளாகும். இந்த முரண்பாடுகளை நாம் விரைவில் கலைய வேண்டும். இல்லையென்றால் சமத்துவமற்ற அமைப்பை உடைத்து நொறுக்குவார்கள். நாம் அரும்பாடுபட்டு வடிவமைத்த இந்தச் சட்ட அமைப்பு நொறுங்கும்”**

இவ்வாறு அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு மனதாக ஏற்றுக்கொண்ட நேரத்தில் எச்சரித்தார் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்.

ஆளும் வர்க்கமும் ஆட்சியாளர்களும், அம்பேத்கரின் எச்சரிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் இருந்ததை நமது அரசியல் அனுபவம் உணர்த்துகிறது.

இந்தியாவிடுதலைபெற்று77 ஆண்டுகள் கடந்துவிட்டன. சுதந்திரமடைந்த புதிய இந்தியாவை நிர்மாணிக்க, அரசியலமைப்பு நிர்ணய சபை உருவாக்கித் தந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை நமக்கு, நாமே ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகளாகப் பயணித்து வருகிறோம்.

அரசியலமைப்புக்கும், சட்ட முறைகளுக்கும் நிகழ்கால நடப்பில் பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆபத்தில் இருந்து அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

சமூகத்தால் தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் எனப் பிளவுபடுத்தப்பட்ட மக்களின் சமூக வாழ்க்கையில் சமஉரிமை பெற வேண்டும், மனிதனாக மதிக்கப்பட வேண்டும், எனப் போராடிய சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் கனவு நிறைவேறி உள்ளதா? இன்றைய ஆட்சியாளர்கள் அம்பேத்கர் கனவை நிறைவேற்றும் திசை வழியில் செயல்படுகிறார்களா?

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது இது உண்மைதானா? அதுவும் ஏட்டளவில் தானே உள்ளது!

தொழிலாளர்களின் போராட்ட வரலாற்றில் “சாதிகள்” உழைக்கும் மக்களின் உரிமையைப் பறிக்கும் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.



முதலாளியோ, நிலச்சுவான்தாரரோ, தொழிலாளர்களிடம் இருந்து, தனது அடிப்படை வாழ்வாதார மேம்பாட்டிற்கான கோரிக்கை வந்தால் அதனை ஏற்றுக் கொள்வதை அதிகார இழப்பாகக் கருதுகிறார்கள். அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களும் இதே நிலையைத்தான் மேற்கொண்டு வருகின்றனர்.



சாதியப் பாகுபாடு மற்றும் தீண்டாமை குறித்து நாடு முழுவதும் எடுக்கப்பட்ட சில புள்ளி விவரங்கள் நமக்கு மிகப்பெரிய வேதனையைத் தருகிறது.

இந்தியாவில் பஞ்சாப், உத்தரப்பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, பீகார், ஒரிஸ்ஸா, மணிப்பூர் ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தீண்டாமை குற்றச் செயல்கள் அதிக அளவில் நடந்து வருகின்றன.

இங்குள்ள ஆதிக்கச் சாதியினரின் பெரிய அளவிலான சமூக வளர்ச்சியின் பலனை அபகரித்துக் கொண்டனர். பட்டியல் சாதியினர் என வகைப்படுத்தப்பட்டுள்ள உழைக்கும் மக்களின் பொருளாதார முன்னேற்றம் குறுக்கிவெட்டிச் சுருக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக உடல் உழைப்புத் தொழிலாளர்கள் கடுமையான நிபந்தனைகளை ஏற்று, மிகக்குறைந்த கூலிக்குத் தமது உழைப்பை விற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.

இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்றார் தேசப்பிதா காந்தி. அந்தக் கிராமங்களில் 73% குடும்பங்களின் வீடுகளில் பட்டியல் சாதி மக்கள் நுழைய முடியாது என்பதைத் தற்போது வெளிவந்த ஆய்வுக் குறிப்பு தெரிவிக்கிறது.

பட்டியல் சாதியினர், பிற சாதியினருடன் அமர்ந்து உணவு உண்ண முடியாத நிலை 70% கிராமங்களில் இன்றும் அவலமாக நீடிக்கிறது.

“ஆண்டவன்” சந்நிதியில் அனைவரும் சமம் என “ஆன்மீகம்“ பேசும் நம் நாட்டில் உள்ள கோவில்களில் 64% கோயில்களுக்குள் பட்டியல் சாதியினர் நுழைய முடியாது.

கிராமங்களில் உள்ள பலசரக்கு மளிகை கடைகளில் 36 சதவீத கடைகளில் பட்டியல் சாதி மக்கள் சமமாக நின்று பொருட்கள் வாங்க முடியாது.

கிராமங்களில் நடத்தப்பட்ட இந்த ஆய்வு ஏறக்குறைய 3ல், 1 பங்கு கிராமங்களில் பொதுவாகப் பயன்படுத்தும் உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்கும் பணியில் பட்டியல் சாதி மக்கள் வியாபாரிகளாகச் செயல்படுவதை அனுமதிப்பதில்லை என்பதும் தெரியவருகிறது.

இத்தகைய தீண்டாமையும், ஒதுக்கி தனிமைப்படுத்தும் சமூக அநீதி நடைமுறைகளால் பட்டியல் சாதி மக்கள் தங்களது விருப்பப்படி சம்பாதிக்கும் முறையை தேர்வு செய்து கொள்ள முடிவதில்லை. அரசியல் அமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் குடிமக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படும் என்பது அர்த்தம் இழந்து நிற்கிறது.

பல்வேறு காரணங்களால் கூலி உயர்ந்து வரும் காலங்களில் கூட, உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சாதிக் கொடுமைகள் காரணமாக மலிவான கூலிக்கும், கூலி பெறமாலும் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு ஆட்பட்டு வருகின்றனர்.

இந்தியா அபாரப் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் சூழலிலும் இத்தகைய பாகுபாடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்திய நிலப்பரப்பு முழுவதும் சாதிய ஒடுக்குமுறை மிக மோசமான மனித தன்மையற்ற வடிவங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி இனப் பெண்களை நிர்வாணப்படுத்தி, வீதி வீதியாக அழைத்து வந்து வயல் வெளியில், அவர்களை கும்பலாக சேர்ந்து பாலியல் வன்புணர்வு செய்து, உயிரிழந்த பிறகு குப்பை போல் தூக்கி எறிந்து செல்கிறார்கள் என்ற செய்தி இதயத்தில் விழுந்த நெருப்பாய்ச் சுடுகிறது.

காலனி ஆட்சியிலும், அதற்கு முந்தைய காலங்களிலும் பட்டியல் சாதியினர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள், பொதுத் தெருக்களில் நடக்க முடியாது, காலில் செருப்பு அணிந்து செல்ல முடியாது, பொது கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாது, தோளில் துண்டு போடக்கூடாது, பண்ணை அடிமையின் வாரிசுகள் படிக்கக் கூடாது என எழுதப்படாத சட்டமாக இருந்தது.

டாக்டர் அம்பேத்கர் வடிவமைத்த இந்திய அரசியல் அமைப்பு சட்டம் பட்டியல் சாதி மக்களுக்கு வழங்கிய இடஒதுக்கீட்டின் மூலம் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் நுழைந்து அரசியல் அதிகார மையத்தில் அமரும் வாய்ப்பு கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக கல்வி, வேலை வாய்ப்பு தளங்களிலும் முன்னேற கதவு திறந்து விடப்பட்டது,

உள்ளாட்சி தேர்தலில் பங்கேற்று, கிராம ஊராட்சி தலைவர்களாக செயல்படும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

ஆனால், பட்டியல் சாதியினர் ஒருவர் தலைவருக்கான இருக்கையில் அமர்ந்து பணிபுரிய சாதிய சமூகம் அனுமதிக்கிறதா? என்ற வினா எழுகிறது.

சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் போன்ற அரசியலமைப்பு சார்ந்த நாட்களில் தமது கடமைகளையும் செய்ய விடாமல் சாதி வெறி அதனைத் தடுத்து, தாக்குதல் நடத்துகிறது. இது போன்ற நேரங்களில் சட்டம் சார்பு நிலை எடுப்பதை காண முடிகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், முட்டுக்காடு ஊராட்சிக்குட்பட்ட இறையூர், வேங்கைவயல் கிராமத்தில் பட்டியல் சமூக மக்கள் பயன்படுத்தி வரும் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் மனித மலம் கலக்கப்பட்ட வன்மம் வெளிப்பட்டது. இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் மேல்நிலைப் பள்ளியில் படித்து வந்த பட்டியல் சமூக மாணவன் மற்றும் அவரது சகோதரி மீது, சக மாணவர்கள் சாதி வெறியோடு நடத்திய கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் இன்னும் இரட்டை குவளை முறை இருப்பதும், கோயிலில் பட்டியல் சாதி மக்களை நுழைய விடாமல் தடுப்பதும், பட்டியல் சாதியை சேர்ந்தவர்கள் இறந்தால் சடலத்தை ஆதிக்க சாதியினர் வசிக்கும் தெருக்கள் வழியாக கொண்டு செல்ல கூடாது என தடுத்து, இறந்தவர்களுக்கும் அநீதி இழைக்கப்படும் அவலமும் தொடர்கின்றது.

## ஆதிக்க வர்க்கத்தை எதிர்த்து

மனிதன், மனிதனாக வாழ்வதற்குச் சமூகச் சீர்திருத்தம் செய்வது மட்டும் பலன் தராது. நடப்பில் உள்ள சாதியச் சமூக அமைப்பை அடியோடு மாற்றி அமைக்க வேண்டும். இது ஏதோ தோசை திருப்பி போடுவது போலச் செய்யும் சமையல் வேலை போன்ற எளிமையான வேலையல்ல. நெருப்பாற்றில் நீந்திக் கரையேறுவது போன்ற கடினமானது. ஆம், பன்னாட்டுக் குழும நிறுவனங்கள், நிதி மூலதனச் சக்திகள் ஆதரவோடு, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள வகுப்புவாத, மத வெறிச் சக்திகளிடம் இருந்து அரசியல் அதிகாரத்தைப் பறிக்க வேண்டும். அது உழைக்கும் மக்களின் கரங்களுக்கு மாற்றப்பட வேண்டும். அப்போது தொடங்கும் சமூகத்தை மாற்றி அமைக்கும் பணி என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். இந்தக் கடினமான பாதையில்தான் செங்கொடி இயக்கம் நூறாண்டுகளாகப் போராடி வருகிறது.

இந்தியாவிலும், தமிழகத்திலும் சமூக நீதிக்கான போராட்டத்தைச் சமரசமின்றி முன்னெடுத்து வரும் இயக்கம் செங்கொடி இயக்கம்!

இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட, தமிழ்நாடு அரசியல், சமூக, மற்றும் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளில் முன்மாதிரியாக இருப்பதில் செங்கொடி இயக்கத்தின் பங்கு மறுக்க முடியாது.

வரும் ஓராண்டு முழுவதும் செங்கொடி இயக்கத்தின், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின்புகழ்பூத்துநிற்கும்சாதனைகளைப் பட்டியலிட்டு, மக்களிடம் வர்க்க உணர்வை ஏற்படுத்தும் விழிப்புணர்வு இயக்கத்தை முன்னெடுப்போம். இந்தச் சாதியச் சமூக அமைப்பை உடைத்தெறிவோம்!

கடந்த 1968 டிசம்பர் 25 கீழவெண்மணியில் அரைப்படி நெல் கூலி கேட்டுப் போராடியவர்களைச் சாதி வெறி ஆதிக்கத்தால் தீ வைத்துக் கொல்லப்பட்ட 44 தியாகிகள் பெயரால் உறுதி ஏற்போம்!




தொடர்புக்கு : 9488488339

**அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் 2வது அகில இந்திய மாநாடு 2025 ஜன. 5,6,7 ஐதராபாத்**

**இந்திய நாடக வெளியில் மூன்றாம் அரங்கை உருவாக்கிய புரட்சிகர நாடகவியலாளர் பாதல் சர்காரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவோம்.**

# நூற்றாண்டு காணும் பாதல் சர்க்கார்



புதுமையான நாடக நிகழ்த்துமுறை, உள்ளடக்கம் குறித்த சிந்தனையாளர்கள் மற்றும் நாடக செயல்பாட்டாளர்கள் பலர் இருந்தாலும் சர்காருடைய புரட்சிகரமான மூன்றாம் அரங்கின் செயல்பாடானது உலகெங்கிலும் உள்ள சமூக நாடகக் குழுக்களிடையே அதிர்வலைகளை எழுப்பியது.

1924 ஜூலை 15 அன்று கல்கத்தாவில் பிறந்த சர்காரின் இயற்பெயர் சுசீந்திர சர்கார். அவர் பிறந்த நேரம் கருமேகங்கள் சூழ்ந்து மழை பெய்ததால், அவருக்கு 'பாதல்'சர்கார் (பெங்காலியில் பாதல் என்றால் மேகம் என்று பொருள்) என்று பெயர் சூட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, இந்த அற்புதக் குழந்தையின் பிறப்பு இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. கல்கத்தாவிலோ அல்லது நகர்ப்புற இந்தியாவில் மட்டுமன்றி, தொழிலாளர்களின் தூசி நிறைந்த கிராமக் குடியிருப்புப் பகுதிகள் போன்ற பகுதிகளிலும் கொண்டாடுகிறார்கள்.

மார்க்ஸ்,ஏங்கெல்ஸ்வரையறுத்துள்ளபடி, கலையானது, சமூகத்தின் மனசாட்சியின் வடிவங்களில் ஒன்றாகும், எனவே அதன் மாற்றங்களுக்கான காரணங்களை மனிதர்களின் சமூக இருத்தலில் தேட வேண்டும். அதைத்தான் ஒரு இடதுசாரி சிந்தனையாளரான சர்கார் தன் நாடகங்களின் வாயிலாக இடையறாது செய்து காட்டினார்.

தன் பதின்ம வயதிற்கு முன்னரே தனது முதல் நாடகத்தை எழுதினார் பாதல் சர்கார். அந்தநாடகத்திற்கு அறிவுஜீவியான அவரது சகோதரியின் தோழியிடம் அங்கீகாரத்தை எதிர்பார்த்த சர்க்காருக்கு அவமானமே ஏற்பட்டது. அது தூக்கி எறியப்பட்டதால், இனி நாடகம் எழுதப் போவதில்லை என்று முடிவு செய்தார்.

ஆனால் அதே பாதல்தா பின்னாளில், 1992ல் இங்கிலாந்திலுள்ள பர்மிங்காம் பல்கலைக்கழகத்திற்கு 'நாடகம் மற்றும் அவரது மூன்றாவது அரங்கு தத்துவம்' பற்றிய மூன்று வார கால அமர்வுக்கு அழைக்கப்பட்டார். அவரது படைப்புகள் பல்வேறு பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களின் இலக்கியப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளன. அறிஞர்கள் பலரும் அவரது நாடக அரங்கவியல் குறித்த ஆய்வினை, அதிக அளவில் செய்துள்ளனர்.

அவர் எழுதிய முதல் வெற்றிகரமான நாடகம் 'சொல்யூஷன் எக்ஸ்' எனும் நகைச்சுவை நாடகம். அது ஒரு போட்டியில் முதல் பரிசையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து, அவர் பல்லவ்புரேர் ரூப்கதா, போரோபிஷிமா மற்றும் இன்னும் சில நகைச்சுவை நாடகங்களை எழுதினார்.

பின்பு இந்திய நாடக உலகையே உலுக்கிய 'ஏவம் இந்திரஜித்' எனும் நாடகத்தைப் படைத்தார். இந்தியாவின் தலை சிறந்த நாடக ஆளுமைகளுள் ஒருவரான கிர்ஷ் கர்னாட் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பின்னர் மற்ற மொழிகளிலும் மொழியாக்கங்கள் வந்தன; தமிழில் 'பிறகு ஒரு இந்திரஜித்' என்று மொழியாக்கம் செய்யப்பட்டது. இந்தி, மராத்தி, அஸ்ஸாமி, தமிழ், கன்னடம், மலையாளம் என அனேகமாக அனைத்து பிரபல வேற்று மொழி நாடக வெளியிலும் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டு, அதிர்வலைகளை ஏற்படுத்தியது. கிரீஷ் கர்னாட்டின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்தால் அச்சிடப்பட்டது. பின்னர், இந்த நாடகம் குறித்து உரையாற்றுவதற்கு வெளிநாடுகளில் உள்ள மிகவும் மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களிலிருந்து பாதல்தாவிற்கு அழைப்புகள் வந்தன.

இந்திய மக்கள் நாடக இயக்கத்தில் (இப்டா) பிரபலமான அனைத்து முன்னணி நாடக ஆளுமைகளும் ஆதரவாக இருந்தனர். இந்த நாடகத்தின் வாயிலாக இந்திய நடுத்தரவர்க்கத்தின் இருத்தலியல் நெருக்கடியை அவர் வெளிப்படுத்திய விதம் இன்றளவும் உலகம் முழுவதும் உள்ள நாடகப் பண்டிதர்களை வியப்பில் ஆழ்த்துகிறது.

இதற்குப் பின் அவர் ஸ்தாபன எதிர்ப்பு நாடகங்களை எழுதி, நிகழ்த்திய போது, அவை நக்சல்பாரி நாடகங்கள் என்று முத்திரை குத்தப்பட்டது. அதே சமயத்தில். நக்சலைட்டுகள் பாதல்தாவை, அன்னிய கைக்கூலி என்று வசை பாடினர். தொடக்க காலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்த பாதல்தா பின்னாளில், கட்சி சாராமல் தன்னை ஒரு கட்சி சாராத இடதுசாரி என்று கூறிக் கொண்டார். தாம் மேற்கொண்ட பணியினைத் தொய்வின்றி இடையறாது செய்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் காவல் துறையின் தலையீடுமிகவும்தீவிரமானது.ஏகாதிபத்திய எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படும் ஜூலை 20, 1974, அன்று கல்கத்தா நகரப் பூங்கா ஒன்றில், ஒரு நக்சலைட் தலைவர் அங்கு வந்திருப்பதாகக் கூறி போலீசார் திரளாகக் கூடியிருந்த மக்களைச் சுற்றி வளைத்து வேனில் ஏற்றினர். அப்போது ஏற்பட்ட கைகலப்பிற்குப் பின் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் பிரபீர் தத்தா என்ற ஒருவர் காயப்பட்டு கல்கத்தா மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப் பட்டார்.

அன்றிரவு மருத்துவக் கல்லூரியில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். பிரபீர் தத்தா மாண்ட செய்தி பரவியதும் மறுநாள் மருத்துவமனையின் சவக்கிடங்கில் பிபாஷ் சக்ரவர்த்தி, குருதாஸ் தாஸ்குப்தா, அசித் பாசு உள்ளிட்ட பலரும் உடலைப் பிரபீரின் தாயாரிடம் ஒப்படைக்கப் போராட வேண்டியதாய் இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, இந்த சம்பவத்தைக் கண்டித்து நடந்த ஒரு கூட்டத்தில், தொழிலாளர்கள், மாணவர், இளைஞர் அமைப்புகள் மற்றும் பொது மக்கள் என ஏராளமானோர் கூடி நாடக வடிவில் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்தனர். பின்னர், சிலநாட்களுக்கு முன்பே முதன்முறையாக பாதல்தாவின் 'சதாப்தி' நாடகக் குழுவினரால் அரங்கேற்றப்பட்ட 'மிச்சில்' (ஊர்வலம் என்று பெங்காலியில் பொருள்) நாடகம் நிகழ்த்தப்பட்டது. தமிழில் பாதல்தாவின் நாடகங்களை அதிக அளவில் நிகழ்த்தியுள்ள பரீக் ஷா நாடகக் குழு 'தேடுங்கள்' என்ற தலைப்பில் இந்த நாடகத்தை நிகழ்த்தி வருகிறது.

திறந்த வெளியில் நிகழ்த்தப்பட்ட இந்த நாடகம் பாதல்தா அறிமுகப்படுத்திய மூன்றாம் அரங்கு வகைமையைச் சேர்ந்தது. சர்காரின் மூன்றாவது அரங்கு நாடகங்களில் பல்வேறு அடுக்குகள் அல்லது படிமங்கள் இருக்கும். அணு ஆயுத ஆபத்து போன்ற உலகளாவிய பிரச்னைகளிலிருந்து உள்ளூர் பிரச்னைகள் வரை பேசப்படும். இந்த நாடகங்களை மொழியாக்கம் செய்து வேறு மொழிகளில் நிகழ்த்தும் போது, அதற்குத் தக்கபடி உள்ளூர் பிரச்னைகளையும் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என சர்காரே கூறுவார். அதே சமயத்தில் அவற்றை விமர்சிக்கும் உரிமை தமக்கு உண்டு என்றும் அவர் கூறுவார்.

மேலும், கலை மக்களுக்காக எனும் நோக்கில் செயல்பட்ட மூன்றாம் அரங்கு நாடகங்கள் வங்காளத்தின் பட்டி தொட்டி மட்டுமின்றி, நாட்டின் பிற பகுதிகளிலும் நிகழ்த்த ஏதுவாக இருந்தன. சர்காருடைய 62 நாடகங்கள் 1000 முறைக்கும் மேல் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்டி உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளால் நசிந்து வரும் நாடகக் கலையை உயிர்ப்புடன் வைக்க சர்காரின் மூன்றாம் அரங்கு இன்றைய தேவையாக நம் கண் முன்னே இருக்கிறது.

பத்மஸ்ரீ, சங்கீத நாடக அகாதெமி உள்ளிட்ட பல விருதுகள் கௌரவித்த பாதல்தா மறைந்தாலும், அவரது மூன்றாவது அரங்கும், அவரது நாடகங்களும், உயிரோட்டத்துடன் நிலைத்து நிற்கும். பாதல்தாவின் புகழ் ஓங்குக!

**– ஆனந்த் பாசு**

## அற்புதமான தீர்வையும் முன்வைப்பவர்

கூத்து போன்ற நாட்டார் வடிவங்கள் முதல் வகைமையைச் சேர்ந்த நாடகங்கள் என்றால், மேடை நாடகங்களை இரண்டாவது வகைமையாக் கொண்டால் பாதல்தாவின் மூன்றாம் அரங்கு எனும் வகைமை பார்வையாளருக்கும், நடிகருக்குமான இடைவெளியை அகற்றி ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துவதாகும். இதற்கு மேடைகள், ஒலி, ஒளி அமைப்புகள், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, அணிகலங்கள் ஆகிய எதுவும் தேவையில்லை. நடிகர்கள் ஒளி அமைப்பின் வெளிச்சத்தில் இருக்க பார்வையாளர்கள் இருட்டினில் இருக்கத் தேவையில்லை.

நாட்டில் நடக்கும் அநியாயங்களை நெட்டை மரங்களாக நின்று வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்கும் பார்வையாளர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் நாடகத்தை எளிமையாகவும், அதே சமயத்தில் அழுத்தமாகவும் நிகழ்த்த மூன்றாம் அரங்கு நாடகங்கள் வழி வகுத்தது. நடிகர்கள் பார்வையாளர்கள் மத்தியில் இருந்தும், அவர்களின் ஊடே புகுந்து சென்றும் உரையாடுவது போன்ற யதார்த்தமான வசனங்கள் சில சமயங்களில் செவியில் அறைந்தாற் போல இருக்கும். சர்கார் பிரச்சனைகளைப் பற்றி மட்டும் பேசாமல், அற்புதமான தீர்வையும் முன் வைப்பது அவரது நாடகங்களின் சிறப்பு.

# 'பராரி' திரைப்படக் குழுவினருக்குப் பாராட்டு விழா





திருவண்ணாமலையில், 22.12.2024 அன்று மாலை 'பராரி' திரைப்பட இயக்குனர் எழில் பெரியவேடி உள்ளிட்ட படக்குழுவினருக்குப் பாராட்டு விழாவை தென்பெண்ணை இலக்கியச் சமவெளி இயக்கம் நடத்தியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் பிச்சாண்டி, ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, கலை இலக்கியப் பெருமன்ற மாநிலச் செயலாளர் பெ.அன்பு, திரைப்பட ஒளிப்பதிவாளர் முரளி உள்ளிட்டோர் பேசினார்கள்.

திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.



கவிதாபாரதி

# தோழர் நல்லகண்ணு – 100
## மக்களோடு நிற்கும் மகத்தான தலைவர்

**தோழர் நல்லகண்ணு 26.13.2024ல் நூறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்**

அவர் மிகவும் நேர்மையானவர், அவரின் 80வது பிறந்த நாள் விழாவில், நிதி வழங்குவதாக இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி முடிவெடுத்தது, இதற்காக தொண்டர்களிடம் நிதி திரட்டப்பட்டது. தங்கள் அன்புத்தலைவரின்மேல் கொண்ட அபிமானத்தில் கட்சித்தொண்டர்கள் பெருமளவில் நிதியளித்தனர். கட்சி எதிர்பார்த்தற்கு மேலாக ஒரு கோடி ரூபாய் திரண்டது, கட்சி அளித்த அந்த ஒரு கோடியை கட்சிக்கே திருப்பியளித்துவிட்டார்

தமிழ்நாடு அரசு அவரை தகைசால் தமிழராக அறிவித்து, அத்தோடு பத்து லட்சம் ரூபாய் நிதியும் வழங்கியது. நல்லகண்ணு தனது நிதியாக ரூபாய் ஐயாயிரத்தையும் சேர்த்து அந்த பத்துலட்சத்து ஐயா யிரத்தை முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கினார்.

அவர் எந்தநிலையிலும் மக்களோடு மக்களாக நின்றவர்,

2015ல் அவர் குடியிருந்த சி.ஐ.டி. நகர் பகுதியில் வெள்ளம் சூழ்ந்துவிட்டது. அவரை மீட்பதற்காக அரசு வண்டி ஏற்பாடு செய்தது. இந்தப் பகுதி மக்கள் அனைவரையும் மீட்க எற்பாடு செய்தால் மட்டுமே நான் இப்பகுதியைவிட்டு வெளியேறுவேன் என்று அறிவித்தார். அதன்படி அனைவரும் மீட்கப்பட்டபிறகே அவர் அங்கிருந்து வெளியேறினார்

காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பீட்டர் அல்போன்ஸ் ஒரு கூட்டத்தில் சொன்னார்: “தென்தமிழ்நாட்டின் உள்ளொடுங்கிய பாதை. நள்ளிரவைக் கடந்த நேரத்தில் காரில் போய்க்கொண்டிருந்தேன், ஒரு சிறிய பஸ் ஸ்டாப்பில் ஒரு பெரியவர் படுத்திருக்கிறார். அருகில் சிலர் நின்றுகொண்டிருந்தனர், எதாவது உதவி தேவையோ என்று காரை நிறுத்தினேன். பஸ் ஸ்டாப்பில் படுத்திருந்தது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் நல்லகண்ணு. ஒரு கூட்டத்தை முடித்துவிட்டு அதிகாலை பேருந்தில் செல்லவேண்டியவர், தங்கும் விடுதியில் அறையெடுப்பது வீண்செலவு என்று சொல்லிவிட்டு பேருந்து நிறுத்தத்தில் கொசுக்கடியில் தூங்கியிருக்கிறார்..”

இப்படி எளிமையானவராகவும், அமைதியானவராகவும், மிக மென்மையானவராகவும் அறியப்படும் நல்லகண்ணு அவர்களின் போர்க்குணமிக்க நாட்களை நினைவூட்டுவது காலத்தின் கட்டாயமாகும்..

விடுதலைக்கு முன்பே ஆங்கிலேயர் ஆட்சியிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின்மீது கடுமையான நெருக்கடி ஏற்பட்டது. 1947 ஜனவரி 22, தமிழ்நாடு முழுவதும் கம்யூனிஸ்ட் தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டன. பல தலைவர்கள் தலைமறைவாயினர்.


ஆனாலும் கட்சி தொய்வின்றி செயல்பட்டது.

அப்போது விவசாயிகள் சங்கத் தலைவராக இருந்த தோழர் பி.சீனிவாசராவ் கட்சியின் தலைமைக்கு பின்வருமாறு கடிதம் எழுதுகிறார், “இந்தப் பிரதேசத்தில் விவசாயிகள் எழுச்சி இருக்கிறது. ஆனால் பலமான அமைப்பு இல்லை, ஹரிஜன விவசாயிகள் நிறையப்பேர் அமைப்பிற்குள் சேர்ந்திருக்கின்றனர், ஆனால் ஜாதி இந்துக்கள், குறிப்பாக தேவர் சமூகத்தினர் சேரத் தயங்குகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஒன்று சேர்ந்து ஒரே அமைப்புக்குள் வரவிடாமல் சாதிக்கொடுமை தடுக்கிறது.

“இரண்டே இரண்டு இளைஞர்கள் மட்டும் இப்போது வந்திருக்கின்றனர். அதிலும் நல்லகண்ணு என்னும் இளைஞர் பார்வையிலும், பழக்கத்திலும் கள்ளங்கபடமற்ற கிராமத்து இளைஞராகவே இருக்கிறார். சளைக்காமல் கிராமங் கிராமமாக நடந்து வேலைகளைக் கவனிக்கிறார், எதிர்காலத்தில் அவர் சிறந்த தலைவராக வருவார்..”

நாங்குநேரி வட்டாரத்தில் அப்போது பெரும்பானமையான நிலம் நாங்குநேரி மடத்தின்வசம் இருந்தது. மடத்தின் ஜீயர் இட்டதுதான் சட்டம். மடத்திற்குச் சொந்தமான நிலத்தில்தான் குத்தகை விவசாயிகள் உழுது வந்தனர். அங்கிருக்கும் விவசாயிகள், விவசாயத்தொழிலாளர்கள் யாரும் மண்ணைத் தோண்டி அஸ்திவாரமிட்டு வீடுகட்டமுடியாது. வாசக்கால்களையும்கூட நிலத்தில் பதிக்கக்கூடாது.

ஜீயர் ஒடு என்று கட்டளையிட்டால், நிலத்திற்கு மேலிருக்கும் பொருட்களை எடுத்துக்கொண்டு ஓடவேண்டும், இதனால் அந்தப்பகுதியில் வசிப்பவர்களுக்கு ஓடுங்குடிகள் என்றே பெயர்.





மடத்திற்குச் சொந்தமான நிலத்தில் விளைவிக்கும் நெல்லை, உடனே எடைபோட்டு எடுக்க மாட்டார்கள். சிலநாட்கள் நெல்லைக் காயவிட்ட பிறகே எடுப்பார்கள். இதனால் எடை குறைந்து விவசாயிகள் நஷ்டப்படுவார்கள்.

அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து இதிலிருந்தெல்லாம் விடுதலை வாங்கித் தந்தவர் தோழர் நல்லகண்ணு.

இதனால் ஆண்டைகளின் கடுங்கோபத்துக்கு ஆளானார்.

கடும் உணவுப்பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டது. அரசு எதுவும் செய்யாத நிலையில் தோழர்களைத் திரட்டி அரசாங்கத்தின் தானியக்கிடங்கை உடைத்து, அங்கிருந்த அரிசியை ஊர் மக்களுக்கெல்லாம் பிரித்துக்கொடுத்த செயல் நல்லகண்ணுவை அந்தப் பகுதியின் நாயகனாக்கியது.

இந்த வழக்கில் அவர் தேடப்படும் குற்றவாளியாக தலைமறைவாக இருந்தார். தலைமறைவென்றால் எங்கும் ஒடி ஒளிந்து கொள்வதன்று, மக்களின் பாதுகாப்பில் இருந்தபடியே கட்சிப்பணி செய்வதாகும்

ஒருநாள் களக்காடு அருகிலுள்ள காமனேரி என்ற ஊருக்கு கட்சி வேலையாக வந்திருந்த நல்லகண்ணு, பால்வாத்தியார் என்னும் தோழரின் வீட்டு மாடியில் தங்கி யிருந்தார், பால்வாத்தியாரின் 15 வயது மகன் ராஜனும் மாடியில் தங்கியிருந்தார்.

பால்வாத்தியார் ஒரு ஆதிதிராவிடர். அவர் சங்கத் திலிருந்து கொண்டு தங்களை எதிர்ப்பதால் எரிச்சலான ஆண்டைகள் அவர் வீட்டைக் கொளுத்த வந்தனர்.

மாடிக்குச் செல்லும் ஏணியை எடுத்துவிட்டு தீ வைக்கிறார்கள். தீ கொழுந்துவிட்டு எரிகிறது, இறங்குவதற்கோ ஏணியில்லை, என்றாலும் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் சிறுவன் ராஜனை தப்பிக்க வைத்தபிறகே குதித்துத் தப்பினார் நல்லகண்ணு. இது வெகுகாலம் அந்த வட்டாரம் முழுக்க பேசப்படும் சம்பவமாக இருந்தது.

நாடு முழுவதும் கம்யூனிஸ்ட்கள்மீது பல சதி வழக்குகள் புனையப்பட்டன. மதுரைச் சதி வழக்கு, நெல்லைச் சதி வழக்கு என பல வழக்குகள் புனையப்பட்டன. தோழர் நல்லகண்ணு, பாலதண்டாயுதம், மீனாட்சிநாதன், ப.மாணிக்கம், மாயாண்டிபாரதி, வேலுச்சாமி உள்ளிட்ட 109 பேர்மீது நெல்லைச் சதி வழக்கு.

மீளவிட்டானில் சரக்கு ரயில் கவிழ்ப்பு, போலீஸ் ஆள்காட்டி ஒருவர் கொலை, பதுக்கல் நெல்லைக் கடத்தி மக்களுக்கு விநியோகித்தது, விவசாயிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தது என்பன போன்ற பல குற்றச்சாட்டுகள் அடுக்கப்பட்டன.

1949 டிசம்பர் 20, நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டம் புலியூர்க்குறிச்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள ஒரு தோழரின் வீட்டில் மறைந்திருந்த தோழர் நல்லகண்ணுவை, கைத்துப்பாக்கியோடு வந்த ராமசாமி என்னும் போலீஸ்காரர் உட்பட நான்கு போலீசார் கைது செய்தனர், அப்போது அங்கு ஆறு வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டன. எனினும் நல்லகண்ணு அந்தக் குண்டுகளைப் பயன்படுத்த முயற்சிக்கவில்லை

களக்காடு சாலையும், பனக்குடி சாலையும் சந்திக்கும் டோனாவூர் விளக்கு என்னும் முச்சந்தியில் வைத்து கிருஷ்ணமூர்த்தி என்னும் ஆய்வாளர் விசாரணையைத் தொடங்கினார், கம்யூனிஸ்ட் தலைவர்கள் பாலதண்டாயுதத்தையும், மீனாட்சிநாதனையும் காட்டிக்கொடுக்கச் சொல்லிச் சித்ரவதை செய்தான் அந்த அதிகாரி. நல்லகண்ணுவின் முறுக்கு மீசையை சிகரெட்டை வைத்து ஒவ்வொரு முடியாகப் பொசுக்கினான். மீசையெல்லாம் கருகிப் புண்ணானபிறகும் நல்லகண்ணு யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை

நாகராஜ அய்யர் நீதிபதியாக இருந்த தனிநீதிமன்றத்தில் விசாரணை நடந்து 42 பேர் குற்றமற்றவர்களாக விடுதலை செய்யப்பட்டனர். மீதியிருந்த 67 பேர் மீது செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.வி.சுப்பிரமணிய நாடார் முன்னிலையில் விசாரணை தொடர்ந்தது

1952 ஆகஸ்ட் 11 ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது பல்வேறு பிரிவுகளில் அவரவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

தோழர் நல்லகண்ணுவுக்கு அரசுக்கு எதிராக சதி செய்ததாக ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது, அத்துடன் மத்திய வெடி மருந்து சட்டப்படி ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது

ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனைக்குப் பிறகே அவர் விடுதலையானார்.

அதன்பிறகும் அவர் முடங்கிவிடவில்லை. தொடர்ந்து மக்களுக்கான போராட்டக் களத்தைவிட்டு விலகவில்லை.

1968 நெல்லை மாவட்டம் நொச்சிக்குளத்தில் பிரின்ஸ் என்னும் இன்ஸ்பெக்டர் தலைமையில் விவசாயிகள் சங்கத்தினருக்கு எதிராக பாளையங்கோட்டை போலீசார் அத்துமீறல்களில் ஈடுபட்டனர். சீதாராமன் என்னும் விவசாயி சுட்டுக்கொல்லப்பட்டார். கந்தசாமி என்னும் விவசாயிக்கு இடதுகரம் வெட்டப்பட்டது.

ஈஸ்வரகுடும்பர் என்னும் விவசாயி துப்பாக்கிமுனைக் கத்தியால் குத்தப்பட்டார். ஒரு விவசாயப் பெண்மணியின் காது அறுக்கப்பட்டது. மற்றும் பல பெண்கள் அவமானத்துக்கு உள்ளாயினர்.. ஆயினும் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

தோழர் நல்லகண்ணு, எஸ்.ஏ.முருகானந்தம் ஆகிய இருவரும் சாகும்வரை உண்ணாவிரதம் அறிவித்தனர்,

8 நாள் உண்ணாவிரதத்துக்குப் பிறகே அப்போதைய உணவு அமைச்சர் மதியழகன் போராட்டக்களத்துக்கு வந்து நடவடிக்கை எடுத்ததால் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

அம்பாசமுத்திரம் பகுதியில் உள்ள கடனாநதி அணையும், நல்லகண்ணுவின் பத்துநாள் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப்பிறகே செயல்வடிவம் பெற்றது,

இன்று சிறைக்கைதிகள் உறவினர்களைச் சந்திப்பது, அஞ்சலட்டை பெறுவது, பரோலில் வெளிவருவது போன்ற அடிப்படை உரிமைகளும் கூட, நல்லகண்ணுவும், அவரோடிருந்த தோழர்களும் போராடிப் பெற்றுத் தந்தவையே!

ஸ்ரீவைகுண்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள்மீதான உழைப்புச்சுரண்டல், ஆதிக்கச்சாதியினர் அவர்களின் பெண்கள் மீது நடத்திய அடிமைத்தனத்திற்கெதிராக கோட்டைச்சுவர் இடிப்புப் போராட்டம், தாமிரபரணியில் மணற்கொள்ளைக்கு எதிரான போராட்டம் என அவர் போராடி வென்ற கோரிக்கைகள் ஏராளம்,

இன்றும் அரசியல், பண்பாட்டுப் போராட்டங்களில் போய் நிற்கும் மக்கள் போராளி தோழர் நல்லகண்ணு. அதனால்தான் தன் வாழ்நாள் முழுவதையும் மக்களுக்கான போராட்டங்களுக்காகவே ஒப்படைத்த நல்லகண்ணுவை தேர்தல்களத்தில் மக்கள் தோற்கடித்தார்கள். அதற்காக ஒருபோதும் அவர் கவலைப்பட்டதில்லை.

ஒரு கம்யூனிஸ்ட் மக்களிடம் நன்றியையோ, பிரதிபலனையோ எதிர்பார்த்துப் போராடுவதில்லை, மக்களை ஒருபோதும் குறை சொல்லக்கூடாது என்பது தோழர் நல்லகண்ணு எப்போதும் தொண்டர்களுக்குச் சொல்லித்தரும் பாடம்.

நூறுவயதைத் தொட்டிருக்கும் நல்லகண்ணு வாழும் வரலாறு, வணங்குவோம்

நன்றி: குமுதம்

# ஞானமிக்க வழக்கறிஞர் கே.டி.கே



ம.இராதாகிருஷ்ணன்

**கம்யூனிஸ்ட் இயக்கம் கண்டெடுத்த ஆகச்சிறந்த மாமனிதர்களில் தோழர் கேடிகேயும் ஒருவர். பெரும் கோடீஸ்வரர் வீட்டில் பிறந்தவர். சிறந்த தர்க்க ஞானமிக்க வழக்கறிஞர்.**

சிறையில் உண்ணாவிரதம் இருந்த கேடிகே தங்கமணி மீது கைதிகள் விதியை மீறியதாக வழக்கு.

அதனை எதிர்த்து கைதி கேடிகே தங்கமணி தொடர்ந்த வழக்கு.


சென்னை மாகாண பொது ஒழுங்கை பராமரிக்கும் சட்டம் 1947 இன் படி தோழர் கேடிகே தங்கமணி 1948 இல் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த காலத்தில் சிறையில் கைதிகளின் உரிமைகளுக்காகவும் மக்கள் கோரிக்கைகளுக்காகவும் சிறைகுள்ளே பல்வேறு போராட்டங்களில் கம்யூனிஸ்டுகள் ஈடுபடுவது இயல்பான ஒன்று.

26 நாட்கள் அதாவது 1.11.1949 முதல் 26.11.1949 வரை சிறைக்கு உள்ளே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார் கேடிகே. சிறைக்குள் கைதிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சிறை கைதிகள் விதி இருந்தது. 1947 ஆம் வருடத்திய கைதிகள் விதி பிரிவு 17(2) ‘‘எந்த ஒரு பாதுகாப்புக் கைதியும் சிறையில் கைதிகள் விதியை மீறினால், அடிக்கடி அக்குற்றத்தில் ஈடுபட்டால், சிறைக் கண்காணிப்பாளர் உரிய தண்டனை வழங்க இயலவில்லை என்று கருதினால் அரசாங்கத்தின் ஒப்புதலுடன் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அல்லது பிரசிடென்சி மாஜிஸ்திரேட் (மாவட்ட ஆட்சித் தலைவர்) நீதிமன்றத்தில் புகாரளித்து, அதன் பேரில் நீதிமன்றம் விசாரித்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு ஆண்டுக்கு மிகாமல் சிறை தண்டனை அளிக்கலாம்.

சிறைகைதிகள் விதி தொடர்பாக 4934 எண் கொண்ட 27.6.1949 தேதியிட்ட ஒரு குறிப்பாணையை அரசாங்கம் சிறைத்துறை தலைவருக்கு அனுப்பி வைத்தது. அவர் அக் குறிப்பாணையை சிறை கண்காணிப்பாளர் களுக்கு அனுப்பினார்.

அக்குறிப்பாணையில் காவலர்கள் எச்சரிக்கையை மீறி கைதிகள் உண்ணாவிரதம் இருந்தால், ஒரு நாள் உண்ணாவிரதத்திற்கு ஒரு மாதத்திற்கு உரிய கைதிகள் சலுகைகளைத் திரும்பப் பெற வேண்டும். 15 நாளும் அதற்கு மேலும் உண்ணாவிரதம் இருந்தால், வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் மீது வழக்கு தொடர வேண்டும். அத்தகைய வழக்கின் விளைவுகளை அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

இந்த குறிப்பாணையை அடிப்படையாகக் கொண்டு வேலூர் சிறைக் கண்காணிப்பாளர் வட ஆற்காடு மாவட்ட மாஜிஸ்திரேட் முன்பு கேடிகே மீது வழக்குகளைத் தொடர்ந்தார். மாவட்ட மாஜிஸ்திரேட் வழக்குகளை விசாரித்து உத்தரவுகளை பிறப்பித்தார்.



இதனை எதிர்த்து கேடிகே அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி பாதுகாப்பு கைதிகளுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் அது குறித்து முழுமையாக பரிசீலிக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வழக்கு தொடர வேண்டிய அவசியம் இருக்கிறது என்று அரசாங்கம் கருதினால் வழக்கு தொடர சிறை கண்காணிப்பாளருக்கு ஒப்புதல் வழங்கலாம். அதன் பின்னர் சிறை கண்காணிப்பாளர் வழக்கு தொடர வேண்டும். இவ்வாறு தான் சிறை கைதிகள் விதி 17(2) குறிப்பிடுகிறது. ஆனால் 27.6.1949 ஆம் தேதிய குறிப்பாணையில் சிறை கண்காணிப்பாளர் வழக்கு தொடர்ந்து, விளைவுகளை அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சட்டத்தின் நோக்கங்களுக்கு எதிரானது. எனவே அரசாங்கத்தின் அனுமதி பெறாமல் குறிப்பாணை அடிப்படையில் என் மீது தொடரப்பட்ட வழக்குகளையும், அதன் மீது வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த உத்தரவு களையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரினார்.

M. P. No 52 of 1950 C. C. No. 32 of 1950 வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் ‘‘வழக்கு தொடர்ந்த முறை சரியானதல்ல. அதனால் வழக்கை விசாரிக்க மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரம் இல்லை. வட ஆற்காடு மாவட்ட மாஜிஸ்திரேட் முன்புள்ள கேடிகே தங்கமணி மீதான வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் அரசாங்கத்தின் முறையான ஒப்புதலுக்கு விண்ணப்பிப்பதை தடுப்பதாகவும், ஒப்புதலுக்கு பிறகு நடவடிக்கை எடுப்பதை தடுப்பதாகவும் கருதக் கூடாது என்று உத்தரவிட்டது.

# பரோல் கேட்ட தோழர் கே.டி.கே. தங்கமணி

தோழர் கே.டி.கே. தங்கமணி, சேலம் சிறையிலிருந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தார். அந்த மனுவில் குறிப்பிட்ட விவரங்களைப் பாருங்கள்....

எனது பெயர் கே.டி.கே தங்கமணி.


நான் 1940ஆம் ஆண்டு பாரிஸ்டர் பட்டம் பெற்று அதே ஆண்டில் வழக்கறிஞராகப் பதிவு செய்தேன். 1957 முதல் 1962ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் செயலாளராகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் உறுப்பினராகவும் இருக்கிறேன்.

கடந்த 20.11.1962 அன்று திடீரென்று இரவில் மதுரை காவல்துறையினர் நள்ளிரவில் என்னை எழுப்பிக் கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 352 (1) இன் படி 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதி, இந்தியக் குடியரசுத் தலைவர் அவசர நிலைப் பிரகடனம் செய்தார். அதே தேதியில் 1962 இன் இந்தியப் பாதுகாப்பு ஆணை மிகஷி அறிவிக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு நவம்பர் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில், இந்தியப் பாதுகாப்பு விதிகள் உருவாக்கப்பட்டது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டமானது, இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்புக்கு எதிராகச் செயல்பட்டால் அல்லது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று சிறையில் வைப்பது நாட்டின் நலன்களுக்கு அவசியமானது என்று அரசு கருதினால் சிறையில் அடைக்கலாம் என்கிறது. இச்சட்டத்தின் படி சேலம் மத்திய சிறையில் பாதுகாப்புக் கைதியாக அடைக்கப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் காமராஜர் அவர்கள் 1962 நவம்பர் 19, 20 தேதிகளில் மதுரையில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார். இரண்டு நாட்களும் முதலமைச்சர் கலந்து கொண்ட நிகழ்வுகள் அனைத்திலும் நான் உடனிருந்தேன். 20 ஆம் தேதி மாலை 5 மணிக்கு மதுரையில் இருந்து முதலமைச்சர் புறப்பட்டுச் சென்றார். முதல்வர் கிளம்பிய பிறகு அதே நவம்பர் 20 ஆம் தேதி, இரவில் கைது செய்யப்பட்டேன்.



மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற நிகழ்வுகளில் முக்கியமானது சீனா, இந்தியாவின் மீது தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிராக மக்களைத் திரட்டுவது, குறிப்பாக யுத்த நிதி வசூலிப்பது ஆகும். இந்த வகையில் முதல்வர் எடுத்த அனைத்து முயற்சிகளிலும் நான் உறுதுணையாக இருந்தேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை தோழர்கள் தந்த கணிசமான தொகை ரூ.35,000 த்தை 20.11.1962 அன்று பாதுகாப்பு நிதிக்காக மதுரைக்கு வருகை தந்த முதல்வரிடம் ஒப்படைத்தேன். மேலும் மாநில அரசு எடுக்கும் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அரசுடன் கரம் கோத்துச் செயல்பட மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறேன். இந்த நோக்கத்திற்காக மதுரை மக்களிடமும், கட்சி அணிகளிடமும் பணிபுரிந்து வருகிறேன்.

சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் பெரும் பணியில் இந்தியா ஈடுபட்டுள்ள காலகட்டத்தில், நானும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களும், என் ஆதரவாளர்களும் அரசின் போர் முயற்சிகளுக்கு முழு உறுதுணையாக இருக்கின்றோம். 3111962 அன்று தில்லியில் மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு. ஜி.எல். நந்தா அவர்கள் நடத்திய அரசு, முதலாளிகள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் முத்தரப்புக் கூட்டத்தில் பங்கேற்றேன். மதராஸ் அரசு இதேபோன்று நடத்திய ஒரு முத்தரப்பு மாநாட்டில், கலந்து கொண்டு அரசுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினேன்.

சேலம் மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எனக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பாக ஒரு சிறிய பூட்டிய தனி அறையில் சிறைக் கைதியாகத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறேன். இரவில் 8 மணியில் இருந்து காலை 6 மணி வரை தினமும் எனது அறை பூட்டப்படுகிறது. தினசரி கைதிகளுக்கு வழங்கும் உணவு கூட சரியாக வழங்கப்படவில்லை. நேர்காணல்களில் உணவு, ரொக்கம் வழங்கும் உதவி போன்றவையும் அனுமதிக்கப்படவில்லை. எனது கடிதங்கள் எனக்கு வரும் கடிதங்கள் விஷயங்களில் கடுமையான மற்றும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுகின்றன. இதுவரை பொதுப் பாதுகாப்பு மற்றும் இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசுடன் ஒத்துழைப்புக் கொடுத்து எனக்கு இத்தகைய நியாயமற்ற கட்டுப்பாடுகள் முற்றிலும் தேவையற்றவை. இந்த நடவடிக்கைகள் எனக்குக் கவலை அளிக்கின்றன. தேவையற்ற, நியாயமற்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும். மேலும் நான் மெட்ராஸ் கப்பல்துறை தொழிலாளர் வாரியத்தில் இருக்கிறேன். அதன் கூட்டங்களில் கலந்து கொள்ள என்னை அனுமதிக்க வேண்டும்.

இரவு தனிமை சிறையில் பூட்டுவதைத் தடுக்க வேண்டும். ரேடியோ வைத்திருப்பதற்கான உரிமம் வழங்க வேண்டும். வெளியில் செல்லும் மற்றும் உள்ளே வரும் கடிதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனுமதிக்க வேண்டும். நேர்காணல் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். மெட்ராஸ் டாக் லேபர் போர்டு கூட்டங்களில் பங்கேற்க பரோல் வழங்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு பிரமாணப் பத்திரத்தில் கே.டி.கே குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்புக்கு: 85248 67888

# தொட்டிலை ஆட்டி, தொடையைக் கிள்ளும் மோகன் பகவத்



இரா.முத்தரசன்

**மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதில் வல்லவர்கள் ஆர்எஸ்எஸ்காரர்கள்.**

உலக மோசடிக்குப் பெயர் போன பிரதமர் நரேந்திர மோடியின் நம்பிக்கைக்குரிய உற்ற நண்பன் அதானி என்பதனை நம் நாடு மட்டுமல்ல, உலகமே நன்கறியும்.

பிரதமரின் வெளிநாட்டு உல்லாசப் பயணத்தில் உடன் பங்கேற்பவர் அதானி. பிரதமர் செல்கின்ற நாடுகள் அனைத்திற்கும் அதானியும் உடன் செல்வார். அந்நாடுகளின் அதிபர்களிடத்தில் அறிமுகம் பெறுவார். அங்கே தொழில் தொடங்க அனைத்து உதவிகளையம் மோடி செய்து வைப்பார்.

இப்படிப்பட்ட நபரின் பெரும் ஊழல், அமெரிக்காவின் நீதிமன்றத்தால் அம்பலப்படுத்தப்பட்டது மட்டுமின்றி, அமெரிக்கா நீதிமன்றம் அதானிக்கு பிடிவாரன்ட் பிறப்பித்துள்ளது.

தனது சூரிய ஒளி மின் திட்டத்தைச் செயல்படுத்திட பல மாநில அதிகாரிகளுக்கு ரூபாய் 2,100 கோடி வரை லஞ்சப் பணமாக அதானி வாரி வழங்கியது அம்பலமானது.

நாடு இதனை விவாதப் பொருளாக மாற்றியது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டம் தொடங்கியது. தொடங்கிய நாள் முதல், இந்தியா கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதானி ஊழல் குறித்து விவாதிக்க வேண்டும் எனக் கோரினர்.

ஆனால் ஒன்றிய அரசு இதற்குச் செவிசாய்க்கவில்லை. ஒவ்வொரு நாளும் பிரச்சனைகள் எழுப்பப்பட்ட நிலையில், நாள்தோறும் நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டு வந்தன.

அதானி என்கிற நபர் ஊழல் புரிந்துள்ளார். அத்தகைய ஊழல் பாஜக ஆட்சி நடத்தும் மாநிலங்களில் நடைபெறவில்லை. மாறாக, இந்தியா கூட்டணியைச் சேர்ந்த கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களில்தான் நடந்துள்ளது என்று பாஜக தலைவர்களும், ஒன்றிய அமைச்சர்களும், நாள்தோறும் தொண்டை கிழிய கத்தி வருகிறார்கள்.

அவர்கள் கூறுகிறபடி எந்த மாநிலத்தில் நடைபெற்று இருந்தாலும், அவை ஊழல் தானே! அத்தகைய ஊழலைப் புரிந்தவர் சாட்சாத் அதானிதானே! அப்படிப்பட்ட அயோக்கிய சிகாமணியின் வீட்டில், நிறுவனங்களில் வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, லஞ்ச ஒழிப்புத்துறை என அனைத்துத் துறைகளும் புகுந்து சோதனைகள் மேற்கொள்ளாதது ஏன்?

வெளிப்படைத்தன்மையோடு எங்கள் அரசு செயல்படுகிறது என்று மார் தட்டும் மோடி ஆட்சியின், வெளிப்படைத்தன்மை என்னவாயிற்று?

மோடியின் ஆட்சி நேர்மையான ஆட்சி எனில், வெளிப்படைத்தன்மையுடைய ஆட்சி எனில், அதானியை ஏன் கைது செய்யவில்லை?

சோதனைகளும், கைதும் நடைபெற்று இருக்குமேயானால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் விவாதிக்க வேண்டும் என்று குரல் எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

நீதிமன்ற முடிவுகளுக்காகக் காத்திருக்கலாம். அத்தகைய நிலையை ஏன் மோடி அரசு மேற்கொள்ளவில்லை?

மோடி அரசு நம்பகத்தன்மை கேள்விக்குறி ஆகிவிட்டது. நாட்டு மக்களுக்கு நம்பிக்கைக்குரிய அரசாகச் செயல்படுவதற்கு மாறாக, அதானியின் நம்பிக்கைக்குரிய நல்ல நண்பனாக மோடி அரசு செயல்பட்டுக் கொண்டிருப்பதால், அதானியைக் காப்பாற்றுவதில் தனது நேரம் முழுவதையும் மோடி அரசு செலவழிப்பதால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் விவாதம் கோருகின்றன.

விவாதிக்க முன்வந்தால், விவாதத்திற்கு அனுமதி அளித்தால் அம்பலப்படுவது அதானி மட்டுமல்ல, அவரது உயிருக்கு உயிரான நண்பர் மோடியும் அம்பலப்படுவார்.

அத்தகைய நெருக்கடியைத் தவிர்க்க, விவாதத்திற்கு அனுமதி அளிக்க அரசு மறுத்து வருவதுடன் அதானி பிரச்சினையில் இருந்து தப்பிக்க முடியாமல், அவமானப்பட்டு நாட்டு மக்களின் முன்னால் தலை கவிழ்ந்து நிற்கும் மோடி அரசு, பிரச்சனையைத் திசை திருப்ப எடுத்த முடிவுதான் அமித் ஷாவின் பேச்சு.

அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்கின்றோம். அதனை உருவாக்கிய சிற்பி, சட்டமேதை அம்பேத்கரை மதித்துப் போற்றி வணங்குகிறோம் எனப் பசுத்தோல் போர்த்திய புலி போன்று வேடம் அணிந்து வந்த கபட வேடதாரிகளின் முகம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பார்கள். ஆர்எஸ்எஸ், பாஜக முகம் என்ன என்பது வெளிப்பட்டு விட்டது.

அம்பேத்கர் குறித்து, அவர் அளித்திட்ட அரசமைப்புக் கொடை குறித்து அவநம்பிக்கையோடு மட்டுமல்ல, அவர்களின் அரசியல் அமைப்புச் சட்டம் என்பது அம்பேத்கர் உருவாக்கிய சட்டமல்ல, மாறாக அருவருக்கத்தக்க அமைப்பான ஆர்எஸ்எஸ் அமைப்பின் மனு தர்மமே அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள அரசமைப்புச் சட்டமாகும்.



ஆதலால்தான் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் வித்தையை அமித் ஷா நாடாளுமன்றத்தில் மேற்கொண்டார்.

அதானியைக் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் அம்பேத்கரை அவமானப்படுத்திட வேண்டும் என்ற இரு நோக்கங்களுடன் அதானி பிரச்சனையைத் திசை திருப்பக் கூடிய முறையில் அமித் ஷாவின் உரை அமைந்தது.

“அம்பேத்கர் பெயரைக் குறிப்பிடுவதை பேஷன் ஆகக் கொண்டுள்ளனர். அம்பேத்கர், அம்பேத்கர் எனத் திரும்பத் திரும்பக் கூறுவதை விட்டு விட்டு, கடவுளைப் பல முறை குறிப்பிட்டிருந்தால் அவர்களுக்கு மோட்சமாவது கிடைக்கும்“ இதுவே அமித் ஷாவின் உரையாகும்.

இப்போது மோடியின் வகையறாக்கள் விரும்பிய படியே அதானி பிரச்சனையைக் கைவிட்டு, எதிர்க்கட்சிகள் அமித் ஷா, அம்பேத்கரை அவமானப்படுத்தியதைக் கையில் எடுத்துப் போராட்டத் தொடங்கி விட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, நாடே கொந்தளித்தது. அமித் ஷாவை நீக்கம் செய்திட வேண்டும் என்கிற முழக்கம் நாடெங்கும் எதிரொலித்தது.

ஆப்பை அசைத்துத் தன் வாலை மர இடுக்கில் மாட்டி அவதிப்பட்ட குரங்கு போல், அவதிப்பட்ட மோடியின் கூட்டம் இதிலிருந்து தப்பிக்க என்ன செய்வதென “ரூம்“ போட்டு விவாதித்து நேரடியாக வன்முறையில் இறங்கியது.

நாடாளுமன்றத்திற்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை, மன்றத்தின் நுழைவு வாயிலில் வழிமறித்துத் தாக்கினார்கள். தள்ளிவிட்டார்கள், தள்ளுமுள்ளுகளை மேற்கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர் கார்கேவைத் தள்ளிவிட்டதில், கீழே விழுந்து ஏற்கெனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்ட முழங்கால் மீண்டும் அடிபட்டது.


ஆனால் பாஜகவினரே இவை அனைத்தையும் மூடி மறைத்து, தங்களது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகவும், மண்டை உடைந்ததாகவும், ஒருவரின் உயிர் ஊசலாடுவதாகவும் கதை கட்டியது மட்டுமல்ல, மிக வசதியான இடமான மருத்துவமனைக்குச் சென்று உள்நோயாளியாகப் பாதுகாப்பாகப் படுத்துக்கொண்டார்கள். ராகுல் காந்தி மீது காவல் நிலையத்தில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நடக்க வேண்டிய நாடாளுமன்றக் கூட்டத்தையும் ஒத்திவைத்து, அதானி, அமித் ஷாவையும் காப்பாற்றிக் கொண்டார்கள்.

தங்களின் சர்வாதிகார பாசிச நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, அவர்கள் அடுத்தடுத்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்று, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்கிற மிகப் படுமோசமான நடவடிக்கையாகும்.

வாக்குப் பதிவு இயந்திரத்தைப் பொதுமக்கள், சோதித்துப் பார்க்க அனுமதி இல்லை என்று அறிவித்து விட்டார்கள்.

காலம், காலமாக இஸ்லாமியப் பெருமக்கள் தொழுகை மேற்கொண்டு வந்த பாபர் மசூதியை, 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஆறாம் நாள் பகிரங்கமாக இடித்துத் தரைமட்டம் ஆக்கினார்கள்.



இதன் மீது நடந்த வழக்கில், பாபர் மசூதி இருந்த இடம் அரசுக்குச் சொந்தமான இடம் என்று தீர்ப்பளித்தது. பாபர் மசூதி இடித்தது தவறு என்றும் தீர்ப்பளித்தது. ஆனால் மசூதி இருந்த இடத்தில் ராமருக்குக் கோயில் கட்ட அனுமதி வழங்கியது. இடித்தது தவறு என்ற உச்சநீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது. நீதிமன்றத்தின் மீது பொதுமக்களுக்கு இருந்த நம்பகத்தன்மை....?

ராமர் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்து அதுவே, தங்கள் அரசியலின் மகத்தான சாதனை என்று தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள்.

ஆனால் ராமர் கோயில் உள்ள அயோத்தி உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியில், பாஜகவை மக்கள் தோற்கடித்தனர். அது மட்டுமல்ல, பொதுத் தொகுதியான அந்தத் தொகுதியில், ஒரு தலித் வேட்பாளர் வெற்றி பெற்று பாஜகவின் முகத்தில் கறி பூசப்பட்டது.

பாபர் மசூதியை இடித்து, அதன் மூலம் மதக் கலவரங்களை உருவாக்கி, தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட, அருவருக்கத் தக்கக் கும்பல். ருசி கண்ட பூனையைப் போன்று, மசூதி இருக்கும் இடமெல்லாம் இந்துக்களின் கோவில் இருந்ததாகக் கூறி, கலவரங்களை உருவாக்கிடவும், தங்களின் மதவெறிச் சக்திகளைப் பலப்படுத்திக் கொள்ளவும் இடையறாது முயன்று வருகிறார்கள்.

மதுராவில் இருக்கும் மசூதி தங்களுக்குச் சொந்தமெனக் கூறுகின்றார்கள். இதுபோன்று நாட்டின் இன்ன பிற மசூதிகளையும் சொந்தம் கொண்டாடுகிறார்கள். நீதிமன்றங்களை நாடுவது மட்டுமின்றி, வன்முறைக் கிளர்ச்சிகளையும் மேற்கொள்கிறார்கள்.

சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்களான இந்துக்களுக்கு அடங்கி, ஒடுங்கி அவர்களது ஆணைகளுக்கு உட்பட்டு, அடங்கி நடக்க வேண்டும். இல்லையெனில், நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனப் பகிரங்கரமாக எச்சரிக்கை விடுகின்றார்கள்.

இந்தியா என்பது ஓர் இந்து நாடு எனப் பிரகடனப்படுத்துகிறார்கள்.

இவை அனைத்திற்கும் மூல காரணம் யார்? ஆர்எஸ்எஸ் என்கின்ற அமைப்பு என்பது அனைவரும் அறிந்ததே!

ஆனால் அவ்வமைப்பின் தலைவர் பிரகாஸ்பதி மோகன் பகவத் என்பவர் எதுவுமே தெரியாத மனிதரைப் போன்றும், மிகவும் நேர்மையானவரைப் போன்றும், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்று, தன்னை மிக உயர்ந்த யோக்கியனாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில், புனேயில் ஒரு நிகழ்ச்சியில் பேசி உள்ளார்.

அவர் கூறுகின்றார் “அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில், ராமர் கோவில் கட்டியதை அடுத்து, அதேபோல் மற்ற பகுதிகளிலும் மசூதிகள், கோயில்கள் இடையே மோதலைக் கிளப்பி, இந்துத்துவா தலைவர்களாக உருவெடுக்கச் சிலர் எண்ணுவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று பேசி உள்ளார்.

மேலும் “நாம் சமூக நல்லிணக்கத்தோடு பல ஆண்டுக்காலமாக வாழ்ந்து வருகிறோம். இதை உலக அளவில் கொண்டு சேர்க்க வேண்டும் எனில் அதற்கான நாம் முன்மாதிரியாக வாழ வேண்டும்.

அயோத்தியில் நிகழ் ஆண்டின் தொடக்கத்தில், ராமர் கோவில்கட்டியபிறகு, அதேபோல்நாட்டின் பிற பகுதிகளில் மசூதிகள் அமைந்துள்ள இடத்தில், கோயில்கள் இருந்ததாகக் கூறி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். இதுபோன்ற விவகாரங்களைச் சிறப்பு இந்துத்துவா தலைவர்களாக மாற சிலர் முயற்சிக்கின்றனர்.

ராமர் கோயில் என்பது இந்துச் சமூகத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கையாக இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல், ஒவ்வொரு நாளும் புதிது, புதிதான விவகாரங்களைக் கிளப்பியதை ஏற்க முடியாது'' என்று பேசி உள்ளதாக தினமணி நாளேடு 21122024 செய்தி வெளியிட்டுள்ளது.

மோகன் பகவத் அவர்களே! ஏன் இந்த நடிப்பு, சமூக நல்லிணக்கத்தை விரும்புகிறீர்களா? பாபர் மசூதி இடித்த அயோக்கிய சிகாமனிகள் யாரடா எனக் கேட்க மாட்டார்களா?

கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்தை ஒட்டி ஆயிரக்கணக்கான இஸ்லாமியப் பெருமக்களைக் கொன்று குவித்த கொடியவர்கள் யாரடா என மக்கள் கேட்க மாட்டார்கள் என்ற துணிச்சலா?

கோவிந்த் பன்சாரே, தபோல்கர், கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகிய நால்வரையும் கொன்று குவித்த கொடியவர்கள் யாரடா என எவரும் கேள்வி எழுப்ப மாட்டார்கள் என்கின்ற துணிச்சலா?

கொலையாளிகளை மாலை போட்டு, பொன்னாடை போர்த்தி வரவேற்றவன் எவனடா என்று இதை யாரும் கேட்க மாட்டார்கள் என்ற இறுமாப்பா?

தொட்டிலையும் ஆட்டி, தொடையும் கிள்ளும் வஞ்சகக் கூட்டமே! நாட்களை எண்ணிக்கொள்!

24 ஆம் பக்கத் தொடர்ச்சி

நடத்தியது.

1920 இல் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றும் முன்பே ஏஐடியூசி தோன்றி விட்டது. உலகம் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் வெடித்தன. இந்தியாவிலும் அது பிரதிபலித்தது. ஏஐடியூசி உருவாகும் பொழுது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றவில்லை என்று சொன்னாலும் அதற்கான கூறுகள் வெளிப்பட தொடங்கி யிருந்தது.

பூரண சுதந்திரம் என்பதும், சமதர்மம் சோசலிசம் என்பதும் ஏஐடியூசியால் 1921 ஆம் ஆண்டு இந்தியாவில் முன்மொழியப்பட்டது. ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளி வர்க்கம் முன்னணியில் நின்றது.

தொழிலாளி வர்க்கம் என்றைக்கும் தங்களுக்கு அரசியல் இல்லை என்று சொன்னது இல்லை. தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டார்கள். இந்திய விடுதலைக்கு பாடுபட்டதால். ஏஐடியூசியின் முதல் தலைவர் லாலா லஜபதி ராய். 1926 ஆம் ஆண்டு சைமன் கமிஷன் வரும்பொழுது அதனை எதிர்த்து போராடினார். காவல்துறையால் கடுமையாக தாக்கப்பட்டார்; அடித்துக் கொல்லப்பட்டார். ஜவகர்லால் நேரு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், வி.வி. கிரி போன்ற மகத்தான தலைவர்கள் ஏஐடியூசிக்கு தலைமை பொறுப்பேற்று இருக்கின்றார்கள். தொழிலாளி வர்க்கத்திடம் இருந்து இவர்கள் பாடம் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்திய நாட்டின் அரசியலமைப்பு எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை இந்திய தொழிலாளி வர்க்கம் தான் சொன்னது.. வழிகாட்டியது. எப்பொழுதும் நாம் அரசியல் இல்லை என்று சொன்னதில்லை.

நமது அரசியல் தொழிலாளி வர்க்கத்தினுடைய நலன் காக்கும் அரசியல். மனிதர்களை மனிதர்கள் சமமாக பாவிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அரசியல். சுரண்டல் கூடாது என்று சொல்லுகின்ற அரசியல். பணியிடங்களில் மட்டுமல்ல எங்குமே பாலியல் கொடுமை கூடாது என்று சொல்லுகின்ற அரசியல். இளம் சிறார்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று சொல்லுகின்ற அரசியல். இந்திய விடுதலைக்கு மட்டுமல்ல, விடுதலைக்குப் பின்பும் பொதுத்துறைகள் உருவாக தொழிலாளர்களின் சட்ட உரிமைகளைப் பெற போராடுகின்ற அரசியல் தான் நமது அரசியல்.

மோடியரசு தொழிலாளர்களுக்கு எதிரானது மட்டுமல்ல; மாணவர்களுக்கு; இளைஞர்களுக்கு; பெண்களுக்கு, விவசாயிகளுக்கு எல்லாம் எதிரானது. அவர்களுடைய கொள்கைகள் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரானது. பாலின பாகுபாடுகள் மிகவும் மோசமாக பெருகி உள்ளது.

செங்கொடியை கண்டால் எதிரியாக பாவிக்கின்றார்கள். மின்சாரம் உட்பட பொதுத்துறைகள் அனைத்தையும் தனியாரிடம் தாரை வார்ப்பதற்கு துடிக்கின்றார்கள். இதுதான் இவர்களுடைய தொழில் கொள்கையா ? உழைக்கும் மக்கள் குடும்பத்தின் துயரங்கள் எதுவும் தெரியாதவர்கள் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்திய நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற துடிக்கின்றார்கள். மனு ஸ்ருதியை அரசியல் அமைப்பாக மாற்ற துடிக்கின்றார்கள்.

தேசத்தின் செல்வங்களை உற்பத்தி செய்தவர்கள் கார்ப்பரேட்டுகள் அதானி, அம்பானி என்று சொல்கிறார்கள். உண்மை யிலேயே தேசத்தின் சொத்துக்களை பெருக்கியவர்கள் யார்? தொழிலாளி வர்க்கம் தான்; உழைக்கும் மக்கள் தான். விவசாயி தொழிலாளி என்று இரு வர்க்கங்கள் இல்லாமல் நாட்டின் செல்வதாரம் பெருகுமா..

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கின்றோம். அதற்கு முன்னோடியாக தொழிற்சங்க ஒற்றுமை அவசியம். ஏஐடியூசி நூற்றாண்டு விழாவின் போது அனைத்து தொழிற்சங்கத்தினரும் வந்தார்கள் .அனைவருமே தொழிலாளி வர்க்க ஒற்றுமையை ஏற்றுக் கொண்டார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை மட்டுமல்ல, விவசாயிகள் உட்பட அனைத்து உழைக்கும் மக்களுடைய ஒற்றுமையும் உடனடியாக அவசியம். போராட்டங்களை மேலும் வலுப்படுத்துவோம். ஒன்றுபட்ட போராட்டங்கள் மட்டுமே இந்த அரசை தூக்கி எறியும். நம் மீது எதிர்தாக்குதல்கள் தொடர்ந்து நடக்கலாம். அனைத்து விவசாயிகள் சங்கங்களும், அனைத்து தொழிலாளர் சங்கங்களும் ஒன்றிணைந்து இருக்கின்றன. ஒன்றிணைந்து போராடினால் வெற்றி உறுதி என்று கூறுகிறோம். போராடி பெற்ற தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுப்புகளாக மாற்றியிருப்பதை அனுமதிக்க மாட்டோம்.. போராடி பெற்ற சட்டங்களை பாதுகாப்போம். ஒன்றுபட்டு போராடி வெற்றியை தேடி தருவோம் என்று பலத்த முழக்கங்களுடையே ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் தனது உரையை நிகழ்த்தினார்

இக்கூட்டத்தில் ஏஐடியுசி தேசிய செயலாளர்கள் சுகுமார் டாம்லே, வஹிதா நிஜாம், தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், செயலாளர்கள் கே. இரவி, ஆ.பாஸ்கர், வி.ஆதிமூலம், துணைத்தலைவர்கள் ஏ.எஸ்.கண்ணன், எம். சங்கையா, எம்.ஜஹாங்கீர், வேலூர் தேவதாஸ், கட்டிட தொழிலாளர்சங்க மாநில செயலாளர் ஆர்.துரைசாமி, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் மு. சம்பத், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் இரவிச்சந்திரன், ஆவடி விஜய சீலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# என்டியுஐ மாநாட்டில் இரா.குசேலர் உரை

இந்தியாவில் 450 மில்லியன் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். இவர்கள் அமைப்பு சாராத் தொழிலாளர்கள், அமைப்பில் இருந்து வேலை செய்யும் அமைப்பு சாராத் தொழிலாளர்கள், அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் என மூன்று பிரிவினர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்குப் பிரச்சினைகள் அதிகம் பிரிந்து இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

சாதி மதம் மொழி இனம் இவையெல்லாம் இயல்பாக உள்ளவை எனலாம். இவை உடைக்க முடியாத சுவர்கள் அல்ல. நிச்சயம் உடைக்க முடியும். கட்சி, சங்கம் இவற்றையெல்லாம் தாண்டி தொழிலாளர்கள் ஒன்றுபட முடியும். ஒரே குறிக்கோளோடு செயல்பட முடியும்.

ஒன்று சேர்வதற்குத் தொழிலாளர்களாகிய நீங்கள் தயாராக இருக்கின்றீர்கள். ஆனால், மேடையில் இருக்கின்ற தலைவர்களான நாங்கள் தயாராக இல்லை என்பதுதான் உண்மை. மாற்ற வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

ஏஐடியுசி 1920 ஆம் ஆண்டு உருவானது. 1914 முதல் 1919 வரை நடைபெற்ற முதல் உலக யுத்தத்தில் கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். இனியொரு யுத்தம் வேண்டாம் என்று சிந்தனை, போர் இல்லாத உலகம் வேண்டுமென்ற உணர்வு மேலோங்கியது. அதன் தொடர்ச்சியாக உலக அமைதிக்காக 'லீக் ஆப் நேஷன்' என்று சொல்லக்கூடிய பன்னாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டது. தொழிலாளி, முதலாளிகள் பிரச்சினைகூடத் தீர்க்கப்பட வேண்டும். அமைதி காக்கப்பட வேண்டும் என்பதற்காக ஐஎல்ஓ என்று சொல்லக்கூடிய உலகத் தொழிலாளர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அது இன்றும் இருக்கின்றது.

போரைத் தடுக்க முடியாத நிலையில் இரண்டாவது உலக யுத்தமும் நடைபெற்று அதன் தொடர்ச்சியாக ஐநா சபை உருவாக்கப்பட்டது. ஆனாலும், முதல் உலக யுத்தத்தில் உருவாக்கப்பட்ட ஐஎல்ஓ தொழில் அமைதிக்கான பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பல்வேறு தொழிற்சங்கங்களில் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்களை ஒருங்கிணைத்து ஐஎல்ஓவுக்குப் பிரதிநிதி அனுப்ப வேண்டும் என்று அவசியம் அன்றைக்கு இருந்த அரசுக்கு உருவானது. பம்பாயில் அமைப்பு நிலை மாநாடு நடைபெற்று ஏஐடியூசி இன் பிரதிநிதியாக தோழர் என்.எம்.ஜோஷி அனுப்பப்பட்டார்.

விடுதலைப் போராட்டத்திற்கு அளப்பரிய தியாகங்களை மத்தியத் தொழிற்சங்கமான ஏஐடியூசி செய்துள்ளது.

காங்கிரஸ் 1947 மே மாதத்தில் ஐஎன்டியூசி உருவாக்கியது. நாங்கள் தேசியவாதிகள்; அவர்கள் சர்வதேசவாதிகள் என்று சொன்னார்கள். காங்கிரசும் கம்யூனிஸ்ட்டும் சங்கம் வைத்திருக்கிறார்கள். எனவே, நாங்கள் சோசலிஸ்ட்கள் எஸ்எம்எஸ் என்ற சங்கத்தை உருவாக்கிறோம் என்றார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் ஒன்றாக இருந்து தொழிற்சங்க ஒற்றுமை மேலும் மேலும் உடைந்தது 1964 இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்தது. ஏஐடியுசியிலிருந்து பிரிந்து 1970ல் சிஐடியுவை உருவாக்கினார்கள். அதன் பிரதிநிதிகள் இந்த மேடையில் இருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம் என்பது தெரியும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதுதான் ஜனநாயக ரீதியாக வெற்றியைத் தேடித் தரும். 1990 கம்யூனிஸ்ட் நாடுகள் வீழ்ச்சியடைந்த பிறகு உலகமயம், தாராளமயம், தனியார்மயம் என்ற உலகளாவியக் கொள்கைகள் புகுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தொழிலாளர்கள், குறிப்பாக ஆட்டோமொபைல் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடி 20% ஊதிய உயர்வு பெற்றுள்ளார்கள். சம வேலைக்குச் சம ஊதியம் என்பது அங்கு நடைமுறைப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஒன்றுபட்டு ஒரே சங்கமாக இணைந்தால் வெற்றி நிச்சயம். ஜனநாயகம்தான் இன்றைக்குத் தேவை. முதலாளிகள் ஒன்றுபட்டு நிரந்தரத் தொழிலாளர்கள் மீது தாக்குதலைத் தொடங்கியுள்ளார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களும், அவுட்சோர்சிங் தொழிலாளர்களும் பெருகிவிட்டார்கள். இதனை மாற்றுவதற்கு நாம் உடனடியாகப் போராட்டங்களை நடத்த வேண்டும். சடங்குக்கான போராட்டமாக இருக்கக் கூடாது. வெற்றி பெறும் வரை நம்முடைய போராட்டங்கள் தொடர வேண்டும்.

மூன்று கோரிக்கைகளை மட்டும் முன்னிறுத்தலாம் என்பது என் கருத்து. தொழிலாளிகளை நிரந்தரமாக்க வேண்டும். சம்பள வேறுபாடுகள் களையப்பட வேண்டும். குறைந்து பெற்ற சம்பளம் மாதம் ரூபாய் 30,000 எனக் கோரிக்கை வைக்க வேண்டும்.

விவசாயிகள் போராடி அவர்கள் வெற்றி பெற்றது போல மோடி கொண்டு வந்துள்ள தொழிலாளர் சட்டங்கள் நான்கு தொகுப்புகளை மாற்ற வேண்டும். போராடிப் பெற்ற தொழிலாளர் சட்டங்கள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும். இது அவசியம். எனவேதான் நாங்கள் ஏஐடியுசியுடன் இணைந்துள்ளோம். எல்லாத் தொழிற்சங்க அமைப்புகளும் ஏஐடியூசியுடன் இணைந்து ஒன்று பட்டுப் போராட வேண்டும்" இவ்வாறு குசேலர் பேசினார்.

## ஏஐடியுசி பொதுச்செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன் உரை

இந்தியாவினுடைய முதல் தொழிற்சங்கம் சென்னையில்தான் தொடங்கப்பட்டது. மெட்ராஸ் லேபர் யூனியன் போராடும் போது தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் சிறைத் தண்டனை கொடுப்பது, நாடு கடத்துவது எனப் பல தண்டனைகளைக் கொடுத்தார்கள். இந்த அரங்கத்தினுடைய பெயரைத் தாங்கியுள்ள சர் பிட்டி தியாகராயரின் நீதிக்கட்சி அரசு தொழிலாளர் தலைவர்களுக்குத் தண்டனை அளிப்பதை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னது. அவ்வாறு சொல்லுவதற்குத் தொழிலாளர்களுடைய போராட்டங்கள்தான் காரணமாக இருந்தன.

சமீபத்தில் இந்தியா முழுவதும் நடைபெற்ற வேலை நிறுத்தத்தினை வெற்றி பெறச் செய்ய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தோம். ஆட்சியின் முதலமைச்சராக அல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகச் சந்தித்தோம். போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு நிறுத்தப்பட்டால் பேசும் பொருளாக வேலை நிறுத்தமும் நமது எதிர்ப்புணர்ச்சியும் வெளிப்படும் என்று குசேலர் வலியுறுத்தினார்.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்தால் கூட்டுப்பேர சக்தி அதிகரிக்கும். போராடும் சக்தியும் அதிகரிக்கும்.

1947க்கு முன்பு ஒரே சக்தியாக இருந்த காரணத்தினால்தான் நாம் போராடி நமது உரிமைகளை, சட்டங்களைப் பெற முடிந்தது. ஒரே என்ற வார்த்தை பல இடங்களில் இன்றைக்கு ஒன்றிய பிஜேபியால் ஒலிக்கப்படுகிறது. ஒரே தொழிற்சங்கம் என்பதை இன்றைக்கு வெளியில் கொண்டு செல்வோம். இதற்கான முயற்சியை என்டியுஐ எடுத்திருப்பதை வரவேற்கிறோம்.

விடுதலைக்கு முன்பு ஏஐடியுசி பொதுச்செயலாளர் என்.எம்.ஜோசி பிளவுகளால் நாம் வெற்றி பெற முடியாது. ஒன்றுபட்ட போராட்டங்களே வெற்றி பெறும் என்பதையும் எடுத்துச் சொன்னார்.' நாம் ஒன்றிணைவதற்கு நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற இச்சங்கத்தின் தலைவர்களுக்கும் தோழர்களுக்கும் ஏஐடியூசி பிரதிநிதி என்ற முறையில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தோழமைக் கட்சித் தலைவர்கள், சான்றோர்கள், தோழர்கள் வாழ்த்து















1 ஆம் பக்க தொடர்ச்சி

கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு மற்றும் இரா.நல்லகண்ணு நூற்றாண்டு பிறந்தநாள் விழா சிறப்பு இதழ் வெளியிடப்பட்டது. இதனை கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி எடுத்துக்கொடுக்க மாநில செயற்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி வெளியிட தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.எச். வெங்கடாசலம் பெற்றுக்கொண்டார்.

## முதல்வர் உரை

பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது, ‘‘ஒவ்வொரு ஆண்டும் அய்யா நல்லகண்ணு பிறந்தநாளில் இதே இடத்தில் நாம் கூடி வாழ்த்துவது உண்டு.

அந்த அடிப்படையில், இன்றைக்கு கூடியிருக்கின்றோம் என்று சொன்னால், இன்று அவருக்கு நூற்றாண்டு பிறந்தநாள் விழா. முத்தரசன் சொன்னதுபோல், பொதுவுடைமை இயக்கத்திற்கும் நூற்றாண்டு, நல்லகண்ணுவுக்கும் நூற்றாண்டு. நம்மைப் பொறுத்தவரையில் இப்படி ஒரு பொருத்தம் யாருக்கும் கிடைத்ததில்லை

அப்படிப்பட்ட சிறப்பான வாய்ப்பையும், அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நல்லகண்ணு அவர்களை உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே சொல்ல வேண்டும் என்றால், நான் வாழ்த்த வரவில்லை. வாழ்த்தைப் பெற வந்திருக்கிறேன். இது தான் உண்மை.

எல்லோருக்கும் எல்லாம் – சமூக நீதி, சமத்துவத்தைநிலைநாட்டிட வேண்டும்என்ற உணர்வோடு, இன்றைக்கு தமிழகத்தில் உங்கள் அன்போடும், ஆதரவோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கு எல்லாம், உறுதுணையாக பக்கபலமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர் நம்முடைய அய்யாநல்லகண்ணுஅமைதியாக, அடக்கமாக அதே நேரத்தில் ஆழமாக எதையும்சிந்தித்து வெளிப்படுத்தக்கூடியவர். அப்படிப்பட்டவரை உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன். தொடர்ந்து நீங்கள் இருந்து எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டிட வேண்டும், துணை நிற்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நமது முத்தரசன் பேசுகின்ற போது சொன்னார்; நான் செயற்குழுவில் பேசியதை கோடிட்டுக்காட்டி, 200 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று நான் சொன்னதாக எடுத்துச் சொன்னார். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை என்ன என்று கேட்டால், 200 அல்ல, 200யும் தாண்டி வெற்றி பெறும் வகையில் நம்முடைய கூட்டணி அமைந்திருக்கிறது.

7 ஆண்டு காலமாக இந்த கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்தக் கூட்டணியைப் பொறுத்தவரைக்கும், கொள்கை கூட்டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு, உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அய்யா நல்லக்கண்ணு வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டு, வாழ்க ! வாழ்க ! வாழ்க !என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.’’ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். பின்னர் தோழமைக் கட்சித் தலைவர்களும் சான்றோர்களும் மூத்த தோழர்களும் வாழ்த்திப் பேசினார்.

நிறைவாக தோழர் இரா.நல்லகண்ணு ஏற்புரையாற்றினார்.

## திருவைகுண்டம் அரசு மருத்துவமனை கட்டிடத்திற்கு தோழர் இரா.நல்லகண்ணு பெயர்: முதலமைச்சர் உத்தரவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி

விழா பேருரை முடிந்ததும் முதலமைச்சரிடம் இரா. நல்லகண்ணு ஒரு கோரிக்கை மனுவை நேரில் கொடுத்தார். அந்தக் கோரிக்கை மனுவில் திரு வைகுண்டம் அரசு பொது மருத்துவமனையை உயர்ரக மருத்துவமனையாக மாற்றித் தர ஆவன செய்யுமாறு கோரியிருந்தார்.

இதனையடுத்து “திரு வைகுண்டம் அரசு பொது மருத்துவமனையில் நவீன மருத்துவக் கருவிகள் அமைப்பதுடன், மருத்துவமனையின் புதிய கட்டிடத்துக்கு தோழர் இரா.நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டிடம் என்று பெயரிடப்படும்” என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

சமூகநீதி, ஜனநாயக உரிமைகள், தமிழ்மொழி வளர்ச்சி போன்ற தளங்களில் பணியாற்றிய முன்னோடிகளுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பு செய்து, அவர்களது பெருமைகளை எடுத்துக் கூறுவதுடன் எதிர்காலத் தலைமுறைக்கு நினைவூட்டும் வகையில்



பொது இடங்களுக்குப் பெயர் சூட்டி வருவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. திரு வைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு இரா. நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டிடம் என்று பெயர் சூட்டியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

## நூற்றாண்டு காண்பது மட்டற்ற மகிழ்ச்சி

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி..

“இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்தமான தமிழ்நாட்டில் அப்பழுக்கற்ற பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான தமிழ்நாடு அரசால் “தகைசால் தமிழர்” என்ற பெருமைக்குரிய தாங்கள் நூற்றாண்டு காண்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். வெளியூர் சுற்றுப்பயணத்தில் இருப்பதால் நேரில் வந்து தங்களை வாழ்த்த முடியாத நிலைக்கு வருந்துகிறேன்.

பொதுவுடைமை இயக்கத்தில் தாங்கள் கடந்து வந்தது மலர் பரப்பப்பட்ட பாதையல்ல கல்லும் முள்ளும் கனலும் நிறைந்த கரடுமுரடான காட்டாற்றுப் பாதை. தலைமறைவான வாழ்க்கை சித்திரவதைக்கு ஆளான சிறை வாழ்க்கை என்று விரிந்து கொண்டே போகும்! கட்சிகளைக் கடந்து தமிழ்நாட்டில் வாழும் மூத்த தலைவரான தாங்கள் நல்ல உடல் நலத்துடன், மேலும் நீண்ட காலம் வாழ்ந்து கட்சிக்கும் நாட்டுக்கும் வழி காட்ட வேண்டும் என்று உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்”

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# 10 லட்சம் உறுப்பினர்களுடன் ஏஐடியுசியுடன் இணைந்தது என்டியுஐ

## சென்னை இணைப்பு விழாவில் அமர்ஜித் கவுர் முழக்கம்!

**இந்திய தொழிற்சங்கத்தின் தாய் அமைப்பான அகில இந்திய தொழிற்சங்க பேராயம் (AITUC) உடன் 10 லட்சம் உறுப்பினர்களுடன் நாட்டின் பல்வேறு மாநிலங்களிங்களில் செயல்படும் 55 தொழிற்சங்கங்களை கொண்ட புதிய தொழிற்சங்க முன்முயற்சி எனும் New Trade union Initiative (NTUI) அமைப்பு இணையும் நிகழ்வு சென்னை, தி.நகர், பிட்டி தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்றது.**

முன்னதாக NTUI தேசிய மாநாடு 2024 டிசம்பர் 19,20,21 தேதிகளில் சென்னை உழைக்கும் மக்கள் மாமன்ற அரங்கில் நடைபெற்றது. இம்மாநாட்டின் முக்கியமான விவாதப்பொருளாக தொழிற்சங்க ஒற்றுமை குறித்தும், நாட்டின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைய வேண்டிய அவசியம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. ழிஜிஹிமி தனது சொந்த அனுபவங்களில் இருந்து ஏஐடியுசி யுடன் இணைவது என்று மாநாட்டில் கலந்து கொண்ட 78% பிரதிநிதிகளின் ஆதரவுடன் முடிவு செய்தது.

இம்முடிவை அறிவிக்கும் வகையில் அனைத்து தொழிற்சங்கங்கள் பங்கேற்ற NTUI பொதுக்கூட்டம் NTUI தலைவர் மிலிண்ட் ராணடே தலைமையில் நடைபெற்றது. தலைமை உரையில் வரலாற்று சிறப்பு மிக்க ஏஐடியுசியின் சிறப்புகளை எடுத்துரைத்து ஏஐடியுசியுடன் என்டியுஐ இணைய மேற்கொண்ட முடிவை மிகுந்த உற்சாகத்துடன் தெரிவித்தார். பங்கேற்றவர்கள் உற்சாகமாக கைதட்டி வரவேற்றனர். தொடர்ந்து ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர், என்டியுஐ யில் இணைக்கப்பட்ட உழைக்கும் மக்கள் மாமன்ற தலைவர் இரா.குசேலர், பெண் தொழிலாளர் சங்க தலைவர் சுஜாதா மோடி, தமிழ்மாநில கட்டிட தொழிலாளர் சங்க தலைவர் சுப்பு உள்ளிட்டோரும் மத்திய தொழிற்சங்கங்களின் சார்பில் தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன், சிஐடியு மாநில பொதுச்செயலாளர் ஜி.சுகுமாறன், தொமுச செயலாளர் என்.தனசேகரன் எச்எம்எஸ் மாநில தலைவர் மு. சுப்பிரமணியம், ஐஎன்டியுசி மாநில தலைவர் டி.வி.சேவியர், ஐஎஃப்டியு செயலாளர் டி சீனிவாஸ் ஆகியோர் மோடி அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை கண்டித்தும், ஏஐடியுசி உடன் NTUI இணைவதை வரவேற்று மற்றும், வாழ்த்துக்கள் தெரிவித்தும் பேசினார்கள். NTUI பொது செயலாளர் கௌதம் மோடி நன்றி கூறி நிறைவுரையாற்றினார




### அமர்ஜித் கவுர் உரை:

அனைத்து தொழிற்சங்க தலைவர்களும் மேடையில் வீற்றிருக்கின்றோம். தொழிற்ச்சங்க ஒற்றுமைக்கு தமிழ்நாடு முன்னோடியாகவே என்றைக்கும் உள்ளது. தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் அல்ல. ஆனால் தொழிற்சங்கத்திற்கு அரசியல் உண்டு. உழைக்கும் மக்களுக்கான அரசியலை நாம் முழங்கிக் கொண்டே வருகிறோம். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற முழக்கம் முதலாளித்துவத்தை எதிர்த்த முழக்கமாக உலகம் முழுவதும் ஒலிக்கிறது.

இந்தியாவில் வேலை நேரத்திற்கான முழக்கமாக, வேலை பாதுகாப்பிற்காக, உரிமைகளுக்காக எண்ணற்ற போராட்டங்கள் நடைபெற்றன. இவை அரசியல் விவாதமாக மாறின. இந்திய முதலாளித்துவத்திற்கு முன் பிறந்த இந்திய தொழிலாளி வர்க்கம் விவசாய வர்க்கத்தோடு இணைந்து போராடியது. நில உரிமைக்காகவும் போராடியது.

1900 க்கு பிறகு தொழிலாளி வர்க்க இயக்கம் இந்தியா முழுவதும் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத துறைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களை ஒருங்கிணைத்தது. ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கம் வேலை நிறுத்தங்களை மேற்கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து போராடியது. இந்திய விடுதலைக்காக போராடியது.

இந்த பின்னணியில் திருப்பு முனையாக அரசியல் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தை தயார் செய்து ஒன்றுபட்டு போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் வஉசி, சிவா கைது செய்யப்பட்டார்கள். அதுபோல பம்பாயில் திலகர் கைது செய்யப்பட்டார். திலகரின் ஆறாண்டுகள் கடும் காவல் சிறை தண்டனையை கண்டித்து, இந்திய தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தை

தொடர்ச்சி 22 ஆம் பக்கம்



## ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கையின் அவசிய தேவை குறித்த

# இடதுசாரி கட்சிகளின் கூட்டுக் கூட்டம்

## அஜாய் பவனில் நடைபெற்றது

**இடதுசாரி கட்சிகளின் கூட்டுக் கூட்டம், புது டெல்லியில், 22.12.2024 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் நடைபெற்றது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் அரசியல் தலைமைக் குழு ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) பொதுச் செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா, புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மனோஜ் பட்டாச்சார்யா, சிபிஐ தேசியச் செயலாளர்கள் கிரிஷ் சந்திர சர்மா, ஆனி ராஜா, சிபிஐ(எம்) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பிவி ராகவுலு, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் செயலாளர் தர்மேந்திர வர்மா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

நாட்டின், மக்களின் முன்புள்ள முக்கியமான பல பிரச்சினைகளில் இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கையின் அவசியத் தேவை குறித்து இந்தக் கூட்டம் விவாதித்தது.



Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.